விலை ரூ. 3-00 PMG's LICENCE No. WPP-136

# ஈழ சுதந்திரன்
# ELASUTHANTIRAN



திருவள்ளுவராண்டு
௨௦௩௩
ஐப்பசி-கார்த்திகை
நவம்பர்-2002
புத்தகம்: 15 இதழ்: 11

**நார்வே தூதர்வரவேற்க கொழும்பில் பாலசிங்கம் மனைவியுடன் வந்திறங்கும் சுமுக நிலை தெற்கில்**
**சிங்கள ராணுவமும் புலிகளும் மோதிக்கொண்டு பொதுமக்களைப் பழிவாங்கும்நிலை வடக்கில்**
**எல்லாக் கட்சிகளும் எங்கும் இயங்கும் நிலை தெற்கில்**
**புலிகளைத் தவிர்த்து இயங்க முடியாத நிலை வடகிழக்கில்**

## அரசும் புலிகளும் ஈழத்தில்
# அத்துமீறல்

## ஈழத்தமிழர் பாதுகாப்புக் கழகம் அறிக்கை

**சமாதான நல்லிணக்கம் யாருக்கு, தமிழ்ப் பொது மக்களுக்கா? புலிகளுக்கும் சிறீலங்கா அரசுக்கும் மட்டுமா? பொது மக்களுக்குத்தான் எனில் இரு தரப்பும் ஈழத்தில் அத்துமீறல்களை உடனே நிறுத்த வேண்டும். சனநாயக சக்திகளை இயங்க விட வேண்டும். தாய்லாந்துச் சமாதானப் பேச்சு வார்த்தையிலும் பங்கு பெறச் செய்ய வேண்டும். சனநாயகம் இல்லாத சமாதானம் எப்படியிருக்கும் என்பதற்கு இப்போது ஈழத்தில் நடக்கும் சம்பவங்களே சான்று.**

**இவ்வாறு ஈழத்தமிழர் பாதுகாப்புக் கழகம் விடுத்துள்ள அறிக்கையில் கூறியுள்ளது. அவ்வறிக்கை வருமாறு:**

சனநாயக சக்திகள் தமிழர்கள் மத்தியில் தழைத்து விடாமல் இருப்பதற்கு எதை எதை எல்லாம் செய்ய வேண்டுமோ அதை அதையெல்லாம் சிறீலங்கா அரசாங்கமும் புலிகளும்திட்டுமிட்டு நடத்திக் கொண்டிருக்கிறார்கள்.

ஏன்?

சனநாயகசக்திகள் தலையெடுத்து விட்டால், சனநாயக நாடுகளின் ஆதரவு தமிழர் பால் திரண்டு விடும்; ஒரு தரப்பினர் இல்லாவிட்டால் இன்னொரு தரப்பினர் தமிழ் மக்களின் கோரிக்கைகளைத் தாங்கி நிற்பார்கள்; கொள்கைகளை வலியுறுத்தி வருவார்கள்.

தாங்கள் அறிவிலித்தனமாக, சிங்களப் பேரினவாத நோக்கோடு, 1983ல் நடத்திய தமிழ் இனப் படுகொலை காரணமாக உலகமெல்லாம் பரவிவிட்ட ஈழத் தமிழ் மக்கள் தாயகத்தில் சனநாயக ரீதியில் நடைபெறும் தமிழின நலப் போராட்டம் என்கிறபோது தாங்கள் வாழும் நாடுகளில், குறிப்பாக மேலை நாடுகளில் அதைத் தாராளமாக முன்னெடுத்துச் செல்வார்கள். வன்முறை தவிர்த்த மென்முறைப் போராட்டம் அதுவென்பதால் பன்னாட்டு மனிதவுரிமைஅமைப்புகளைச் சேர்ந்தவர்களும் வெளிநாட்டுத் தமிழர்கள் நடத்தும் ஆர்ப்பாட்டங்களில் தாராளமாகக் கலந்து கொள்வார்கள் என்பதுடன், அந்தந்த நாடுகளைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள், வழக்கறிஞர்கள், நீதியரசர்கள் முதலானோரும் அவற்றில்கலந்து கொண்டு ஆதரவாகக் குரல் எழுப்புவார்கள். அது சர்வதேச அரங்கில் தங்களுக்குத் தர்மசங்கடத்தை ஏற்படுத்தும் என்பதாலேயே சிறீலங்கா அரசு தமிழ் மக்கள் மத்தியில் சனநாயக சக்திகள் செயல்படுவதைவெறுக்கிறார்கள்.

தாயகத்தில் புலிகளின் வன்முறைக் கரங்கள் மேலோங்கி, தமிழீழத்தில் சனநாயக சக்திகள் இயங்க முடியாது என்ற நிலையிலேயே வெளிநாட்டுத் தமிழர்களின் ஆதரவுக் கிளர்ச்சிகள், சிறீலங்கா அரசுக்குச் சமாதானப் பேச்சுவார்த்தைக்குப் போய் ஆக வேண்டிய நிர்ப்பந்தத்தை உண்டாக்கியுள்ளதென்றால், தாயகத்திலும் சனநாயக சக்திகளின் கரங்கள் தமிழ் மக்களின் மத்தியில் மேலோங்கி நிற்குமானால் சர்வதேச அழுத்தம் இன்னும் பன்மடங்கு சிறீலங்கா அரசை இறங்கி வரச் செய்திருக்கும் என்பதில் ஐயமில்லை.

ஏனெனில், தாயகத்தில் வன்முறை வழி நடக்கும் போராட்டங்களுக்கு வெளிநாட்டுத் தமிழர்கள், தாங்கள் வாழும் நாடுகளில் ஆதரவு தேடும் கிளர்ச்சிகளில் ஈடுபடுவதைப் பார்க்கிலும் பன்மடங்கு அதிகமாக சனநாயக ரீதியான போராட்டத்திற்கு அவர்களால் ஆதரவு தேட முடியும்.

இதை உணர்ந்துதான் சிறீலங்கா ஆட்சியினர், தமிழ் மக்களிடையே உள்ள சனநாயக சக்திகளைவிட வன்முறைச் சக்திகளை ஊக்குவிக்க விரும்புகின்றனர்.

ஏனெனில், வன்முறைச் சக்திகளைக் காட்டித் தமிழர் போராட்டத்தையே பயங்கரவாதம் என்று முத்திரை குத்தி விடுவது எளிது என்பதாலும், சர்வதேச அனுதாபம் தமிழர் கோரிக்கையின் பால் திரளவிடாமல் செய்வது சுலபம் என்பதனாலும் தமிழ் மக்கள் மத்தியில் சனநாயக சக்திகள் பலம் பெறுவதை அவர்கள் வெறுக்கின்றனர் என்றுகூடச் சொல்லலாம்.

முந்திய சந்திரிகா குமாரதுங்கவின் மக்கள் கூட்டணி ஆட்சியின் நடவடிக்கையே இதற்குச் சிறந்த உதாரணமாகும்.

ஆம்; "புலிகளுடன் நேரடிப் பேச்சுவார்த்தை நடத்தி இனப் பிரச்சினையை சமாதானமாகத் தீர்க்கப் போகிறேன். தமிழ் மக்களின் பிரதிநிதிகள் புலிகளே" என்று கூறிக் கொண்டுதான் சந்திரிகா ஆட்சிக்கு வந்தார், அவருடைய சமாதான முழக்கத்தை நம்பித்தான் தமிழ், சிங்கள வெகுமக்கள் ஐக்கிய தேசியக் கட்சியைத் தோற்கடித்து ஆட்சியை மக்கள் முன்னணியிடம் நல்கினர்.

ஆனால், "பேச்சு வார்த்தை வெற்றி பெற்றாலும்தோல்வியுற்றாலும் தமிழ் மக்களுடைய இனப்பிரச்சினைக்கு முற்றுப்புள்ளிவைப்பேன்" எனமுதலில் முழங்கிய சந்திரிகா, பேச்சுவார்த்தை தோல்வி என்றதும், புலிகள் மீது பழியைப் போட்டதுமில்லாமல், தமிழ் மக்களுடைய கோரிக்கையே பயங்கரவாதம் என்பதுபோல் சித்தரித்து, உலக ஆதரவைப்பெற முயன்றார் என்பது கண்கூடாகும்.

அத்துடன் "புலிகளை அழித்து விட்டால் இனப்பிரச்சினை இல்லாமல் போய் விடும்" என்று கூறி, தமிழ் மக்களுக்கு எதிரான போரை முடுக்கி விட்டார் என்பதும், மறுக்க முடியாத உண்மைகளாகும்.

சிங்களப் பேரினவாதத்தின் இந்தக் குணத்தைப் புரிந்து கொண்டதால் தான் 1987ல் இந்தியா முன்னின்று நடத்திய சமாதான முயற்சியில் ஆயுதப்போராளிகளுடன் தமிழ் மக்களிடையே உள்ள சனநாயக சக்திகளும் இடம் பெற வேண்டும் என்று வலியுறுத்தியது என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். "புலிகள் மட்டுமே" என்ற அந்த ஒரு அம்சத்தை இந்தியா ஏற்க மறுத்ததாலேயே புலிகள் அதைக் குழப்பி விட்டனர் என்பதையும் எண்ணிப் பார்க்க வேண்டும்.

(2-ம் பக்கம் பார்க்க)

## மிலிந்தவைக் கண்டிக்கிறார் மந்திரி மகேஸ்வரன்

திருகோணமலையில் புலிகளால் கைது செய்யப்பட்டுத் தடுத்து வைக்கப்பட்டுள்ள 7 படையினரின் விடுதலைக்காக ஓடோடிச்சென்றுள்ள அமைச்சர் மிலிந்த மொரகொட களுத்துறையில் ஜீவ மரணப் போராட்டம் நடாத்தும் தமிழ்க் கைதிகளான உங்களைப் பற்றி ஆர்வம்காட்டாதது எனக்கு வேதனை அளிக்கிறது என்று அமைச்சர் தி. மகேஸ்வரன் கூறியுள்ளார். அமைச்சர் ராஜித சேனாரத்னவுடன் களுத்துறைக்கு விஜயம் செய்து சிறைக்கைதிகளைப் பார்வையிட்டபோதே அமைச்சர் மகேஸ்வரன் இதனைத் தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் குறிப்பிடுகையில், அரசியல்வாதிகள் என்ற வகையிலே, அமைச்சர்கள் என்ற வகையிலோ நான் இங்கு வரவில்லை. உங்களுடைய உண்மையான நிலையை அறிந்து உங்களது நிலைப்பாட்டை உலகுக்கு அறிவிப்பதற்காகவே மனிதநேய அடிப்படையிலேயே வந்துள்ளேன்.

உங்களுடைய கோரிக்கையைச் செய்தித்தாள் மூலம் அறிந்து அமைச்சர் மிலிந்த மொரகொடவுடன் பேசினேன் உங்களைப் பார்க்க என்னோடு வரும்படி அழைத்தேன் ஆனால், அவர் அதில் அக்கறை காட்டவில்லை எனவும் குறிப்பிட்டார்.

எமது விடுதலைக்காக மனிதாபிமான அடிப்படையில் ஈ.பி.டி., புளொட் போன்ற அமைப்புகளும் உதவ முன்வர வேண்டும்.' இவ்வாறு களுத்துறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள கைதிகள் 8-10-2002 அன்று வெளியிட்டுள்ள ஒரு அறிக்கையில் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

**ஈழத் தேசிய [illegible] உரிமைக்குரல்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''குறைக்கருமம் விட்டுரைப்பின் கொள்ள உலவா
அறக்கருமம் ஆராய்ந்து செய்க- நிறப்பிடைக்கோரி
நெஞ்சேமாப்பு இல்லாதான் வாழ்க்கை நிரயத்துத்
துஞ்சாத் துயரம் தரும்''

-அறநெறிச்சாரம்

(குறைவிட்டுப் போன செயல்களை ஒவ்வொருவரும் செய்து முடிக்க வேண்டுமென்பதை விரித்துச் சொல்லப் போனால் அவை அளவில் அடங்கா. இந்த மனிதப் பிறப்பில் தன் நெஞ்சறியத் தான் சொன்ன சொல்லைக் காப்பாற்ற முடியாதவனுடைய வாழ்க்கையானது தூக்கம் வராத நரகத் துன்பத்தைத் தான் கொடுக்கும். ஆகவே அறச் செயல்களைக் குறை வைக்காமல் ஆற்ற முன்வர வேண்டும் )

# தெளிவு

## சந்திரிகாமீது பழி போட்டு ரணில் தப்பிக்க இடமளிக்கலாகாது

ஒன்றின் மீது ஒன்று பழி போட்டு இனப் பிரச்சினைக்கு ஒரு தீர்வு ஏற்படாமலே இழுத்தடித்த சிங்கள இனவாதப் பெருங்கட்சிகளான ஐக்கிய தேசியக் கட்சியும், சிறீலங்கா சுதந்திரக் கட்சியும் ஒருங்கே ஆட்சி பீடத்தில் அமர்ந்திருக்கும் நல்ல வாய்ப்பு இப்போதைய சமாதானப் பேச்சுவார்த்தைக்குக் கிடைத்திருக்கிறது.

ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதமரும், சிறீலங்கா சுதந்திரக் கட்சியின் குடியரசுத் தலைவரும் கூடி முடிவெடுத்து சமாதானத் தீர்வை நாட்டுக்குத் தர வேண்டிய வரலாற்று நிர்ப்பந்தம் தற்செயலாக உருவாகியுள்ளது.

இதைச் சமாதானத்தை முன்னெடுக்கும் சகலரும் உணர்ந்து தக்கபடி பயன்படுத்திக்கொள்ள வேண்டும்.

ஏனெனில், மோதல் சூழ்நிலை முற்றி அரசுக்கும் போராளிகளுக்குமிடையே இனி இணக்கப்பாடு ஏற்படுவதற்கான முகாந்திரமே இல்லை என்று கொடிய யுத்தம் நடைபெற்றுக் கொண்டிருந்த சமயத்தில்தான் ''போராளிகளுடன் நேரடியாகப் பேச்சுவார்த்தை நடத்தி சமாதானத்தீர்வைச் சாத்தியமாக்குவேன்'' என்று கூறிக் கொண்டு தேர்தலில் பிரவேசித்தார் சந்திரிகா.

எனவேதான் போர் முடிவடையாதா? என்று புழுங்கிக் கொண்டிருந்த சிங்கள-தமிழ்ப் பொதுமக்கள் அப்போது ஆண்டு கொண்டிருந்த ஐக்கிய தேசியக் கட்சி அரசைத் தோற்கடித்து சந்திரிகா கட்சியை அரசு கட்டிலில் ஏற்றி வைத்தனர்.

சந்திரிகாவும் ''புலிகளுடன் நடத்தும் பேச்சுவார்த்தை வெற்றி பெற்றாலும் தோல்வியுற்றாலும் அதைப் பற்றிக் கவலைப்படாமல், தமிழர்களுக்கான உரிமைகளை வழங்கி, இனப் பிரச்சினைக்கு முற்றுப்புள்ளி வைப்பேன்'' என்று சூளுரைத்தார். சூளுரைத்தபடி நடந்து கொண்டிருப்பாரானால், சந்திரிகாவின் முதலாவது ஆட்சி காலத்திலேயே இனப் பிரச்சினை முற்றுப் பெற்றிருக்கும்.

ஆனால், அவரோ புலிகள் பேச்சுவார்த்தையை முறித்துக் கொண்டதாகச் சொல்லி, தீர்வுத்திட்டமொன்றை நாடாளுமன்றத்தின் முன் வைத்து, ஐக்கிய தேசியக் கட்சி ஒத்துழைக்கவில்லை என்றுகூறி முதலாவது ஆட்சிக்காலத்தை வீணே கழித்தார்.

இருந்தும் அடுத்த தேர்தலிலும் மக்கள் அவருக்கே மேலும் ஒரு வாய்ப்பைக் கொடுத்தனர். ஆனால் முதல் தேர்தலோடு ஒப்பிட வாக்குபலம் குறைந்தது.

அப்போதாவது தனது வாக்குறுதியை நிறைவேற்றினாரா என்றால் அதுவுமில்லை. மாறாக, போரின் மூலம் சமாதானத்தை எட்டப் போவதாகக் கூறிப் போரை முன்னிலும் கடுமையாக்கினார். புலிகளிடமிருந்து யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றி விட்டதாகக் காட்டி, ''இறுதி வெற்றி இதோ அதோ'' என்று சிங்கள மக்களை ஏமாற்றினார். தமிழ் மக்களையோ சொல்லொணாத் துயர்களுக்கு ஆளாக்கினார்.

இதனிடையே நாடாளுமன்றத் தேர்தல் வர, சந்திரிகாவே குடியரசுத் தலைவராக இருக்கும் நிலையில் ரணில் பிரதமராகும் வண்ணம் ஐக்கிய தேசியக்கட்சிக்கு வெற்றியை அளித்து விட்டனர் மக்கள்.

எந்த அஸ்திரத்தைப் பயன்படுத்தி சந்திரிகா வென்றாரோ, அதே அஸ்திரத்தைப் பயன்படுத்தியே ரணிலும் வென்றுள்ளார்.

ஆக, அறிந்தோ அறியாமலோ இருவருமே பேச்சுவார்த்தை மூலம் சமாதானத் தீர்வைக் கொண்டு வரும் கடப்பாட்டுக்கு ஆளாக்கப்பட்டுள்ளனர். இருவருமே இப்போதைய அரசில் பொறுப்பிலும் இருக்கின்றனர்.

ஆகவே, ஒருவர் மீது ஒருவர் பழிபோட்டுத் தப்பிக்க முடியாத சரித்திரக் கட்டாயம் இப்போது இலங்கையில் எழுந்துள்ளது.

இந்தக் கட்டாய நிலையைப் பயன்படுத்திக் கொண்டு சமாதானத் தீர்வை நிரந்தரமாக்க வேண்டிய பொறுப்பு இன்று சர்வதேச சமுதாயத்திற்கு இருக்கிறது.

தமிழ்ச் சமுதாயத்திற்கும், குறிப்பாக புலிகளுக்கும் இதில் பொறுப்பிருக்கிறது என்பதைச் சொல்லத் தேவையில்லை.

ஆம்; சந்திரிகா மீது பழியைப் போட்டு ரணில் நழுவி விடுவதற்கோ, ரணில் மீது பழியைப்போட்டு, சந்திரிகா நழுவி விடுவதற்கோ இடமே அளிக்கக் கூடாது.

இலங்கையில் உள்ள சனநாயக சக்திகள் எல்லாம் திரண்டெழுந்து, உலகின் சனநாயக சக்திகளின் துணையுடன் முயன்றால், இலங்கை இனப் பிரச்சினைக்கு நிரந்தர சமாதானத் தீர்வைக் கொண்டுவர இதைவிடச் சரியான சந்தர்ப்பம் வேறில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

''எய்தற்கரிய இயைந்தக்கால் அந்நிலையே
[illegible]

-திருக்குறள்.

## பொது மக்களை முன்னே விட்டுப் பலிக்கடாவக்கும் புலிகள்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

புலிகளைப் பொறுத்த வரை தமிழ் மக்களின் நலன் என்பதைவிடத் தங்கள் நலத்தையும், தமிழீழ வெற்றி என்பதை விடத் தங்களின் வெற்றியையுமே பெரிதாகக் கருதுகின்றனர். அதற்குத் தமிழ் மக்கள் மத்தியில் சனநாயக சக்திகள் இயங்குவதை அவர்களும் விரும்பவில்லை என்பதே உண்மை.

அதற்காகவே த.வி. கூட்டணி போன்றதமிழ்க் கட்சிகளையெல்லாம் நெருக்குதலுக் காளாக்கி, தம்மை மட்டுமே தமிழ் மக்களின் ஏகப் பிரதிநிதிகள் என்று புலிகள் சொல்ல வைத்துள்ளனர்.

ஆனால், எந்தத் தமிழ்க் கட்சியையாவது தமிழீழத்தில் சுதந்திரமாக இயங்க அனுமதிக்கிறார்களா என்றால் அதுதான் இல்லை. புலிகளுடைய பாட்டுக்கேற்ப ஆட வேண்டும் என்பதைத் தவிர, இன்றைக்குத் தமிழ்க் கட்சிகளுக்கு வேறு வழியில்லை என்பதுதானே உண்மை?

இன்று ஈழத்தில் 'ஐக்கிய தேசியக் கட்சி அரசின் அத்துமீறல்கள் ஒரு புறமும், புலிகளின் அத்து மீறல்கள் ஒரு புறமும் போர் நிறுத்தத்தையும், புரிந்துணர்வு ஒப்பந்தத்தையும் கேள்விக் குறிகளாக்கி வருகின்றன என்பதும் உண்மையே.

### நித்தம் அதிகரித்துவரும் அத்து மீறல்கள்

வடக்கு-கிழக்கில், தமிழீழத் தாயகத்தில் அமைக்கப்பட்டுள்ள சிங்கள இராணுவ முகாம்கள் மூடப்பட வேண்டும் என்பதில் இரண்டாம் கருத்தில்லை. ஆனால், பொது மக்களுக்கு இடையூறாக, குடியிருப்புக்களினூடாக அமைந்திருக்கும் ராணுவ முகாம்களையெல்லாம் விட்டு விட்டு, தங்களுடைய சுயநலத்திற்காக ஒதுக்குப் புறமாக இருக்கும் ஒரு முகாமைப்புலிகள் பொது மக்களைக்கொண்டு தாக்க வைத்ததால்அப்பாவித்தமிழர்கள் 6 பேர் அநியாயமாக உயிரிழந்துள்ளனர்.

மேலும், புலிகளின் கட்டாய நிதி வசூல் கொடுமைகளும் தமிழ் மக்களைச் சங்கடத்தில் ஆழ்த்தியுள்ளன. உதாரணத்திற்காக அவற்றில் சில நிகழ்வுகளைப் பாருங்கள் :

### அதிரடிப் படை முகாம் மீது புலிகளின் அத்துமீறல்

பொது மக்களின் நடமாட்டத்திற்கு அப்பால் வெகு தூரத்தில் விலகியிருப்பது காஞ்சிரங்குடா விசேட அதிரடிப் படை முகாம். அதனூடாக 9-10-2002 அன்று காலையில் சென்ற உழவு இயந்திரமொன்றைப் படையினர் சோதனைக்காக வழி மறித்த போது அது நிறுத்தப்படாமல் சென்றது. இவ் உழவு இயந்திரம் மீண்டும் அதே வழியில் வந்தபோது படையினர் பலவந்தமாக அதனை வழிமறித்து விசாரித்தனர். அப்போது அதிலிருந்த மூவரும் தம்மைப் புலிகளின் உறுப்பினர்கள் என்று அடையாளப்படுத்தியதோடு வாக்குவாதத்தில் இறங்கினர். அதிரடிப் படையினரை ஆத்திரமூட்டும் வகையில் நடந்து கொண்டனர். இதனையடுத்துப் படையினர் அவர்களைத் தாக்கிவிட்டு விடுவித்தனர்.

இச் சம்பவத்தைத் தொடர்ந்து திருக்கோவில், அக்கரைப்பற்று, காரைத்தீவு போன்ற இடங்களில் வீதி மறிப்பில் ஈடுபட்டனர். வீதிகளில் ரயர்கள் எரியூட்டப்பட்டதுடன், போக்குவரத்துகளையும் தடை செய்தனர். பின்னர் மாலையில் காஞ்சிரங்குடா அதிரடிப்படை முகாமுக்குச் சமீபமாகச் செல்லுமாறு பொதுமக்களைத் தூண்டினர்.

அத்துடன், சாதாரண உடையில் வந்தவர்களால் முகாமை நோக்கிக் கற்களும் வீசப்பட்டன. முகாமின் முன்னரங்கப் பகுதிகள் மீது தாக்குதல் நடத்தவும் முயற்சிக்கப்பட்டது. இதனையடுத்து கலவரக்காரர்களைத் திருப்பியனுப்பப் படையினர் கண்ணீர்ப்புகைப்பிரயோகம் செய்தனர். இவ்வேளையில் கைக்குண்டுகள் வீசப்பட்டதுடன், துப்பாக்கி வேட்டுக்களும் தீர்க்கப்படவே படையினரும் பதில் தாக்குதலில் ஈடுபட்டுள்ளனர். இத்துப்பாக்கிப் பிரயோகத்தில் ஒன்பது பேர் உயிரிழந்ததுடன் பலர் படுகாயமடைந்தனர்.

பொது மக்களின் குடியிருப்புக்களுக்கு அப்பால் தனித்த பகுதியில் அமைக்கப்பட்டிருக்கும் காஞ்சிரங்குடா விசேட அதிரடிப்படை முகாமில் 9-10-2002 அன்று தங்கியிருக்கும் படையினரைச்சீண்டும் வகையில் புலிகளின் பொத்துவில் பிரதேசப் பொறுப்பாளரான விசுவநாதன் மற்றும் சசிகரன், கிறிஸ்ரிராஜ் ஆகியோர் செயற்பட்டுள்ளனர்.

தமது பொறுப்பாளரும், உறுப்பினரும் விசேட அதிரடிப்படையினரால் தாக்கப்பட்டமைக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் மக்களின் பொதுப் போக்குவரத்துக்கு இடையூறு ஏற்படுத்தப்படுவதுடன், பொதுமக்களுக்கு அசௌகரியம் ஏற்படும் வகையிலான செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

குறிப்பாக அக்கரைப்பற்று, திருக்கோவில், காரைதீவு போன்ற சம்பவம் நடைபெற்ற இடத்திற்கு வெகு தொலைவில் எதிர்ப்பு நடவடிக்கைகள் முடுக்கி விடப்பட்டன. அத்துடன், இருள் கவியத் தொடங்கும் வேளையில் சாதாரண சிவிலுடையில் வந்தவர்கள் அதிரடிப்படை முகாமைச் சூழ வைக்கப்பட்டுள்ளனர். இவையெல்லாம்

(3ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துப்பாக்கிக்குப் பலியான அப்பாவித் தமிழ் மக்கள்!

## ஊனமடைந்து வீணாகித் துன்புறும் பொதுமக்கள்!!

(2-ம் பக்கத் தொடர்ச்சி)
பொதுமக்களின் தன்னியல்பான எழுச்சி என்பதை அரசியலரங்கில் செயற்படும் எவரும் ஏற்றுக் கொள்ள மாட்டார்கள் என்கிறார்கள்.

இவ்வாறாகப் பொது மக்களைக் கேடயமாகப் பயன் படுத்தியவர்கள் அவர்களது உயிரிழப்புக்களைக் காட்டி அரசியல் அனுதாபம் தேடும் முயற்சியில் ஈடுபட்டுள்ளமை கண்டனத்திற்குரியதாகும். பொதுமக்களின் சுதந்திர அரசியல் செயற்பாடு மற்றும் பாதுகாப்பு உத்தரவாதம் என்பன உறுதிப்படுத்தப்படாத நிலையில் படை முகாம்களை மூடுவது போன்ற கோரிக்கைகள் முன்வைக்கப்படுவதை ஏற்றுக் கொள்வது சிரமமானதாகும் என்கின்றனர் விவரமறிந்தோர்.

பருத்தித்துறை, வாழைச்சேனை போன்ற இடங்களில் இடம்பெற்ற அசம்பாவிதங்களின் போதும் பொதுமக்கள் இவ்வாறுதான் கேடயமாகப் புலிகளால் பயன்படுத்தப்பட்டமை தெரிந்ததே என்கின்றனர்.

**அண்மையில் விடுதலையானவரும் அதிரடிப் படையின் வேட்டுக்குப் பலி**

காஞ்சிரங்குடா சம்பவத்தில் உயிரிழந்தவர்களில் ஒருவரான விஜயராஜா ஜெயபிரகாஷ் என்பவர் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின்கீழ் கைதாகித் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டிருந்தவர் என்பது தெரிய வந்துள்ளது. இவர் மீதான வழக்கு சட்டமாஅதிபரினால் மீளப் பெறப்பட்டதையடுத்து அண்மையில் இவர் விடுதலை செய்யப்பட்டிருந்தார். காஞ்சிரங்குடா அதிரடிப்படை முகாமைச் சுற்றி வளைத்தவர்கள் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டபோது இவர் உயிரிழந்துள்ளார். இவர் புலிகளின் உறுப்பினராக இருக்கலாம் என நம்பப்படுகிறது.

**புலிகளின் அலுவலகம் மூடப்பட்டது**

திருகோணமலையிலுள்ள புலிகளின் அலுவலகம் 11-10-2002 அன்று முதல் இழுத்து மூடப்பட்டுள்ளது. திருகோணமலை நகரை அடுத்துள்ள படுக்கை, காந்தி நகர், லிங்க நகர், மிகிந்தபுர பகுதிகளில் இடம் பெற்ற அசம்பாவிதங்களில் நால்வர் கொல்லப்பட்டும், முப்பதுக்கும் அதிகமானோர் காயமுற்ற சம்பவங்களைத் தொடர்ந்து புலிகளின் அலுவலகம் பொது மக்களால் முற்றுகைக்கு உள்ளானது. இதனை அடுத்துப் புலிகள் தமது அலுவலகத்தை மூடிவிட்டுத் தம்பலகாமம் காட்டுப் பகுதியை நோக்கிப் பின் வாங்கிச் சென்றுள்ளனர் என்கிறார்கள்.

**திருகோணமலையில் ஊரடங்கு (11-10-2002)**

திருக்கோவில் பிரதேசத்தில் இடம்பெற்ற அசம்பாவிதச் சம்பவத்தில் உயிரிழந்தவர்களுக்கு அஞ்சலி செலுத்தும் வகையில் திருகோணமலையில் கடையடைப்பு, ஹர்த்தால் மற்றும் வீதி மறிப்புப் போராட்டங்கள் புலிகளின் ஏற்பாட்டில் நடாத்தப்பட்டன. இதனால், இங்கு பதட்டநிலை ஏற்பட்டுள்ளது. புலிகள் சில கைக்குண்டுகளை வெடிக்க வைத்துள்ளனர். இதையடுத்து இடம்பெற்ற துப்பாக்கிப் பிரயோகத்தில் சிலர் காயமடைந்துள்ளனர். வீதிகள் எங்கும் டயர்கள் எரிக்கப்பட்டு வீதித்தடை ஏற்படுத்தப்பட்டுள்ளது. இச் சம்பவங்களை அடுத்துப் பாதுகாப்பைப் பலப்படுத்தும் நோக்கில் படையினர் குவிக்கப்பட்டுள்ளனர்.

மிகுந்தபுர நோக்கிச் சிலர் சென்றபோது கைக்குண்டுகள் வீசப்பட்டதில் மூவர் கொல்லப்பட்டுள்ளனர். பொலிஸாரின் துப்பாக்கிப் பிரயோகத்தில் ரமேஷ் என்பவர் காயமடைந்துள்ளார். இதே வேளை படுக்கை மற்றும் திருக்கடலூர் பகுதியில் வாள்வெட்டு மற்றும் தாக்குதல் சம்பவங்கள் இடம்பெற்றதாகத் தெரிகிறது. திருகோணமலை நகரப் பகுதி எங்கும் படையினரால் ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. மேலும், அனுராதபுரம் சந்தியில் உயிரிழந்த தமிழர்களின் சடலங்களைக் கடல் வழியாகக் கொண்டுவர முயற்சிக்கப்படுகிறதாம். கடலிலும், கடற்படைப் படகுகள் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன.

**முன்னர் கிடைத்த தகவல் திருமலையில் இனக்கலவரம் காலவரையற்ற ஊரடங்கு உத்தரவு**

திருமலை நகரில் 10-10-2002 பிற்பகல் முதல் நீடித்த பதற்றம் தமிழ் சிங்கள மக்களிடையே கலவரமாக வெடித்துள்ளது. காஞ்சிரங்குடா அதிரடிப்படை முகாமுக்குள் நடந்த சம்பவங்களின் தொடர்ச்சியாக கிழக்கு மாகாணம் முழுவதும் புலிகளின் ஏற்பாட்டில் ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது. 11-10-2002 இரு இன மக்களும் சேர்ந்து வாழும் திருக்கடலூரில் தான் சிலரின் தூண்டுதலின் பேரில் கலவரம் தொடங்கியதாக திருமலையிலிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன. இதில் மூவர் கொல்லப்பட்டதாகவும் பலர் காயமடைந்தாகவும் உத்தியோகப்பூர்வமற்ற செய்திகள் தெரிவிக்கின்றன.

**நெல்லியடியில் ஆயுதங்கள் மீட்பு**

யாழ்ப்பாணம் 11-10-2002

யாழ்ப்பாணம் வடமராட்சியின் நெல்லியடிப் பகுதியிலுள்ள ஒரு வீட்டிலிருந்து பொலிஸாரால் ஒரு தொகுதி சட்ட விரோத ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டுள்ளன. எஸ்.எம்.ஜி. ரகத் துப்பாக்கிகள் 07, அதற்கான ரவைகள் 1555, அதற்குரிய ரவைக் கூடுகள் 04, 84 எஸ் ரகத் துப்பாக்கிகள் 03, அதற்கான ரவைகள் 1835 அதற்குரிய ரவைக் கூடுகள் 07. மேலும் கிளைமோர் ரக நிலக்கண்ணி 01 என்பவையே கைப்பற்றப்பட்டவையாம். இவ்வாயுதங்கள் புலிகளால் மறைத்து வைக்கப்பட்டவையாம். இவை அண்மைக் காலத்திலேயே இப்பகுதிக்கு எடுத்து வரப்பட்டுள்ளன என்பதால் எதற்காக இங்கு கொண்டு வரப்பட்டன என்பது மர்மமாக இருப்பதாகப் பொலிஸார் தெரிவிக்கின்றனர். இவை தொடர்பாக எவரும் கைது செய்யப்பட்டார்களா என்பது பற்றிய தகவல் எதுவும் இதுவரை கிடைக்கவில்லை என்று தெரிகிறது.

**காஞ்சிரங்குடா துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கானோர்**

அம்பாறை-11-10-2002

9-10-2002 அன்று காஞ்சிரங்குடா அதிரடிப் படை முகாம் முன்பாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்த போது துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி மரணமடைந்தோரின் பெயர்கள் வருமாறு:

அரசாட்ணம் செல்வகுமார் (வயது 23)
நல்லையா குருகுலசிங்கம் (வயது 25)
விஜயராஜா ஜெயபிரகாஷ் (வயது 19)
மகேந்திரமூர்த்தி சசிகுமார் (வயது 17)
நாகராஜா சசிகரன் (வயது 20)
மனோகரன் சத்தியநாதன் (வயது 27)

இவர்களின் சடலங்கள் அக்கரைப்பற்று வைத்திய சாலையில் வைக்கப்பட்டிருந்தன.

விஜயராஜ் செயபிரதாப் (வயது 19)
கந்தையா குமாரகுலசிங்கம் (வயது 38)

ஆகியோரின் சடலங்கள் திருக்கோயில் வைத்தியசாலையில் வைக்கப்பட்டிருந்தன.

இதேவேளை இச் சம்பவத்தில் காயமடைந்து கல்முனை வைத்தியசாலையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டோரின் விபரங்கள் வருமாறு.

எஸ். தீபாகரன் (வயது 18)
ப. சங்கர்லிங்கம் (வயது 35)
ரி. ரஜனிகாந்த் (வயது 21)
பி. விஷ்ணு (வயது 23)
ஏ. பிரதீபன் (வயது 18)
என். ஜெயக்குமார் (வயது 20)
ஜே. அரவிந்தன் (வயது 32)
எஸ். தவராஜா (வயது 28)
பரமானந்தம (வயது 4 )
மகேந்திரராஜா (வயது 4 )
சுரேஷ் (வயது 26)
மதனராஜன் (வயது 22)

(-4ம் பக்கம் பார்க்க)

# வாசகர் நெஞ்சம்

அன்புள்ள ஆசிரியரே,

''இனி சனநாயக சக்திகளுக்கே எதிர்காலம்'' என்ற தலைப்பில் முதல் பக்கத்தில் வெளியிட்டுள்ள திரு. சந்திரகாசனின் உரை சிந்தனையைக் கிளறும் வகையில் உள்ளது.

எம்.கே. குகநாதன், மதுரை-9.

''சாதி, மதம், பிரதேச வாதங்களைப் பின் தள்ளி இலங்கைத் தமிழ் மக்களை ஒரு தேசிய இனமாகக் கட்டியெழுப்பியது தமிழரசுக் கட்சியே'' என்று சா.செ. சந்திரகாசன் குறிப்பிடப்பட்டிருப்பது சரித்திர உண்மையாகும். அத்தமிழரசுக் கட்சியே ஈழத் தமிழ் மக்களுக்குத் தொடர்ந்து வழிகாட்டியிருக்குமானால் இடையில் ஏற்பட்ட பரிதாபங்கள் நிகழ்ந்திருக்கமாட்டா.

வித்வான் க. வைத்தியநாதன், கோவை-1.

இந்திய விடுதலையின் எதிரொலியாகவே இலங்கைக்கு விடுதலை கிடைத்தது என்பது எதார்த்தமே, அதையும் கூட வலியுறுத்திப் பெற்றவர்கள் தமிழர்கள் தான் என்பதையும் திரு. சந்திரகாசன் சேர்த்துச் சொல்லியிருந்தால் சரியாக இருந்திருக்கும்.

வீ. கதிர்காமத்தம்பி, திருச்சி-8

''வன்முறைக்கு வன்முறை பரிகார வழியாகாது'' என்ற தலைப்பில் சிறீலங்கா குடியரசுத் தலைவர் சந்திரிகா குமாரதுங்கவுக்கு உறைக்குமாறு எழுதியிருந்த ஆசிரியத் தலையங்கம் கச்சிதம்.

யோ. சத்தியானந்தம், கரூர்

''தாய்லந்துப் பேச்சு வெற்றி பெற தமிழீழ மக்களின் சார்பில் சில கோரிக்கைகள்'' என்ற தலைப்பில் 'புதிய சனநாயகக் கட்சி' என்ற அமைப்பு வெளியிட்டிருந்த அறிக்கையைப் பிரசுரித்திருந்தீர்கள். அவற்றில் சில முரண்பாடாக இருந்தாலும் சில மிகவும் வரவேற்கத்தக்கவையாகும்.

பி.ஆர். சிதம்பரம், நெல்லை-1

''வானம் தேடும் வானவில்' செ. தமிழமுதனின் சிறுகதை உள்ளத்தைத் தொட்டது என்றாலும் கான், மேனா என்பது போன்று பாத்திரங்களுக்கு அயல் மொழிப் பெயர்களைச் சூட்டியிருப்பது அசிங்கமாக இருக்கிறது.

சொ. முருகப்பன், காரைக்குடி.

'புகழ் பெற்ற பேச்சாளர்கள்' என்ற புலவர் வெற்றியழகனின் கட்டுரையைப் படித்ததிலிருந்து நானும் ஒரு பேச்சாளனாக முயன்று வருகிறேன். நாவலர் அமிர்தலிங்கம், இராசதுரை போன்ற ஈழத்துப் பேச்சாளர்களையும் அவர் குறிப்பிட்டிருந்திருக்கலாம்.

பா. அன்புலெனின், சென்னை-6.

ஈழத்துத் தமிழர்களின் பார்வையில் இந்திய ஈழத் தமிழ் அகதிப் பிள்ளைகளின் பெற்றோர் நிலை பற்றி அம்மா என் கண்ணாரான் எழுதியிருந்தவை அத்தனையும் உண்மை. 11வது திருக்குறள்பாவுக்கு அநகோ கூறியுள்ள பொருள் முற்றிலும் புதுமையாகும்.

இராம. சுப்பு, புதுக்கோட்டை

சென்ற இதழ் சிறப்பாக இருந்தது. சா. செ. சந்திரகாசனின் தகவுரை வரவேற்புக்குரியது..

சனநாயக-சாத்வீக சக்திகளுக்கே எதிர்காலம் என்பது நியாயமானதே. நிறைவேற்றக் கூடியதே இச்சக்திகள் யாவும் இனி தாயகம் திரும்ப வேண்டும். புண்பட்ட எங்கள் மண், மனது ஆகியவற்றைப் புனரமைக்க வேண்டும். புதுச் சமுதாயம் தோற்றுவிக்க முன் வர வேண்டும்.

அம்மா என் கண்ணாரான் கருத்துகளுக்கு நன்றி.

கி. பாபுஜி, லெனாவிளக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்ப் பொது மக்களைப் பற்றிக் கவலைப்படுவோரும் பேச்சில் கலந்து கொள்ளாவிடின் மக்களுக்கு அமைதி எப்படிக் கிட்டும்

(3ம் பக்கத் தொடர்ச்சி)

### மட்டு அம்பாறையில் பதட்ட நிலை

மட்டக்களப்பு-11-10-2002

காஞ்சிரங்குடாப் பகுதியில் உயிரிழந்த ஏழு பேரினதும் இறுதிக் கிரியைகள் பற்றி இறுதி முடிவுகள் எதுவும் எடுக்கப்படவில்லை. எனினும், அம்பாறை மாவட்டம் முழுவதும் கடையடைப்பு மற்றும் ஹர்த்தால் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன. இதனால் வாகனப் போக்குவரத்துக்கள் யாவும் ஸ்தம்பித்துள்ளன. மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டம் எங்கும் பதட்டநிலை காணப்படுகிறது.

### காஞ்சிரங்குடா நிகழ்வு குறித்து கண்காணிப்புக்குழு இடர்பாளர் அறிக்கை

முகாமின் கட்டளை அதிகாரியின் தகவலின்படி-கூட்டத்திலிருந்தோர் கற்களை எறிந்தனர். ரயர்களை எரித்தனர். சுடுகலன்களினால் சுட்டனர். அதிரடிப் படையினர் கண்ணீர்ப் புகைக் குண்டுகளையும் இறப்பர் தோட்டாக்களையும் பயன்படுத்தினர். கடைசியாக நிஜத் தோட்டாக்களைப் பயன்படுத்தினர்.

கண்காணிப்புக் குழுவின் கண்காணிப்பாளர்கள் இரவு 8 மணிக்கு முன்னர் முகாமுக்குவந்தனர். முகாமுக்குள் மூன்று சடலங்களையும் முகாம் வேலிக்கு ஐந்து மீற்றர் தள்ளி ஒரு சடலத்தையும் அவர்கள் கண்டனர். அந்த நால்வரும் அவர்களின் சடலங்கள் காணப்பட்ட இடத்திலேயே உயிரிழந்துள்ளனர் என்பதை கண்காணிப்பாளர்களின் அவதானங்கள் சுட்டிக்காட்டின. ஆரம்ப சோதனைகளின் பின்னர் உயிரிழந்த ஒருவர் அணிந்த உடைகளின் அடிப்படையில் அவர் விடுதலைப் புலிகள் இயக்க உறுப்பினராக இருக்கலாம் எனக் கருதப்பட்டது.

ஆனால், அவர் அணிந்திருந்த உடை புலிகள் உறுப்பினர்கள் வழமையாக அணியும் உடையல்ல. அது போன்ற தோற்றத்தை ஒத்தது மட்டுமே என்பதால் அவர் புலி உறுப்பினர் அல்லர். சிவிலியனே என்று இப்போது கருதப்படுகின்றது. முகாமுக்கு வெளியே தீயிடப்படக்கூடிய பொருள்கள் அப்போதும் எரிந்துகொண்டிருப்பதையும் முகாமுக்குள் ரயர்கள் எரிந்து கொண்டிருப்பதையும் கண்காணிப்பாளர்கள் அவதானித்தனர். முகாமின் தொலைத் தொடர்பு 'அன்ரனாவும்' விளக்குகளும் சேதமாக்கப்பட்டுள்ளன. முகாமுக்குள் இருந்த வீடுகளின் ஜன்னல்கள் உடைக்கப்பட்டுள்ளன. முகாமுக்கு வெளியே மைதானத்தில் தாக்குதல் நடந்துள்ளது.

கட்டுப்பாடற்ற ஆர்ப்பாட்டம் காரணமாக மக்கள் இன்று தமது அன்புக்குரியவர்களின் இழப்புக் குறித்து வேதனைப்பட்டுக் கொண்டிருக்கின்ற நிலை ஏற்பட்டுள்ளது. நம்பிக்கையும் நல்லிணக்கமும் ஒருநாள் இரவில் அச்சமும் எதிர்வு கூற முடியாத நிலையுமாக மாறி விட்டன. "இந்த நெருக்கடியான நேரத்தில் கட்டுப்பாட்டுடனும் திடசித்தத்துடனும் சமாதானத்துக்கான உறுதியோடும் மக்கள் இருக்க வேண்டியதேவையை இச் சம்பவம் ஏற்படுத்தியுள்ளது." என அவர்கள் கூறியுள்ளனர்.

### பெற்றோர்கள் விசனம்

மட்டக்களப்பு-10-10-2002

மட்டக்களப்பு மாவட்டத்தில் பணிபுரியும் அதிபர், ஆசிரியர்களுக்கு ஒவ்வொரு பைசீமெந்து வீதம் தமக்கு அன்பளிப்புச் செய்ய வேண்டும் எனப் புலிகள் பணிப்புரை விடுத்துள்ளனர். இத்துடன் மட்டக்களப்பு சிவானந்தா வித்தியாலயத்தில் புலிகளின் புகைப்படக் காட்சியொன்றும் நடாத்தப்பட்டுள்ளது. இக் கண்காட்சியில் உயிரிழந்த பெண் புலி உறுப்பினர்களின் படங்கள் மற்றும் போர் வெறியைத் தூண்டும் படங்களும் காட்சிக்கு வைக்கப்பட்டிருக்கின்றன. இது பெற்றோர்கள் மற்றும் மாணவர்கள் மத்தியில் பெரும் விசனத்தைத் தோற்றுவித்துள்ளது. புலிகளின் இத்தகைய பிரச்சாரச் செயற்பாடுகள் கல்வி நடவடிக்கைகளுக்குப் பாதிப்பை ஏற்படுத்தி வருவதாகக் குறிப்பிடுகின்றனர்.

### தனியார் வாகனத்திற்கு ஒரு இலட்சம் ரூபா கோரப்பட்டது

மன்னார் 10-10-2002

மன்னாரிலிருந்து யாழ்ப்பாணம் சென்ற தனியார் வாகனமொன்று ஒரு லட்சம் ரூபாவைத் தமக்குச் செலுத்த வேண்டும் எனப் புலிகள் கோரியுள்ளனர். புலிகளின் இக்கோரிக்கையை அடுத்து தனியார் வாகன உரிமையாளர்கள் மிகுந்த மனக் கவலை கொண்டுள்ளனர். இதே வேளை இவ்வாகன உரிமையாளர் மாவீரர் குடும்பம் ஒன்றைச் சேர்ந்தவரா வார் என்பதும் குறிப்பிடத்தக்கதாம்.

### நியாப திட்டத்தில் மோசடி

மன்னார் 10-10-2002

மன்னார் மாவட்டத்தில் மேற்கொள்ளப்படும் நியாப் திட்ட வேலைகளில் புலிகள் மோசடி நடவடிக்கைகளில் ஈடுபடுவது தெரிய வந்துள்ளது. தேத்தாவடி, புதுக்குளம் ஆகிய கிராமங்களில் தலா ஒவ்வொரு குடிநீர்க் கிணறு வெட்டுவதற்காக ரூ.326,000 ஒதுக்கப்பட்டுள்ளது. இதே போல சமூக மேம்பாட்டாளர்களுக்கான சம்பளமாக ரூபா 6000 ஒதுக்கப்பட்ட போதும் 2500 ரூபா மட்டுமே கொடுக்கப்பட்டுள்ளது. இவ்வாறான மோசடிகளில் புலிகளைச் சேர்ந்த சின்னையா மாஸ்டர் என்பவர் ஈடுபட்டிருப்பதால் அரசாங்க அதிபர் விசுவலிங்கம் கண்டு கொள்ள முடியாத நிலைக்குத் தள்ளப்பட்டிருப்பதாகக் கூறப்படுகிறது.

### நகைக் கடை முதலாளியிடம் கப்பம் கோரல்.

மட்டக்களப்பு 10-10-2002

அக்கரைப்பற்று அல் முனவ்வா வீதியிலுள்ள மின்னா ஜுவல்லர்ஸ் மற்றும் மின்னா புடவைக் கடை என்பவற்றின் உரிமையாளரான ஜாபீர் என்பவரிடமிருந்து மூன்று இலட்சம் ரூபா பணம் தர வேண்டுமெனப் புலிகள் மிரட்டியுள்ளதாகப் புகார் கூறப்பட்டுள்ளது.

### நகைக் கடையில் கொள்ளை

கொழும்பு-9-10-2002

கொழும்பு வெள்ளவத்தையில் தமிழர் ஒருவருக்குச் சொந்தமான நகைக் கடையொன்று பட்டப்பகலில் கொள்ளையிடப்பட்டுள்ளது. 8-10-2002 இடம் பெற்ற இச் சம்பவத்தில் துப்பாக்கிகள் சகிதம் வந்தவர்களே கொள்ளையை நடாத்திவிட்டுத் தப்பிச் சென்றுள்ளனர். காலி வீதியிலுள்ள சரண்யா ஜுவல்லரி என்ற நகைக் கடையிலேயே பல இலட்சம் ரூபா பெறுமதியான நகைகள் கொள்ளையிடப்பட்டுள்ளன. இந்த நகைக் கடையில் கடந்த இரு மாதங்களுக்கு முன்பாகவும் ஒரு கொள்ளைச் சம்பவம் இடம் பெற்றிருந்தது குறிப்பிடத்தக்கது.

### கூட்டமைப்புக்கும் பொறி!!

திருமலை-10-10-2002

கந்தளாய்ப் பகுதியில் பொலிஸாரால் கைதான புலி உறுப்பினர்கள் இருவரையும் பிணையில் விடுவித்த நிகழ்ச்சியில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குப் புலிகள் பொறி வைத்திருப்பதாகக் கூறப்படுகிறது. இவ்விருவரையும் மேல் நீதிமன்றம் தலா 25,000 ரூபா ரொக்கப் பிணையிலும், இருவரின் சரீரப் பிணையிலும் செல்ல அனுமதி வழங்கியிருந்தது. எனினும், மேல் நீதிமன்றத்தின் நிபந்தனைகளுக்குக் கட்டுப்படப் புலிகள் மறுப்புத் தெரிவித்திருந்த நிலையில், கூட்டமைப்புப் பிரமுகர்கள், பிணைப்பணம் செலுத்தியதுடன், சரீரப் பிணைக்கும் ஒப்புதல் வழங்கிப் புலி உறுப்பினர்களை விடுவித்தனர். இதனைத் தொடர்ந்துபுலிகள் தடுத்து வைத்திருந்த ஆறு படையினரையும் விடுவித்துள்ளனர்.

### புது நிபந்தனை விதிப்பு

திருமலை 9-10-2002

புலிகள் கைது செய்து தடுத்து வைத்துள்ள 6 படையினரையும் விடுவிப்பதற்குப் புதிய நிபந்தனையை விதித்துள்ளனர். இந்த 6 பேரின் விடுதலைக்காகக் கந்தளாய் பொலிஸாரால் கைது செய்யப்பட்ட புலிகளின் உறுப்பினர்களில் இருவரையும் விடுவிக்க வேண்டுமென முன்பு கோரிக்கை விடுத்திருந்தனர்- இவர்களது விடுதலைக்காக மேன்முறையீட்டு நீதி மன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட மனுக்களை அரச சட்டவாதிகள் ஆட்சேபிக்காததையடுத்து தலா 25,000 ரூபா மற்றும் இரு நபர்களின் சரீரப் பிணையிலும் விடுவிக்க உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருந்தது எனினும், இந்தப்பிணை வழங்கலைத் தாம் ஏற்கப் போவதில்லை எனக் கூறியுள்ள புலிகள், எவரும் தமது உறுப்பினர்களைத் தமது அலுவலகத்தில் கொண்டு வந்து சேர்த்தால் தடுத்து வைக்கப்பட்டுள்ள 6 படையினரையும் மூன்று மணி நேரத்தில் விடுவிக்கலாம் எனக் கூறியுள்ளனராம்.

### கொழும்பில் கடத்தப்பட்ட வாகனம் கிளிநொச்சியில் மீட்பு

கொழும்பு 9-10-2002

கொழும்பில் வாடகைக்கு அமர்த்தப்பட்டுக் கடத்தப்பட்ட வாகனமொன்று கிளிநொச்சியில் புலிகளிடமிருந்து மீட்கப்பட்டுள்ளது. கொழும்பு வெள்ளவத்தையைச் சேர்ந்த கனகரத்தினம் தேவானந்தம் என்பவருக்குச் சொந்தமான வாகனம் கடந்த ஜுன் 24ம் திகதி கடத்தப்பட்டிருந்தது. டொல்பின் ரகத்தைச் சேர்ந்த இவ் வாகனம் (4-10-2002) புலிகளின் பொறுப்பிலிருந்து தான் உரிமையாளரிடம் கையளிக்கப்பட்டுள்ளதாம்.

### முஸ்லிம் மக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடப் புலிகள் கோரிக்கை

மன்னார் 8-10-2002

மன்னார் நகரப் பகுதியில் இருக்கும் பள்ளி வாசல்களில் தொழுகையில் ஈடுபட வரும் முஸ்லிம் மக்களைச் சந்தித்துப் பேசும் புலிகளின் உறுப்பினர்கள் படையினருக்கு எதிரான போராட்டத்தில் ஈடுபடும்படி தூண்டி வருகின்றனராம். பொலிஸ் உட்படப் படையினர் நிலை கொண்டிருக்கும் இடங்களிலிருந்து அவர்களை வெளியேற்றும் வகையில் முஸ்லிம்கள் ஆர்ப்பாட்டங்கள், கண்டனப் பேரணிகள் போன்றவற்றை நடாத்த வேண்டுமெனவும் கோரிக்கை விடுத்து வருகின்றனராம்.

இது போன்று நார்வே தலைமையில் செயல்பட்டு வரும் சர்வதேச சமாதானக் கண்காணிப்புக் குழுவினரை இவ்விரு தரப்பினருமே சங்கடத்துக்காளாக்கி வருகின்றனர் என்பது பூதாகார உண்மையாகும்.

இவ்வாறு மனிதவுரிமை மீறல்களை நடத்திவரும் இவ்விரு தரப்பினர் மட்டுமே தாய்லாந்துப் பேச்சுவார்த்தையின் இரண்டாவது சுற்றிலும் ஈடுபட்டால் என்ன தீர்வு கிடைக்கும்?

ஆகவே இரு பகுதியிலுமுள்ள சனநாயக சக்திகளும் இப்பேச்சுவார்த்தைகளில் பங்குபெற வேண்டும். அதற்கு சமாதான நடவடிக்கைகளை முன்னின்று முடுக்கி விடும் நார்வே ஆவன செய்ய வேண்டும்.

ஏனெனில், சிறீலங்கா அரசும் சரி; புலிகளும் சரி; இப்போது இக்கட்டான சூழ்நிலையில் செயல்படவில்லை என்பது, புலிகளின் 'தத்துவாசிரியர்' பாலசிங்கத்தின் கொழும்பு விஜயத்தின் மூலம் நிரூபணமாகியுள்ளது.

(13-ம் பக்கம் பார்க்க)


## ஈழ சுதந்திரன்

**மாத இதழ் சந்தா விபரம்**

இந்தியாவில் ஓராண்டு சந்தா ரூ. 80-00

வெளிநாடுகளில் அமெரிக்க டொலர் 10

அல்லது பிரிட்டிஷ் பவுண்ட் 6.

ஈழசுதந்திரனுக்கு வெளிநாடுகளில் சந்தா சேர்த்தனுப்ப முன்வருவோர் தொடர்பு கொள்ளவும்.

ஈழசுதந்திரன்
14, சேக்காலனி முதல் தெரு,
மூன்றாம் மாடி,
எழும்பூர், சென்னை-600008


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எனது ஊரைப்பற்றி...

நாங்கள் பிறந்த ஊரைப்பற்றி எழுதுமாறு இந்தியாவில் உயர் கல்வி பயிலும் இலங்கை அகதி மாணவர்களிடம் கோரியதற்கு ஒருவர் தனது ஊரைப் பற்றி பின் வருமாறு எழுதியுள்ளார். இதனை அவ்வூர்ப் பெரியவர் ஒருவரிடம் காட்டியதற்கு அத்தனையும் இலங்கையில் 3ஆம் வகுப்புப் படிக்கும் ஒரு சிறுமியிடம் கேட்டால் எப்படி எழுதுவாளோ அப்படி உள்ளது என்றார் அவர். நம் மாணவர்களின் பிறந்த ஊர் பற்றிய ஞானம் எப்படியிருக்கிறது என்பதற்கு இது ஒரு சிறு உதாரணம். ஈழப் பெற்றோர்கள் கவனிக்க வேண்டும்.

-ஆசிரியர்

1. எனது ஊரின் பெயர் சிறுத்தோப்பு

2. எனது ஊர் மன்னார் மாவட்டத்தில் உள்ளது.

3. எங்கள் ஊரின் முக்கியமான தொழில் மீன் பிடித்தல்

4. எனது ஊரின் மூன்று பக்கமும் பனை மரங்கள் சூழ்ந்துள்ளன.

5. இங்கு கிறிஸ்தவர்கள் மட்டுமே வாழ்கிறார்கள்.

6. இங்கு கிறிஸ்தவ தேவாலயம் ஒன்று உள்ளது.

7. எங்கள் ஊரின் அருகாமையில் பல ஊர்கள் சுற்றியுள்ளன.

8. இங்கு பொது நூலகம் ஒன்று உள்ளது.

9. இங்கு முதலாம் வகுப்பு முதல் ஐந்தாம் வகுப்பு வரை படிக்க பட்டசாலை (அரசு) ஒன்று உள்ளது.

10. எங்கள் ஊர் மன்னார்-தலைமன்னார் சாலையின் அருகாமையில் அமைந்துள்ளது.

11. எனது ஊரின் அருகாமையில் காடு ஒன்று உள்ளது. அங்கே பன்றி, மான், முயல், நரி மற்றும் பறவை இனங்களும் வாழ்கின்றன.

12. எனது ஊரில் பனைமரம் சார்ந்த பல துறைத் தொழில்களும் நடைபெறுகின்றன.

13. எனது ஊரில் பனங்கள் அதிகமாகக் கிடைக்கின்றது.

14. எங்கள் ஊரில் பிடிக்கும் மீன்கள் ஏனைய மாவட்டங்களுக்கும் குறிப்பாக தலைநகர் கொழும்பிற்கும் ஏற்றுமதி நடை பெறுகிறது.

15. எங்கள் ஊர் வயலில் வெளி சார்ந்த பொருட்களை உற்பத்தி செய்ய முடியாத மண் வகை.

16. எங்கள் ஊர் கடல் சார்ந்த பகுதியாக இருந்தாலும் கூட தண்ணீர் நல்ல குடிநீராக இருக்கின்றது.

17. எங்கள் ஊரில் அரசு சார்ந்த எந்த நிறுவனமோ அலுவலகங்களோ கிடையாது, பட்டசாலையைத் தவிர.

18. இங்கு தென்னை மரங்களும் அதிகமாகக் காணப்படுகின்றன.

19. இங்கு இருந்து தேங்காய் ஏற்றுமதி செய்யப்படுகிறது.

20. இங்கு ஆடு, மாடு, பன்றி போன்ற கால்நடைகளையும் வளர்க்கின்றனர்.

21. எங்கள் ஊரில் குடிசைகளும், ஓட்டு வீடுகளும் உள்ளன.

22. எங்கள் ஊரில் சுமார் ஐந்து பேருக்கு குறையாமல் அரசாங்க ஊழியர்களாக உள்ளனர்.

23. எங்கள் ஊரில் மின்சார வசதி கிடையாது.

24. எங்கள் ஊரின் அடிப்படை வசதிகளும், சுகாதாரத் தூய்மையும் சிறப்பாக உள்ளது.

25. எங்கள் ஊரில் உள்ள அனைவரும் ஒற்றுமையுடன் வாழ்கிறார்கள்.

26. வருடத்திற்கு ஒருமுறை எங்கள் ஊரில் விளையாட்டுப் போட்டிகள் வைத்து பரிசளிப்புகள் நல்கி மாணவர்களையும் ஊர் மக்களையும் ஊக்குவிக்கின்றனர்.

27. ஊருக்கு அருகாமையில் கடற்கரை ஓரங்களில் தொழில் செய்வதற்குப்பல சிங்களவர் தங்கியுள்ளனர்.

28. எங்கள் ஊரில் சுமார் 350 குடும்பங்களும் 300 (குடும்ப அங்கத்தினர்) பேர் மக்கட் தொகையும் உண்டு.

29. எங்கள் ஊரில் நடுவில் மிகவும் பழமை. வாய்ந்த ஆலமரம் ஒன்று உள்ளது

குறிப்பு : அவரைக் காயப்படுத்தக்கூடாது என்பதன் பொருட்டு அம் மாணவரின் பெயர், முகாம் போன்ற விவரங்கள் இங்கு தரப்படவில்லை,

# இடைக்கால அரசுதான் முக்கியமென்றால இந்தியத்தீர்வைப் புலிகள் எதிர்த்ததேன்?

## ஈழத் தமிழர் பாதுகாப்புக் கழகம் கேள்வி

ஈழத் தமிழர் பாதுகாப்புக் கழகத்தின் சென்ற ஆண்டுப் பொதுக் கூட்டத்திற்கும் இன்றைய கூட்டத்திற்குமிடையே தாயகத்திலும் வெளியுலகத்திலும் எவ்வளவோ மாறுதல்கள் ஏற்பட்டு விட்டன.

1. ஈழத்தைச் சேர்ந்த தமிழ்க் கட்சிகளில் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி (இபிடிபி) யைத் தவிர ஏறத்தாழ மற்ற கட்சிகள் எல்லாம் விடுதலைப் புலிகளைத் தமிழ் மக்களின் ஏகப் பிரதிநிதிகள் என அறிவிக்க, விடுதலைப்புலிகள் ஐக்கிய தேசியக் கட்சியை ஆதரிக்க, ஐ.தே.க.வுக்கு சாதகமான சூழ்நிலை தோன்றியது.

2. இலங்கை நாடாளுமன்றத் தேர்தலில் திருமதி சந்திரிகா குமாரதுங்கா தலைமையிலான பொதுசன ஐக்கிய முன்னணி தோற்று. ஐக்கிய தேசியக் கட்சி வெற்றி பெற்றது.

3. ஐ.தே.க தலைவர் ரணில்விக்கிரமசிங்க பிரதமராகப் பதவியேற்று அக்கட்சி ஆட்சி பொறுப்புக்கு வந்ததும் தேர்தலுக்கு முன் அறிவிக்கப்பட்டது போல போர் நிறுத்தம் செய்யப்பட்டு, புலிகளுக்கும் அரசுக்குமிடையே புரிந்துணர்வு ஒப்பந்தமொன்றும் ஏற்பட்டது. குடியரசுத் தலைவராகத் தொடரும் சந்திரிகாவோ அதை எதிர்த்தார்.

4. எத்தியோப்பியாவில் அங்கு நடந்த அடக்குமுறை ஆட்சியை அகற்ற எத்தியோப்பிய மக்கள் கட்சியுடன் கூட்டுச் சேர்ந்து, தேர்தலில் அதை ஆதரித்த எரித்தியா விடுதலை இயக்கம், தேர்தலில் அவர்கள் ஆதரித்த கட்சி வெற்றி பெற்று எத்தியோப்பிய ஆட்சிக்கு வந்ததும், எரித்ரியா விடுதலையை எத்தியோப்பியாவை ஏற்றுக் கொள்ள வைத்ததைப்போல தமிழீழ விடுதலை விடயத்தில் புலிகளும் சாதித்துவிடுவார்கள் என்று மக்கள் எதிர்பார்த்ததற்கு மாறாக, புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் அவர்கள், உலக ஊடகவிய பத்திரிகையாளர்கள் கூட்டத்தை வன்னிக்காட்டில் கூட்டி "தமிழீழம் என்பது தமிழர் விடுதலைக் கூட்டணி வைத்த கோரிக்கை" என்று கூறி, தாங்கள் அதை ஏன் ஏற்றுக்கக் கடமைப்பட்டிருக்க ... பொதுக் ...

ளும் சரி; இபிடிபி போன்ற அதற்கெதிரான இயக்கங்களும் சரி மேற்சொன்ன எத்தியோப்பியப் படிப்பினைக்கு மாறாக இலங்கையில் இரு தரப்பினருமே சிங்களப் பேரினவாத கட்சிகளிடையே கூட்டு வைத்துக் கொண்டு அவை ஒன்றையொன்று வீழ்த்தவே துணை புரிந்துள்ளன. முந்திய நாடாளுமன்றத் தேர்தலில் இபிடிபி சிறீலங்கா சுதந்திரக் கட்சி வெற்றிக்கு உதவியது. கடந்த நாடாளுமன்ற தேர்தலில் புலிகள் ஐக்கிய தேசியக் கட்சியின் வெற்றிக்கு உதவியுள்ளது. தமிழர் இலட்சியத்தை வென்றெடுக்க இதனால் என்ன பயன் என்பது கேள்விக்குறியாகவே உள்ளது.

6. இந்தியாவில் மீண்டும் புலிகள் இயக்கம் தடை செய்யப்பட்டதுடன், அமெரிக்கா, கனடா, அவுஸ்திரேலியா போன்ற நாடுகளிலும் தடை செய்யப்பட்டு, புலிகளுக்காக நிதிசேர்ப்பது, ஆதரவு திரட்டுவது போன்றவையும் சட்ட விரோதம் என்று அறிவிக்கப்பட்டது.

7. அமெரிக்காவில் நியூயார்க் நகரிலிருந்த உலக வர்த்தக மையக் கட்டடங்களும், அமெரிக்க இராணுவத் தலைமையகமான பெண்டகனும் அல்கொய்தா வன்முறை இயக்கத்தவர்களால் தாக்கப்பட்டதன் எதிரொலியாகவும் அவர்களுக்கெதிராக என்ற பெயரால் ஆப்கனிலும், உலகம் முழுவதும் பயங்கரவாதிகளை ஒழிப்போம் என்று தொடங்கிய நடவடிக்கைகளாலும் பொதுவாக ஆயுதப் போராட்டத்திற்கே உலகில் ஆதரவற்ற சூழ்நிலை ஏற்பட்டது.

8. மேற்கண்ட பின்னணியில் நார்வே நாட்டின் சமாதான முயற்சியின் பேரில் தாய்லாந்தில் சிறீலங்கா அரசுக்கும் புலிகளுக்குமிடையே இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பது என்ற பெயரில் ஒரு சுற்றுப் பேச்சுவார்த்தையும் நடந்து முடிந்திருக்கின்றது.

9. அந்தப் பேச்சுவார்த்தையில் புலிகளால் வடக்கு கிழக்கில் இடைக்கால அரசை ஏற்படுத்துவது பற்றியே பிரதானமாக வலியுறுத்தப்பட்டிருக்கிறது.

இவையெல்லாம் ஈழத் தமிழர் போராட்டத்தை சனநாயக-சாத்விகவாதிகள் முன்

போராளிகள் முன்னெடுப்பதற்கும் உள்ள வித்தியாசத்தை வெளிச்சம் போட்டுக் காட்டுவதாகும்.

சனநாயக சக்திகளின் ஊரலும், ஈழ மக்களின் தரப்பில் ஓங்கி ஒலித்துக் கொண்டிருந்த 1980களில் இந்தியா தலையிட்டு இன்று புலிகள் வற்புறுத்துகின்ற இதே இடைக்கால அரசை வடக்கு கிழக்கில் ஏற்படுத்தியதை மறந்துவிட முடியாது. என்ன "தாங்கள் மட்டுமே" என்று புலிகள் சொன்னதை இந்தியா ஏற்கவில்லை என்பதொன்றுதான் வித்தியாசம். உண்மைபடி அன்று புலிகள் அதை ஏற்றுக் கொண்டிருந்தால் படிப்படியாகத் தாங்கள் நினைத்ததைச் சாதித்துக் கொண்டு கூட இருக்கலாம்.

அப்படி நடந்திருந்தால் இடையில் ஈழத்தில் ஏற்பட்ட உயிரிழப்புகள், பொருளிழப்புகள், அழிவுகள் முதலியவற்றைத் தவிர்த்திருக்கலாம் சிங்களப் பேரினவாதம் என்னும் வேதாளம் மீண்டும் எப்போது முருங்கை மரத்தில் ஏறுமோ என்ற ஐயத்திற்கும் அச்சத்திற்கும் இடமில்லாமல் போயிருக்கும். ஏனென்றால் இந்தியாவின் பாதுகாப்பு உறுதியாக இருந்திருக்கும்.

திரும்பவும் அத்தகைய பாதுகாப்பான சூழ்நிலை உருவாக வேண்டுமானால், இனப்பிரச்சினைத் தீர்வுக்கான சமரசப் பேச்சுக்களில் சனநாயக சாத்வீக சக்திகளுக்கும் பங்கிருக்க வேண்டும். அதற்கான பொதுக் கருத்து உருவாக வேண்டியது இன்றியமையாததாகும்.

தாயகத்தில் நடப்பது தாயகத்தில் நடக்கட்டும்; வெளிநாடுகளில் வாழும் ஈழத் தமிழ் மக்கள் அது பற்றிக் கருத்துத் தெரிவிக்கத் தேவையில்லை என்கிற கட்டம் கடந்து விட்டது. எந்த நாட்டில் வாழ்ந்தாலும் சொந்த நாட்டு விவகாரங்களில் சிந்தை செலுத்த வேண்டிய கட்டாய நிலை ஏற்பட்டு விட்டது. ஏனென்றால், வடக்கு கிழக்கை (ஈழத்தை) இன்னொரு ஆப்கானிஸ்தனாகக் காட்டி, சிங்களப் பேரினவாத சிறீலங்கா அரசாங்கம் காரியம் சாதிக்க வழிவிட்டு விடக்கூடாத கடமையும் நமக்கு வந்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழத் தமிழர்களின் இதயநாதம் நாவலர் அமிர்தலிங்கம்



ஐ. தி. சம்பந்தர்

இன்று இலண்டனில் வாழும் ஐ.தி. சம்பந்தர் இலங்கைத் தொழிற்சங்கத் தலைவர்களில் ஒருவர். இலண்டனில் நடந்த அமிர்தலிங்கத்தின் பிறந்த நாள் விழாவில் அவர் ஆற்றிய உரை:

ஈழத்தமிழர்களின் விடுதலைக்கு 1947லிருந்து தம்மை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்ட பெரும் தலைவர் அமரர் அப்பாப்பிள்ளை அமிர்தலிங்கம், சம்டக் கல்லூரியில் படித்தகாலத்தில் அவருக்கு தந்தை செல்வாவுடன் நெருங்கிய தொடர்பு ஏற்பட்டது. தந்தை செல்வா தமிழ் இனத்தின் ஒப்பற்ற தலைவராக விளங்குவார் என்பதை அன்றே அந்த இளம் வயதில் தீர்க்க தரிசனம் கண்டவர். அப்பெரும் தலைவரின் தலைமையில் தமது அரசியலை ஆரம்பித்தவர். தந்தை செல்வாவின் அபிமானம் பெற்ற இளம் அரசியல் வாதியாக அன்று விளங்கியவர்.

1949ல் தந்தை செல்வா உருவாக்கிய தமிழரசுக் கட்சியுடன் இரண்டறக் கலந்து கொண்டவர். தமது உடல் பொருள் ஆவி குடும்பம் அனைத்தையும் ஈழத் தமிழர்களின் விடுதலைக்காகத் தியாகம் செய்த பெரும் தலைவர் அமரர் அப்பாப்பிள்ளை அமிர்தலிங்கம் அவர்களாவார்.

ஈழத்தமிழர்கள் தன்மானத்துடனும் சுயமரியாதையுடனும் சுயாட்சி பெற்று வாழ வேண்டுமென்ற உணர்வோடு தம்மை முழுமையாக அர்ப்பணிந்து வாழ்ந்து வந்தவர்.

அரசியல் திறமையாலும், பேச்சுவன்மையினாலும், செயற்திறனாலும், தியாகத்தாலும் தமிழரசுக் கட்சியை விருட்சம்போல் வளர்த்து வந்த பெருமைக்குரிய பெரும் தலைவர் அமரர் அமிர்தலிங்கம் அவர்களாவார்.

தமிழ் உரிமை காக்கும் பாத யாத்திரையின்போது அவரது மகன் பால்மணம் மறவாப் பாலகன் பகீரதன் அன்று நடந்து சென்ற காட்சி அனைவரதும் உள்ளத்தை உருக்கியது. 1958 இனக்கலவரத்தைத் தொடர்ந்து அமிர்தலிங்கம் தம்பதிகளைத் தடுப்புக்காவலில் வைத்தபோது, திருமதி மங்கையர்க்கரசி அமிர்தலிங்கம் தமது ஒரு வயதுக் குழந்தையைத் தவிக்கவிட்டு, தமிழ் இனத்திற்காகச் சிறை சென்ற தியாக மனப்பான்மையை இன்று ஈழத் தமிழ் இனம் சிந்திக்கத் தவறி விட்டது.

அமிர் அண்ணாவின் குடும்பங்கள் செய்த தியாகத்தை அடிப்படையாகக்கொண்டு அவரது அரசியலை ஆராய்ந்து பார்த்தால், தந்தை செல்வா மறையும் வரை அமரர் அமிர்தலிங்கம் ஆற்றிய புனித அரசியல் பணி நன்கு புரியும். அது வரைக்கும் அவருக்கு ஓர் தனி வரலாறுஉண்டு. தமிழ் மக்களின் விடுதலைக்கு 1948லிருந்து நடைபெற்ற அனைத்துப் போராட்டத்திலும் குடும்பத்துடன் பங்கு கொண்ட பெரும் தலைவர். தமிழரசுக் கட்சியின் வாலிப முன்னணியைக் கட்டியெழுப்பி வாலிபர்களின் தளபதியாக விளங்கியவர்.

வடகிழக்கு-மலையகம் அனைத்து மக்களின் நன்மதிப்பைப் பெற்ற "வீரத்தளபதியாக விளங்கிய திரு. அமிர்தலிங்கம் இரத்தக்கறையுடன் பாராளுமன்றம் சென்று தமிழர்களுக்கு உரிமைக்குரல் எழுப்பியவர். அரசியல் சட்டத்தை எதிர்த்துப் பாராளுமன்றத்தில் 5 மணித்தியாலங்கள் மரதன் உரை நிகழ்த்தி, தமிழர் அரசியல் வரலாற்றில் சரித்திரம் படைத்த பெரும் தலைவர் அமிர் அண்ணா.

இத்தகைய பெரும் தலைவரினால் தான் நான் அரசியலில் ஈடுபட வாய்ப்பு ஏற்பட்டது. நான் காரை நகர் இந்துக் கல்லூரியில் படித்துக் கொண்டிருக்கும்போது (1952ம் ஆண்டு) அக்கல்லூரியில் நடைபெற்ற பாரதி விழாவில் அமிர் அண்ணா ஆற்றிய உரையினால் கவரப்பட்டு அவர்வழி அரசியலில் இலங்கைத் தமிழரசுக் கட்சியில் இணைந்து கொண்டேன்.

என் வாழ்க்கையில் மறக்க முடியாத அரசியல் தலைவன். அந்த அரசியல் பாசத்தால் அமிர் அண்ணாவின் திருமண விழாவில் மாணவனாகக் கலந்து கொள்ளும் பாக்கியம் கிடைத்தது. இன்றும் எனது மனதில் பசுமையாக விருக்கும் நிகழ்வு இதுவாகும்.

ஈழத்து அரசியல் வானில் விடிவெள்ளியாகச் சஞ்சரித்துக் கொண்டிருந்த தலைவர் அமிர்தலிங்கம் அவர்களின் மறைவு உலகின் விடுதலைத் தலைவர்களாகிய மகாத்மா காந்தி, யோன் கெனடி, பண்டார நாயக்கா போன்ற அரசியல் தலைவர்களுக்கு ஏற்பட்ட நிகழ்வாக அமைந்து விட்டது. அன்னாரது பூதவுடலை யாழ். மண்ணுக்கு இரையாக்கும் இறுதி யாத்திரையில் அத்தலைவரது பூதவுடலைத் தாங்கிச் செல்லும் வாய்ப்புக் கிடைத்தது எமது தலைவருக்கு நாம் செலுத்திய அஞ்சலியாக நிறைவு பெற்றேன். அன்னார் தமிழ் இனத்திற்கு ஆற்றிய பணிகளை அவர் பிறந்த நன்னாளில் நினைவு கூருவோமாக.

# சிறீலங்கா அதிரடிப்படை கொலைவெறிக்கு சர்வதேச தமிழீழ மாணவர் பேரவை கண்டனம்

விசேட அதிரடிப்படையினரிற்கு எதிராக அப்பகுதி மக்களால் மேற் கொள்ளப்பட்ட ஜனநாயக ரீதியான வெகுஜனப் போராட்டத்தின் போது அப்பாவிப் பொது மக்கள் ஏழு பேர் கோரத்தனமாக சுடப்பட்டு படுகொலை செய்யப்பட்டதுடன் 30இற்கும் அதிகமான அப்பாவிப் பொதுமக்கள் படுகாயப் படுத்தப்பட்டுள்ளனர். இச் செயலை நாம் மிகவும் வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

புரிந்துணர்வு உடன் படிக்கை கைச்சாத்திடப்பட்ட பின்னர் சமாதான முயற்சிகள் அமைதியாகவும் வேகமாகவும் முன்னெடுக்கப்பட்டுக் கொண்டிருக்கும் இவ் வேளையில், ஸ்ரீலங்கா அதிரடிப் படையினரின் காடைத்தனமான இத் தாக்குதல் சமாதானத்தைக் குழப்புவதற்காகவென திட்டமிட்டு மேற் கொள்ளப்பட்டதாகவே கருத வேண்டியுள்ளது.

இதன் மூலம் வடக்கு-கிழக்கில் ஸ்ரீலங்கா இனவாத இராணுவம் தேடி கொண்டிருக்கும் வரை சமாதான முயற்சிகளை முன்னெடுக்க முடியாத நிலையே தொடரும். இக்கொலை தொடர்பான கண்டன ஊர்வலத்தில் ஈடுபட்ட திருமலை மக்கள் மீது ஸ்ரீலங்கா இராணுவத்தினர் தாக்குதல் மேற்கொண்டதில் சிலர் கொல்லப்பட்டதுடன் பலர் படுகாயப்படுத்தப் பட்டுள்ளனர். அம்பாறையில் படுகொலை செய்யப்பட்டவர்களில் ஐந்திற்கும் மேற்பட்டோர் பாடசாலை மாணவர்களாவர். இவ்வாறு மாணவர்களை படுகொலை செய்வதனை நாம் மிக வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

கொலை வெறிகொண்டு மக்களை கொலை செய்த படையினரை அரசு தண்டிக்க வேண்டும். எதிர்காலத்தில் இவ்வாறான தாக்குதல்கள் அப்பாவித் தமிழ்மக்கள் மீது நடைபெறாதிருப்பதனை அரசு உறுதிப்படுத்த வேண்டும். இல்லையேல் வடக்கு-கிழக்கில் இருந்து இராணுவம் வெளியேறும் வரை இராணுவத்தினருக்கு எதிராக சாத்வீகமான போராட்டங்களை அமைதியான முறையில் ஆரம்பிக்க வேண்டிய இக்கட்டான சூழ்நிலை உருவாகும் என சர்வதேசத் தமிழ் மாணவர் பேரவை ஒரு அறிக்கையில் கூறியுள்ளது.

## யாழ். மாவட்ட விவசாய நுகர்ச்சி கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம்

அமைதியாக ஆர்ப்பாட்டப் நடத்திய அப்பாவிப் பொதுமக்கள் மீது அதிரடிப் படையினர் தாக்குதல் நடத்தி ஏழு பேரை கொன்றதையும் இருபதுக்கும் மேற்பட்டோரை காயமடையச் செய்ததையும் கண்டித்து வடக்கு-கிழக்கில் அனுட்டிக்கப்பட்ட துக்கத்தினத்திற்கு கூட்டுறவுத்துறை சார்ந்த சகலரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும். சகல கூட்டுறவு நிறுவனங்களையும் பூட்டி, பூரண கடையடைப்பு நடத்த வேண்டும் எனவும் ஹர்த்தாலை அனுஷ்டிக்க வேண்டும் எனவும் வேண்டிக் கொள்கிறோம். இந்த அராஜகத் தாக்குதலை தற்போதைய சமாதான முயற்சிகளை குழப்பும் நோக்கம் கொண்டதாகவே பார்க்கத் தோன்றுகிறது. எனவே, அதிரடிப் படையினரின் நடவடிக்கையை நாம் கண்டிக்கிறோம். என்பதை இந்தத் துக்கதினம் உலகுக்கு எடுத்துக்காட்ட வேண்டும்.

மக்கள் குடியிருப்புக்களுக்கு மத்தியில் முகாம்களை அமைத்துக்கொண்டு, இயல்பு வாழ்க்கை திரும்ப வேண்டும் என்ற மக்களின் ஏகோபித்த குரலுக்கு இடைஞ்சலாக இருந்து கொண்டு அவர்களது நியாயமான உணர்வு வெளிகாட்டல்களை அடக்கி ஒடுக்கி அடாவடித்தனமாக தாக்குதல் நடத்திக்கொலை செய்வதும் காயப் படுத்துவதும் மிக அநாகரிகமான செயல் என்பதையும் இந்தத் துக்கதினம் மூலம் நாம் ஒருமித்த குரலில் வெளிக்காட்ட வேண்டும்.

## யாழ். மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றியம்

விசேட அதிரடிப்படையினர் மக்கள் மீது மேற்கொண்ட கண்மூடித்தனமான மனிதப் படுகொலையை நாம் மிகவும் வன்மையாகக் கண்டிக்கின்றோம். ஒரு கொடூர யுத்தத்திற்கு முகங்கொடுத்த மக்கள் மத்தியில் ஸ்ரீலங்கா அரசும் தமிழீழ விடுதலைப் புலிகளும் ஏற்றுக்கொண்ட புரிந்துணர்வு ஒப்பந்தம் நிம்மதியையும் நீதியையும் வழங்கு மென்று எதிர்பார்த்த எம்மத்தியில் அரச படைகள் குறிப்பாக ஸ்ரீலங்காஅதிரடிப் படைகள் இழைத்து வரும் மனிதாபிமானமற்ற கொலைகளையும் மனித உரிமை மீறல்களையும் சர்வதேச சமூகத்தின் கவனத்திற்கு கொண்டுவர விரும்புகிறோம்.

தமிழர் தாயகத்தில் இயல்பு நிலையை உருவாக்கும் நோக்குடன் செய்து கொள்ளப்பட்ட சில ஒப்பந்த வசதிகளும் நல்லெண்ண நடவடிக்கைகளும் முழுமையாக நிறைவேற்றப்படாமல் போர் நிறுத்த ஒப்பந்த விதிகளுக்கு முரணான வகையில் சன நெருக்கடி நிறைந்த தமிழரின் நகரங்கள், பட்டினங்களில் உள்ள சோதனைச் சாவடிகளையும், தடைகளையும் அகற்றுவதற்கு சிங்கள ஆயுதப் படையினர் மறுத்து வருவதுடன் பொது மக்களை மிரட்டியும், துன்புறுத்தியும் வருகின்றனர். இறுதியில் கொலை செய்யும் அளவிற்கு நிலைமை மோசமாகிவிட்டது. இதனால் சமாதானத்தின் பால் எமது மக்கள் கொண்டிருந்த நம்பிக்கையும் நிம்மதியும் இடிந்து வருகிறது.

மக்கள் தமது ஜனநாயக உரிமைக்காக, வாழும் உரிமைக்காக அஹிம்சை வழியில் போராட முற்பட்டபோது சிங்கள தேசம் தனது ஆயுத பலத்தினாலும் அடக்க முற்படுவதும், அழிக்கப் புறப்படுவதும் எம்மால் ஏற்றுக் கொள்ள முடியாதது. ஜீரணிக்க முடியாதது.

## முச்சக்கரவண்டி சேவைச் சங்கம்

காஞ்சிரங்குடாவில் பொது மக்கள் கொலை செய்யப்பட்ட சம்பவத்தை வன்மையாகக் கண்டிப்பதுடன் உயிரிழந்தவர்களின் துயரிலும் நாம் பங்கு கொள்கிறோம். இன்றைய சமாதான சூழ்நிலையில் மக்களின் இயல்பு வாழ்க்கையைக் குழப்பும் செயல்கள் இடம்பெற அனுமதிக்கக்கூடாது. சமாதானத்தில் அவாவுள்ள சகலரும் போராட்டத்தில்இணைய

(12-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அறிவியல் பகுதி

# கட்டி வந்தால் புற்று நோயா?

டாக்டர் பத்மா சமரசம் எம்.பி.பி.எஸ். டி.எம்.சி.எச்.,

● எனக்குத் திருமணமாகி 8 ஆண்டுகள் ஆகின்றன. குழந்தை பிறக்கவில்லை. 'அண்ணி'யில் அம்பிகையற்கண்ணி செய்வது போல் எனது கணவருக்கு இரண்டாவது திருமணம் செய்து வைக்கலாம் என அவரது பெற்றோர்கள் கருதுகின்றனர். அப்போது குழந்தை பிறக்குமா?

நர்மதா ஈரோடு.

அனேகமாகப் பிறக்காது. குழந்தை பிறக்காவிட்டால் மனைவிதான் காரணம் எனக் கருதுவதே தவறு. தற்போதுள்ள ஆண்களில் 60 சதவிகிதத்தினருக்கு உயிரணுக்களில் வீரியம் குறைவாக உள்ளது. ஒரு மில்லி விந்துவில் 20 முதல் 30 மில்லியன் உயிரணுக்கள் உள்ளன. ஆண்களுக்கு உள்ள வீரியக் குறைவினால் குழந்தை பிறப்பதில்லை. எனவே நீங்கள் இருவரும் மருத்துவச் சோதனை செய்து பார்க்கவும். குறை இருந்தால் சோதனைக் குழாய் மூலம் குழந்தை பெற்றுக் கொள்ள முயலவும். டைரக்டர் பாலச்சந்தர் போன்றவர்கள் தங்கள் கதாபாத்திரங்களுக்குச் சுவையூட்ட எழுதும் நிகழ்வுகளை மக்கள் தங்கள் நிஜ வாழ்க்கையில் பின்பற்ற முயலுவது தவறு. கதை வேறு. வாழ்க்கை வேறு.

● எனது 10 வயதுப் பெண், வளைந்த ஊசி (சேப்டி பின்) ஒன்றை விழுங்கி விட்டாள். மருத்துவரிடம் சென்றேன்; வெளியே எடுக்க முடியவில்லை; பிரச்சினை ஏதுமில்லை என்பதால் விட்டுவிடலாம் எனக் கூறி விட்டார். இதனால் பிற்காலத்தில் ஏதாவது ஆபத்து ஏற்படுமா?

-மணிமேகலை, திருத்தணி.

நமது வாய், பிறகு தொண்டை, அடுத்து உணவுக் குழாய் ஆகிய மூன்று இடங்களில் ஊசி, எலும்பு போன்றவைகள் மாட்டிக் கொள்ளும். இவை மூன்றையும் தாண்டிவிட்டால் அது நேராக வயிற்றுக்குப் போய் மலத்தில் வெளிவந்துவிடும். அனேகமாக உங்கள் பெண்ணின் வாயில், நுழைந்த சேப்டி பின் உங்கள் கண்ணில் படாமல் வெளியே போய் விட்டிருக்கும். அவ்வாறில்லாமல் அது உணவுக் குழாயில் ஒரு பக்கமாக ஒதுங்கியும் இருக்கலாம். நீங்கள் எதுக்கும் 'எண்டாஸ்கோபிக்' செய்து பார்க்கவும். அந்த வசதி இல்லாவிட்டால் 'பேரியம், செய்து எக்ஸ்ரே எடுத்தும் பார்க்கலாம்'

● அதிகச் சத்தம் நமது கேட்கும் சக்தியைப் பாதிக்கும் என்பது உண்மையா?

-மணிவேல், கொடுமுடி.

காதின் கேட்கும்சக்தியை மட்டுமல்ல, வயிற்றில் புண், சீரணக் கோளாறு, இரத்த அழுத்தம் ஆகியவைகளும் ஏற்படும். கண் பார்வையைக் கூடப் பாதிக்கும். கண்ணின் பார்வையை (Pupil) குறுகச் செய்யும், மாலைக்கண் நோயையும் ஏற்படுத்தலாம். ஏன் கருவிலே வளரும் குழந்தையையும் பாதிக்கிறது என ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர். அதிகச்சத்தத்தைத் தவிர்க்கவும்.

● 'பேஸ்மேக்கர்' என்பது இருதயத்தில் எத்தகைய வேலையைச் செய்கிறது? இது எவ்வளவு நாள் வேலை செய்யும்?

-டேவிட்ராஜ், கோவில்பட்டி.

இதயத்துடிப்பின் இயக்கம் மின் இணைப்பில் தொடர்பு அறுந்து போனால் இதய அடைப்பு (Heart block) ஏற்படுகிறது. 'பேஸ்மேக்கர், ஜெனரேட்டர் போல் செயல்படுகிறது. இதயத்தின் தசை நார்கள், நிமிடத்திற்கு 72 முறை துடிக்க வேண்டும் என்றகட்டளையை அனுப்புவது இதன் வேலை. பொதுவாக இதிலுள்ள பேட்டரி 10 முதல் 12 ஆண்டுகள் வரை செயல்படும். அதன் சக்தி குறைந்தால் 'பேஸ்மேக்கரை' மாற்றிக் கொள்ளலாம்.

● இரத்தப் பரிசோதனை மூலம் குழந்தையின் பிறப்புக் குறைகளைக் கண்டுபிடிக்க முடியுமா?

-தமிழ்ச்செல்வி, பழனி.

ஏஎப்பி (Alpha-foeto protein) என்ற இரத்தச் சோதனையை 14 முதல் 16 வாரத்திற்குள் செய்தால் குழந்தையின் மூளை, முதுகெலும்பு, சீரண உறுப்புகள் ஆகியவற்றில் இருக்கும் குறைகளைக் கண்டுபிடிக்க முடியும்.

● எனது மகனுக்கு வயது 15. அவனது வலது மார்பில் ஒரு சிறிய கட்டி (lump) உள்ளது. இது புற்று நோயாக இருக்க வாய்ப்பு உள்ளதா?

-அப்துல்லா, நீலாங்கரை.

14, 15 வயதில் ஆர்மோன் மாற்றங்களால் இது போன்ற சிறு கட்டிகள் மார்பில் பெரும்பாலோருக்கு வரும். ஓரிரு ஆண்டுகளில் மறைந்து விடும். அவ்வாறு மறையாவிட்டால் மருத்துவரைப் பார்த்து அதனை அகற்றி விடலாம்.

● எனக்கு வயது 65. உணவு அளவு மாறாமல் எனது எடை கூடியுள்ளது. இதற்கு என்ன காரணம்?

-செந்தாமரை, காரைக்கால்.

20 வயதுக்குப் பிறகு ஒருவருக்குத் தேவைப்படும் எரிபொருளின் அளவு 10 ஆண்டுகளுக்கு 2 சதவீதம் என்ற அளவில் குறைகிறது. உங்களுக்கு 0 சதவீதம் எரிபொருள் குறைவாகத் தேவைப்படும். எனவே 0 சதவீதம் உணவை நீங்கள் குறைக்க வேண்டும், தரத்தைக் குறைக்கக் கூடாது. தேவையான புரதம், கொழுப்புச் சத்து, மாவுச் சத்துக்கள், வைட்டமின்கள், தாதுப் பொருள்கள் உங்கள் உணவில் இருக்க வேண்டும். தண்ணீர் அதிகமாகக் குடிக்கவும். மிதமான தேகப் பயிற்சிகளைச் செய்யவும்.

## பருவ வயதுப் பிள்ளைகளின் பெற்றோர்களுக்கு

★ பிள்ளைகள் சொல்வதை கவனமாகக் கேட்டபின் பேசுங்கள். அவர்களது உலகம் உங்களைக் கவரும்.

★ அவர்கள் சொல்வதை மட்டுமல்ல; முகத்தில் வெளிப்படும் உணர்வுகள், உடல் அசைவுகள் உட்பட எப்படிச் சொல்கிறார்கள் என்பதையும் கவனியுங்கள்.

★ அவர்களிடம் கோபப்பட்டு பேச வேண்டாம். அவர்களும் கோபித்துக் கொண்டால் அது நன்மை தராது.

★ பிள்ளைகளிடம் அதிக அக்கறையோடு பேசுங்கள். அவர்கள் என்ன செய்கிறார்கள், எங்கே போகிறார்கள் என்பதை கேட்டறிவதுடன், அவர்களது ஐயங்கள், அச்சங்கள், விருப்பங்கள், அதிருப்திகளையும் அறிந்து கொள்ளுங்கள். அவர்களது உணர்வுகளுக்கு மதிப்புக் கொடுங்கள்.

★ பிள்ளைகள் அதிகம் பேசாவிட்டால் அலறாதீர்கள். பருவ வயதில் அது இயல்பு. எனவே அவ்வாறு இருப்பது உங்களுக்கு எதிரான அணுகுமுறை என்று நினைக்காதீர்கள்.

★ அவர்களது நற்பண்புகள், தகுதிகளை ஒப்புக் கொண்டு பாராட்டுங்கள். அப்போது நீங்கள் அவர்கள் பக்கம் நிற்பது அவர்களுக்குப் புரியும். மகிழ்ச்சியைக் கொடுக்கும்.

★ சொன்னதையே திரும்பத் திரும்பச் சொல்ல வேண்டியதில்லை. அப்படிச் சொல்லும்போது, அக்கருத்து மதிப்பிழந்து விடும், எரிச்சலூட்டும்.

★ வாய்ப்பேச்சை நிறுத்தும் விதமாக உணர்ச்சிகளை வெளிப்படுத்த வேண்டாம். மௌனமாகவும், அன்பாகவும் விசாரியுங்கள்.

★ ஒரு செயலைச் செய்தால் அதன் பின்விளைவுகள் என்னவென்று தெளிவுடன் எடுத்துரையுங்கள்! தவறுகள் நடக்கும்போது 'அப்போதே சொன்னேனே கேட்டாயா?' என்று இடித்துரைக்க வேண்டாம். அது அவர்களுக்கும் தெரிந்தே இருக்கும்.

★ தேவையெனில் 'இது என்னுடைய தவறுதான், வருந்துகிறேன்' என்று சொல்லத் தயங்க வேண்டாம்.

★ மொத்தத்தில் உங்கள் பிள்ளைகளின் மனதில் இயல்பாகவே உங்களைப் பற்றி உயர்ந்த எண்ணம் ஏற்படும் விதமாக நடந்து கொள்ளுங்கள்.

-நல்வழி

★ "குழல் இனிது யாழ் இனிது என்பர் தம் மக்கள்
மழலைச்சொல் கேளா தவர்"

★ "தம்மின்தம் மக்கள் அறிவுடைமை மாநிலத்து
மன்னுயிர்க் கெல்லாம் இனிது"

-திருக்குறள்.

## பாறைகளில் வெடிப்பு ஏன்?

N. S. சிதம்பரம் M.Sc., M.A., M.Ed.

○ பாறைகளில் வெடிப்பு ஏற்படக் காரணம் என்ன?

உறை பனிக் காலங்களில் பாறைகளில் வெடிப்பு உண்டாகிறது. பாறை இடுக்குகளில்உள்ள நீர், பனிக்கட்டியாக உறைவதால் பருமன் அதிகமாகிறது. இதன் விளைவாகப் பாறைகளில் வெடிப்பு ஏற்படுகிறது,

○ ஈச்சமரத்தின் மேல் செதில்கள்போல் காணப்படுவது ஏன்? அதன் இலைகள் கூர்மையாகக் காணப்படுவது ஏன்?

ஈச்சமரத்தின் இலைகள் காய்ந்து கீழே விழும்போது இலைக் காம்பின் அடிப்பாகம் மட்டும் மரத்துடன் ஒட்டிக் கொண்டு விழாமல் இருக்கின்றன. இவ்விலைக் காம்புகள் செதில்கள்போல் காணப்படுகின்றன. ஆடு, மாடுகள் அழிக்காமல் இருக்கவும், இலைகளின் மூலம், அதிக நீர் ஆவியாகாமல் இருக்கவும், இதன் இலைகள் கூர்மையாக உள்ளன.

○ பனிக்கட்டி (Ice) வைக்கப்பட்டுள்ள ஒரு பாத்திரத்தின் வெளிப்புறத்தில் சிறுசிறு நீர்த் திவலைகள் தோன்றுவது ஏன்?

பனிக்கட்டியின் வெப்பநிலை 0°செ அது பாத்திரத்தில் வைக்கப்படும் பொழுது அதிலுள்ள வெப்பத்தை எடுத்துக்கொண்டு உருகத் தொடங்குகிறது. இதனால் பாத்திரம் குளிர்ச்சியான வெளிப் பக்கத்தில் காற்று பட்டவுடன் காற்றிலுள்ள நீராவி குளிர்ச்சியடைகிறது எனவே அவை சிறு, சிறு நீர்த் திவலைகளாகத் தோன்றுகின்றன.

○ பனை, வாழை, தென்னை, பாக்கு முதலியவை மற்ற மரங்களைப் போல் அல்லாமல் மிகவும் உயரமாக வளர்கின்றன. ஏன்?

பனையும், தென்னையும் பால்மே என்னும் குடும்பத்தைச் சேர்ந்தவை. இவற்றின் நுனியில் உள்ள மொட்டு மட்டுமே வளரும், பக்கக் கிளைகள் தோன்ற தேவையான மொட்டுக்கள் வளர்வது இல்லை. ஆனால் வாழை வித்தியாசமானது, அதன் அடியிலுள்ள கிழங்கினின்று பக்கக் கிளைகள் தோன்றும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடவுளா? எமனா?

செல்வி சு. சுபாசினி
செந்தாரப்பட்டி முகாம்

சந்திரனுக்கு நேற்றை விட இன்று காய்ச்சல் உச்சக் கட்ட நிலையை அடைந் திருந்தது.

''என்னங்க மூன்று நாளாக இவனுக்குக் காய்ச்ச லும், வயிற்றுப் போக்கும் இருக்கு என்று சொல்கி றேனே எதாவது கண்டு கொண்டீர்களா? இன்றைக்கு பிள்ளைக்கு உடலெல்லாம் கொதிக்கிறது'' என்று தன் கணவனிடம் புலம்பிக் கொண் டிருந்தாள் அமுதா.

தன் மனைவி புலம்புவ தெல்லாம் தன் காதில் விழுந் தாலும் இரத்தினத்தினால் என்னதான் செய்ய முடியும்? ஒரு வாரமாக வேலையும் இல்லை, கையில் ஒரு பைசா காசும் இல்லை. சந்திரனை ஆஸ்பத்திரி கொண்டு போவ தென்றால் ஒரு 50 ரூபாயா வது தேவைப்படும். யாரிடம் போய் அந்தப் பணத்தைக் கேட்பது? மகனை மடியில் வைத்துக் கொண்டு கண்ணீர் வடித்துக் கொண்டிருக்கும் அமுதாவின் அருகே சென்று அமர்ந்தான்.

மகனைத் தொட்டுப் பார்த்தான். உடலெல்லாம் கொதித்தது; அமுதாவின் முகத்தைப் பார்த்தான், அவ ளும் அவனைக் கோபமாகப் பார்த்தான்.

''என்னால் என்னம்மா செய்ய முடியும்? யாரிடமா வது நான் போய்க் கடன் வாங்கி வரட்டுமா?'' எனக் கேட்டான்

''யாருங்க நமக்குக்கடன் தரப் போறாங்க? நீங்க எங்க போய் அலைவீங்க?'' என்று சொல்லிக் கொண்டே மக னைக் கணவனிடம் கொடுத்து விட்டு எழுந்து சென்று சாமிப் படத்திற்குமுன் நின்றாள். அங்கிருந்த உண்டியலை எடுத்து உடைத்துப் பார்த் தாள் சில்லறைக் காசுகளாக 13 ரூபாய் இருந்தது.

''இந்தாங்க இந்தக் காசைக் கொண்டு போய் மாத்திரை மருந்து வாங்கி வாங்க. இப்போதைக்கு இவ னுக்கு இதைக் கொடுப்போம் காசு கிடைத்ததும் டாக்டரி டம் கூட்டிப் போகலாம்''

## சிறுகதை

என்று கூறி தனது கணவ னின்கையில் காசைக்கொடுத் தாள்.

ரத்தினம் அதை வாங்கிக் கொண்டு வேக வேகமாய் முடிக்கல் கடை நோக்கி நடந்தான் அப்போது கடை வீதியில்,

''பம்பர் குலுக்கலுங்க, நாளையக் குலுக்கல், முதல் பரிசு 5 லட்சம் ரூபாய். ஒரு சீட்டு வெறும் 10 ரூபாய் தான்'' என்று லாட்டரி சீட்டுக்காரன் கூறுவது அவன் காதில விழுந்தது; லாட்டரிக் கடையை கடந்து, நடந்து போகும்போது தொடர்ந்து அந்த சத்தம் அவனைத் துரத்தி வந்து காதில் விழுந் தது. அவன் புத்தி மாறியது; நடையும் மாறியது; 10 ரூபாய்க்கு ஒரு லாட்டரிச் சீட்டையும் வாங்கிக்கொண்டு மீதி மூன்று ரூபாய்க்கு காய்ச் சலுக்கான ஒரு மாத்திரையும் வாங்கிக் கொண்டு வீடு திரும்பினான்.

மாத்திரை, மருந்துடன் வந்திருப்பான் என எதிர் பார்ப்பதுடன் சென்ற அமுதா விடம் ஒரே ஒருமாத்திரையை மட்டும் அவன் கொடுத்ததும் வியப்புடன் அவனைப் பார்த் தாள்.

''அமுதா நான் மெடிக் கலுக்குத்தான் போனேன். ஆனால் அங்க லாட்டரிக் கடைக்காரன் டிக்கெட் விற் கிற சத்தம் என்னைக் கட வுளே கூப்பிட்டு ஒரு டிக்கெட் வாங்கிக்கோ என்று சொன்ன மாதிரி இருந்தது அதான் ஏதோ ஓர் நல்லது நடக்கப் போகுது என்று நினைத்து அதை வாங்கினேன்''

''ஏங்க அறிவோடதான் பேசுறீங்களா? பிள்ளை இங்க சாகுற நிலையில இருக்கான் நீங்க இப்படி செஞ்சுட்டீங் களே!''

''பொறுமையா இரு அமுதா. இன்றைக்கு ஒரு நாள் மட்டும் தானே. நம்ம பிள்ளைக்கு ஒன்றும் நடக் காது. நாளைக்கு காலையில குலுக்கல்ல கண்டிப்பாக நமக் குப்பரிசு விழத்தான் போகுது. அதை வைத்து நம்ம பிள் ளையை நல்ல டாக்டர்கிட்ட காட்டலாம். நம்முடைய கஷ்டமெல்லம் ஓடிப் போய் விடும்'' என்றான்.

''உங்களை மாதிரி ஒரு ஊதாரிப் புருசனைக் கட்டிக் கொண்டு நானும் என் பிள்ளையும் பட்ட கஷ்டமெல் லாம் போதும். எப்படியோ நானும் அவனும் செத்துத் தொலைகிறோம்'' என்று திட்டிக்கொண்டே கண்ணீ ருடன் மகனுக்கு சாப்பிட ஏதாவது கொடுக்க வேண் டுமே என்று அடுப்படிக்குச் சென்று விட்டாள்.

அமுதா தன்னை ஊதாரி எனத் திட்டிவிட்டாளே என்ற மன அழுத்தத்துடன் அவ னும் திண்ணையில் படுத்து உறங்கிவிட்டான். காலை யில் கண் விழித்து வீட்டுக்குள் சென்றான் அமுதாவும், சந்தி ரனும் நன்றாகக் கண்ண யர்ந்து தூங்கித் கொண்டிருந் தனர்.

அமுதா என்று அழைக்க [illegible]

திட்டி விட்டாளே என்ற ஞாப கம்வர வாயை மூடிக்கொண்டு கடைத் தெருப்பக்கம் சென்று விட்டான்.

போகும் வழியெல்லாம் மனம் படபடத்துக் கொண்டி ருந்தாலும் லாட்டரிக்கடைக்கு முன்னே கூட்டம் கூடியிருப் பதைக் கண்டு குழப்பமாக அதன் அருகே சென்றான்.

''யாரப்பா அந்த டிக் கட்டை வாங்கியது என்று ஒருவர் கேட்க, கடைக்காரர் தெரியலப்பா என் கடையில் தான் அந்த சீட்டை வித்திருக் கேன். ஆனால் அதை யார் வாங்கியது என்று தான் வில்லை'' என்றார்.

அப்போது தன் பாக்கெட் டில் இருந்து அந்தத் டிக் கெட்டை எடுத்து பேப்பரில் வந்த நம்பர்களுடன் தன் சீட்டு நம்பரையும் ஒப்பிட்டுப் பார்த்தான் ரத்தினம்.

ரத்தினத்தினால் தன் னையே நம்ப முடியவில்லை. கடவுள் தன்னைக் கைவிட வில்லை என்பதை உணர்ந்து கொண்டான். இப்போது 5 லட்சம் ரூபாய் தனக்குச் சொந்தம் என்றுநினைக்கவே அவனுக்கு ஆனந்தம் பொங் கியது. உடனே வீட்டுக்குப் போகவேண்டும் இந்தச் செய் தியை அமுதாவிடம் சொல்ல வேண்டும் சந்திரனைஉடனே மருத்துவமனைக்கு அழைத் துப்போக வேண்டும் என எண்ணிக்கொண்டே வேக மாக வீடுநோக்கி நடந் தான்.

ஓட்டமும் நடையுமாக வீடு நோக்கி வந்தவனுக்கு வீட்டின் முன் ஆட்கள் கூட் டம் நிற்கக் கண்டு, நாம் கஷ்டப்படும்போது யாருமே நம்மைக் கண்டுகொள்ள வில்லை. 5 லட்சம் பணம் வந்தவுடன் மட்டும் பிசாசு மாதிரி வந்து நிற்குறானுங்க. போனதும் ஓடுங்கடா நாயே என்று துரத்தணும் என எண்ணிக்கொண்டே வீட்டு வாசல் அருகே வந்தான்.

அப்போதுதான் அமுதா வின் கதறல் ஒலி அவன் காதில் விழுந்தது. எல்லோ லோரும் அவனைப் பரிதாப மாகப் பார்ப்பதைப் உணர்ந் தான் வீட்டுக்குள் ஓடினான்.

அங்கே சந்திரன் நிரந்தர மாகக் கண் மூடிக் கிடத்தப் பட்டிருந்தான்.

என்ன அதிர்ஷ்டம் இருந் தும் என்ன பயன்? நேற்று அந்தக் காசிற்கு ஒழுங்காக மருந்து வாங்கிக் கொடுத்தி ருந்தால் என் ஒரே மகன் இன்று உயிரோடிருந்திருப் பானே என நினைத்து குமுறி அழுதான்.

''என்னங்க நேற்று லாட் டரிக் கடைக்காரன் கூப்பிட் டது கடவுள் கூப்பிட்டது போல் இருந்ததா? அல்லது எமன் கூப்பிட்டது போல் இருந்ததா?'' என ரத்தினத் திடம்அமுதா கேட்டு ஒப்பாரி வைத்தாள்,

# உயர்ந்த பெண்மணி

பிரபுக்கள் குடும்பத்தில் பிறந்த ஜென்னி என்னும் பெண், எல்லா சொத்து சுகங்களையும் துறந்து மூலதனம் புத்தகம் எழுதிய கார்ல் மார்க்சைக் காதலித்துக் கல்யாண மும் செய்து கொண்டார்.

இவர்கள் வாழ்க்கை வறுமையிலேயே கழிந்தது. இவர்களுக்குப் பிறந்த பெண் குழந்தை ப்ரான்சிஸ்கா, சளியால் மூச்சுத் திணறி இறந்து போனதையும், அவள் பிறந்த போது தொட்டில் வாங்கவும் வசதியில்லாமல் இருந்தது என்பதையும், தன் சுய குறிப்பில் உருக்கமாக எழுதியுள்ளார் ஜென்னி.

கார்ல் மார்க்சின் கையெழுத்து, அவரே படிக்க முடியாமல் மோசமாக இருந்ததால், கஷ்டப்பட்டுப்படித்து, மார்க்சுக்குச் சொல்வாராம் ஜென்னி.

கான்சர் நோயினால், வேதனையில் துடித்த ஜென்னிக்கு மருந்து வாங்கித் தரவும் முடியவில்லையாம் கார்ல் மார்க்ஸினால், அப்போதும் கணவர் மீது வைத்த அன்பில் குறை வைக்காத ஜென்னி கடைசியில் இறந்து போனார்.

ஜென்னி இல்லையென்றால் கார்ல் மார்க்ஸை உலகமே அறிந்திருக்க முடியாது.

# நீங்களும் சாதிக்கலாம்

- தங்க. காமராஜ் -

நல்ல நோக்கத்திற்காக வாழ்பவர்கள் நினைத்ததை சாதித்து விடுகிறார்கள். சாதனையாளர்களின் வெற் றிக்கு மூலதனமே அறிவும், உழைப்பும் தான். உழைப் பால்உயர்ந்தவர்களை காலம் வெளிச்சம்போட்டு அடையா ளம் காட்டுகிறது. அவர்களை ஒரு வழிகாட்டியாகப் பற்றிக் கொண்டு நடந்தால், நாம் கூட சாதனைச் சிகரத்தை தொட்டு விடலாம்.

### கோவில்பட்டி கதிரேசன்

கார் ஓட்டுநராகப் பணி யாற்றிய கோவில்பட்டியை சேர்ந்த கதிரேசனுக்கு (39) மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக் கழகம் சமீபத்தில் முனைவர் பட்டம் வழங்கி இருக்கிறது.

'குடியரசுத் தலைவர் அப்துல் கலாம்தான் தனக்கு வழிகாட்டி' என்று கதிரேசன் கூறுகிறார்.

குடியரசுத் தலைவர் அப் துல் கலாமிடம் கதிரேசன் ஓட்டுநராக பல ஆண்டுகள் பணியாற்றியிருக்கிறார்.

அப்துல் கலாம் அளித்த ஊக்கத்தினால் தொடர்ந்து படித்து முனைவர் பட்டம் பெற்றுள்ளார்.

ஓட்டுநர்தானே என்று அலட்சியப்படுத்தாமல் கதி ரேசனுக்கு ஊக்கம் கொடுத்து முன்னேற்றிய குடியரசுத் தலைவரை எவ்வளவு பாராட் டினாலும் தகும்.

கதிரேசன் இப்போது கோவில்பட்டியில் மத்திய அர சின் அனைவருக்கும் கல்வித் திட்ட பயிற்சியாளராகப் பணி யாற்றி வருகிறார்,

### நாமக்கல் கனகராஜ்

''கொள்கையில் உறுதி யும், விடாமுயற்சியும் இருந்த தால் நினைத்ததைச் சாதித் தேன்'' என்கிறார் நாமக்கல் கே. கனகராஜ் (27)

ஏழ்மையான குடும்பத்தில் பிறந்து லாரி டிரைவராக பணிபுரிந்த இவர் 8 ஆண்டு கள் முயற்சிக்குப்பின் மருத் துவப் படிப்பில் சேர்ந்துள் ளார்.

சிறுவயதிலேயே தந்தை இறந்துவிட்டார். தாய், சகோ தரர்கள் ஆகியோரது தயவில் படித்தார்.

1993ம் ஆண்டு +2 இறுதித் தேர்வில் 785 மதிப் பெண்கள்தான்எடுத்துள்ளார். மருத்துவப் படிப்பில் சேர வேண்டுமென்ற அவரது

(10-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈ.ஏ.ம. கழகத்தின் மாநில அளவிலான அக்டோபர் மாத கல்விக் குழுக் கூட்டம்

ஈழ ஏதிலியர் மறுவாழ்வுக்கழகத்தின் மாநில அளவிலான கல்விக்குழுக் கூட்டம் 3-10-2002 அன்று சென்னை, எழும்பூரில் உள்ள கழகப்பணிமனையில் மாலை 4 மணியளவில் நடந்தது. கூட்டத்தில் கழகப் பொருளாளர் சந்திரகாசன், வண. சாம்கோயில்பிள்ளை, திருமதி. ரெ. பிறிஜ்ஜெட், ஜே, எம். சாமுவேல், சு. நா. சு. முருகேசு, எம் சகிகாரியஸ், இரா. ஈஸ்வரன் ஆ. இளமுருகன், மு. மகேஸ்வரன், செல்வி. கு. சாந்தகுமாரி, ந. இரவீந்திரராஜா, இரா. பத்மநாபன், எம். அமல்ராஜ், செ அன்புசெல்வராஜ், கு. பாலசிங்கம், சா. செல்வநாயகம், கோ. நாகராஜ் ஆகியோர் கலந்து கொண்டனர். வண. சாம்கோயில் பிள்ளை தலைமை வகித்தார். தமது தலைமையுரையில் அவர் கூறுகையில் இனித் தொடர்ந்து வரும் மாநில அளவிலான கல்விக் குழுக் கூட்ட நிகழ்ச்சி நிரல் தயாரிக்கும் போது தேவையான விபரங்கள் கீழ் மட்டத்தில் இருந்து உருவாக வேண்டும். அதற்கு மண்டலங்கள் மாணவர்களின் வளர்ச்சிக்குத் தேவைப்படும் விடயங்களை ஆராய்ந்து உயர்கல்வி மாணவர் பேரவை மற்றும் மாணவ மன்றங்களில் எடுக்கும் தீர்மானங்கள் மற்றும் முடிவுகளை அடிப்படையாக வைத்து அவர்களின் கல்வி வளர்ச்சிக்குத் தேவையானவற்றைப் பூர்த்தி செய்யும் வகையில் நிகழ்ச்சி நிரல் அமைய வேண்டும். இதனைத்தான் கழகத்திற்கு வருகை தந்திருந்த ESP தொண்டு நிறுவனத்தின் பிரதிநிதி டாக்டர் அருண்கோட்டேங்காரும் குறிப்பிட்டிருந்தார்கள் எனக் கூறினார்.

எனவே மண்டலங்கள் அனுப்பும் நிகழ்ச்சி நிரல் தயாரிப்பதற்குத் தேவையான விடயங்களை ஒவ்வொரு மாதமும் 15ந் திகதிக்குப் பிந்தாமல் அனுப்பி வைக்க வேண்டும் எனக் கேட்டுக் கொண்டார். அதற்கு மண்டலங்களும் ஏற்றுக்கொண்டன.

தொடர்ந்து சென்ற மாதக் கூட்டறிக்கையை கு. பாலசிங்கம் வாசித்தார். அறிக்கையில் திருத்தங்கள் இருக்கின்றனவா? எனத் தலைவர் வினாவியபோது, ஆசிரியர்களின் கலந்துரையாடல் தொடர்பாக இரா. ஈஸ்வரன் தனது பெயரினைக் குறிப்பிட்டிருப்பதாகவும், அதனை நீக்கும்படியும் கூறினார். அதற்கு இணங்க அவரின் பெயர் நீக்கப்பட்டது. இந்த ஒரு திருத்தத்துடன் அறிக்கை சரியென எம். அமல்ராஜ் முன்மொழிய செல்வி கு. சாந்தகுமாரி வழிமொழிய ஏற்றுக்கொள்ளப்பட்டது.

### விளையாட்டு

விளையாட்டுப் பொருட்கள் கொள்வனவு பற்றிப்பேசப்பட்ட போது விளையாட்டுப் பொருட்கள் கொள்வனவு செய்து வழங்குவதற்கு கௌரவப் பொருளாளர் அனுமதி வழங்கியதன் பேரில் பொருட்கள் கொள்வனவு செய்து சென்னை மண்டலத்திற்கு வழங்கிவிட்டதாகவும், மற்றைய மண்டலங்களுக்கு அனுப்பும் தருவாயில் உள்ளதெனவும், விளையாட்டுப் பொருட்கள் வழங்கும்போது விளையாட்டுக் குழுத் தலைவர் கூறும் உறுதிமொழிக் கடிதத்தில் கையொப்பம் பெற்றுக்கொண்டு வழங்குமாறும் சு. நா சு. முருகேசு கேட்டுக்கொண்டார். தொடர்ந்து செ. அன்புசெல்வராஜ் கூறும்போது பந்துகள் யாவும் காற்றடித்து பரிசோதித்துக் கொண்டிருப்பதாகவும், இம்மாதம் 7ம் திகதியளவில் சென்னை தவிர்ந்த அனைத்து மண்டலங்களுக்கும் பொதிசேவை மூலம் அனுப்பி வைக்கப்படும் எனக் கூறினார்.

### குறிப்பேடுகள்

குறிப்பேடுகள் வழங்கப்படாமல் இருந்த கும்மிடிப்பூண்டி முகாமிற்கு முழுமையாக வழங்கப்பட்டுள்ளதென சென்னை மண்டல மாதாந்தக் கூட்டஅறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதென கோ. நாகராஜ் கூறினார்.

ஈரோடு மண்டலம் அகதி விபரத்திரட்டில் சரிபார்த்த மாணவர்கள் விபரம் உள்ளீடு செய்யும் பணி 10 முகாம்களில் முடிவடைந்து விட்டதாகவும், மிகுதியைச் சரிசெய்து இம்மாதம் 15ந் திகதிக்குள் ஒப்படைப்பதாக செல்வி. கு. சாந்தகுமாரி தெரிவித்தார்.

திருச்சி. நெல்லை மண்டலங்கள் அகதி விபரத்திரட்டில் சரி பார்த்த மாணவர்களின் விபரத்தினைக் கல்விக் குழுக் கூட்டத்தில் ஒப்படைத்தனர். சென்னை மண்டலத்தில் 14 முகாம்களில் நிறைவு செய்துள்ளதாகவும் நிறைவு செய்யாத மாணவர்களின் விபரங்களைச் சரி செய்து இம்மாதம் 15ம் திகதிக்குள் ஒப்படைப்பதாகத்தெரிவித்தனர்.

### மாணவ மன்ற அறிக்கைகள்

மாணவர் மன்ற அறிக்கைகள் மற்றும் தொகுப்பறிக்கைகள் மண்டலக் கல்விப் பகுதியினர் பார்வையிடுகின்றனரா? எனப் பொருளாளர் கேட்டதற்கு, செல்வி கு. சாந்தகுமாரி கூறுகையில் ஈரோடு மண்டலத்தில் பத்மநாதன் மாணவர் மன்ற அறிக்கைகளைப் பார்வையிட்டு தொகுப்பறிக்கைகள் வழங்குவதாகவும், இதில் முன்னேற்றங்கள் மற்றும் பின்னடைவுகள் பற்றித் தெரிவிக்கின்றார் எனக் கூறி செப்டம்பர் மாதத்திற்கான தொகுப்பினை வாசித்தார். அதில் நாடு திரும்ப வேண்டிய நிலையில் மாணவர்கள் ஏனோதானோ என்ற நிலையில் இருப்பதாகவும் சுட்டிக்காட்டப்பட்டது. பொருளாளர் கூறும் போது இப்படியான நிலை மாணவர் மத்தியில் இருப்பது தவிர்க்கப்பட வேண்டும் எனவும், இதற்கு வேண்டிய சரியான நிலையை மாணவர்களுக்குத் தெரிவித்து அவர்கள் நம்பிக்கையோடு கல்வியைத் தொடர நாம் அனைவரும் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் கூறினார்.

கோ. நாகராஜ் குறிப்பிடுகையில் மாணவர் மன்ற அறிக்கைகள் பார்வையிட்டு அதன் பிரதிகள் தலைமை அலுவலகம் அனுப்பிவைக்கப்படுவதாகக் கூறினார். தொகுப்பறிக்கைகள் இனி வரும் காலங்களில் அனுப்பி வைப்பதாகவும் தெரிவித்தார்.

இதுபோல் நெல்லை மற்றும் திருச்சி மண்டலத்தினரும் மாணவர் மன்றம் மற்றும் கல்லூரிப் பேரவை அறிக்கைகளின் தொகுப்பினையும் தலைமை அலுவலகம் அனுப்புவதாகத் தெரிவித்தனர்.

அறிக்கைகள் சமர்ப்பிக்காத மாணவர் மன்றங்களின் விபரங்களைத் தலைமை அலுவலகம் அனுப்பி வைத்தால் தலைமை அலுவலகக் கல்விப் பகுதியும் அவர்களுக்கு 'அறிவுரை வழங்கி ஊக்கப்படுத்தி அறிக்கைகளைக் கோரலாம் என சு. நா. சு. முருகேசு தெரிவித்தார்.

தொடர்ந்து பொருளாளர் கூறும் போதும் ஒவ்வொரு மண்டலமும் எதிர் காலத்தில் மாணவர்களுக்கு வேண்டிய நடைமுறைச் சிக்கல்களையும், மாணவர் மத்தியில் உள்ள சந்தேகங்களையும் தீர்ப்பதற்குக் குழு அமைத்து அறிவுரை வழங்குவதால் மாணவர்களுக்கும் பெற்றோர்களுக்கும் தற்போதைய இலங்கை அரசியல் மற்றும் கல்வி தொடர்பான விளக்கங்கள் அறிந்து கொள்ள உதவியாக இருக்கும். இலங்கைப் பிரச்சினை தீர்ந்தாலும் 5ல் இருந்து 10 வருடங்கள் வரை இந்தியாவில் கல்வியைத் தொடர வேண்டிய அவசியம் இருக்கும் என்பது கழகத்தின் எதிர்பார்ப்பு எனக் கூறினார்.

மாவட்டத் தொண்டர்கள் கல்வி தொடர்பான அறிக்கைகளை மண்டலக் கல்விப் பகுதியினருடன் இணைந்து பேசி முடிவெடுக்க வேண்டும் என்றும் அவர்களிடையே நல்லுறவினையும் வளர்த்துக் கொள்ள வேண்டும் என்றும் பொருளாளர் தெரிவித்தார்.

தற்போது இலங்கையில் இருக்கும் சூழ்நிலையை மக்களும் பெற்றோர்களும் மாணவர்களும் சரியாகப் புரிந்து கொள்வதற்கு மாணவர் மன்றங்களில் மற்றும் பேரவைக் கூட்டங்களில் இந்நிலை தொடர்பான பயிலரங்குகள், நாடகங்கள் மற்றும் விவாதங்கள் நடத்துவதன் மூலம் உண்மை நிலையை உணர வைக்கலாம் எனக் கருத்துத் தெரிவிக்கப்பட்டது.

மேலும் இலங்கை வரலாறு, புவியியல் தற்போதைய இலங்கை அரசியலின் நிலை மற்றும் அகதிகளின் வாழ்க்கை விபரங்கள் யாவும் அறிந்த அனுபவமுள்ளவர்களையும், கல்லூரிக் கல்வியை நிறைவு செய்தவர்கள் முகாம்களில் உள்ள அனுபவசாலிகளையும் வைத்து, குழு அமைத்து ஆய்வு செய்து கூட்டு அறிக்கை தயாரித்து ஒவ்வொருமண்டலம் ஊடாக அந்தந்த முகாம்களுக்குப் போய்ச் சேரத்தக்கதாக வழிவகுத்தால் முகாம்களில் உள்ள மக்களும் மாணவர்களும் உண்மை நிலையை அறிந்து நல்ல முடிவினை எடுக்க ஏதுவாய் இருக்கும் என ஏற்றுக் கொள்ளப்பட்டது.

இந்தியாவில் பட்டம் பெற்று இலங்கை திரும்பும் மாணவர்களுக்கு அங்கு ஏற்படும் பிரச்சினைகளையும், வாய்ப்புகளையும் ஆராய்ந்து இனம் கண்டு வெளிப்படுத்தினால் அம்மாணவர்கள் எதிர்நோக்கும் கஷ்டங்களைத் தீர்த்துக் கொள்ள நாம் உதவிடலாம் என சு. நா. சு. முருகேசு தெரிவித்தார். இது விடயமாக ஆராய்ந்து ப. நாகேந்

(10-ம் பக்கம் பார்க்க)

## சமையல் குறிப்புகள்

### பசுமை மாறாத கீரை

சிறிதளவு உப்பைத் தண்ணீரில் கலந்து கீரையைவேக வைத்தால் கீரையின் நிறம் மாறாது. பச்சையாகவே இருக்கும்.

-லட்சுமி

### மிருதுவான இட்லி

இட்லிக்கு அறைத்த மாவில் இரண்டு ஸ்பூன் நல்லெண்ணையைவிட்டு கலந்து வைத்தால், இட்லி மிருதுவாக இருக்கும்.

-சரஸ்வதி

### புளிக்காத தயிர்

தயிர் புளித்துவிடும்நிலை வருகிறபோது அதில் ஒரு துண்டு தேங்காயைப் போட்டு வைத்தால் புளிப்புஏற்படாது.

### சத்தான துவையல்

பருப்புத் துவையல் செய்யும்போது தேங்காய் இல்லாவிட்டால், பூண்டுப் பல்லை வைத்து அறைத்தால் துவையல் சுவையாக இருக்கும். உடலுக்கும் நல்லது.

-பூமாதேவி

### கோதுமை மாவை நாட்பட வைக்காதீர்

கோதுமை மாவை நீண்ட நாட்கள் சேமித்து வைத்துக் கொள்ளக் கூடாது. அவ்வப்போது தேவையான அளவுக்கு அரைத்து உபயோகிப்பதுதான் சிறந்தது உடலுக்கு நலம் தரும்.

### பொங்கல் செய்யும்போது

பொங்கல் வகைப் பதார்த்தங்களுக்கு தேங்காய் துருவி போடுவதற்குப் பதிலாக பொரியை சுத்தம் செய்து பொங்கலின்மீது தூவி இறக்கலாம். புதிய சுவையாக இருக்கும்.

### அன்னாசிப்பழம்

பல் ஈறுகளைப் பாதுகாக்கும் ஒரே பழம் அன்னாசிப்பழம். இது குடற்பூச்சிகளையும் ஒழிக்க வல்லது. வைட்டமின் சி இதில் இருக்கிறது. கிடைக்கும் போதெல்லாம் சாப்பிட வேண்டிய பழம் அன்னாசிப் பழம் ஆகும்.

### கீரைகள்

தினமும் ஒரு கீரையைச் சேர்த்து வந்தால் உடல் தளர்ந்து போகாமல் கட்டுடன் காட்சியளிக்கும் எளிதில் எந்த நோயும் நம்மைத் தொற்றிக் கொள்ளாதபடி நோய்த் தடுப்புச் சக்தியையும் உடலுக்குத் தர வல்லவை கீரைகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈ.எ.ம.க. கல்விக்குழு...

(9-ம் பக்கத் தொடர்ச்சி)

திரன் அறிக்கை சமர்ப்பிப்பார் என ஏற்றுக் கொள்ளப் பட்டது.

10ம் வகுப்பு மதிப்பெண் பட்டியல்

10ம் வகுப்புப் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களின் விபரங்கள் பற்றிப் பேசப்பட்டபோது பள்ளிகளில் இருந்து மதிப்பெண்கள் பெறுவது சிரமமாக இருப்பதாக மாவட்டத் தன்னார்வத் தொண்டர்கள் மூலம் அறிய வந்துள்ளதாக மண்டல ஒருங்கிணைப்பாளர்கள் தெரிவித்தனர். பொருளாளர் கூறுகையில் 10ம் வகுப்புப் பெறுபேறுகள் வெளிவந்து பல மாதங்கள் ஆகியும் பெறுபேறுகள் பெற்று ஒப்படைப்பது அவ்வளவு சிரமமாக உள்ளதா என வினவினார் அதற்கு அக்டோபர் மாதம் 15ந் திகதிக்குள் ஒப்படைப்பதாக அனைத்து மண்டலங்களும் ஒப்புக் கொண்டன. மாணவர் மன்றங்கள் மற்றும் கல்லூரி மாணவர் பேரவை உறுப்பினர்கள் இந்த விடயத்தில் முயற்சி எடுத்தால் பத்தாம் வகுப்பு மாணவர்களின் மதிப்பெண்களைச் சேகரிப்பது இலகுவாக இருக்கும் எனக் கூறப்பட்டது

ஆங்கிலப் பயிற்சி வகுப்பு

ஆஸ்திரேலியாவைச் சேர்ந்த திருமதி மிஸ்கா எதிர் வரும் நவம்பர், டிசம்பர் மாதங்களில் மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் ஆங்கில வகுப்பு நடாத்த இருப்பதினால் மண்டல வாரியாக அண்மித்துள்ள 2,3 முகாம்களில் உள்ள மாணவர்களைத் தெரிவு செய்வதினால் எல்லாவற்றுக்கும் வசதியாக இருக்கும் எனக் கூறப்பட்டது. அதற்குத் தகுந்தவாறு மாணவர்களைத் தெரிவு செய்து பட்டியல் அனுப்ப வேண்டும் எனக் கேட்டுக்கொள்ளப்பட்டது. திருமதி மிஸ்கா தங்குவதற்கு ஒழுங்குகளையும் மண்டலங்களே கவனித்துக்கொள்ள வேண்டும் எனத் தீர்மானிக்கப் பட்டது.

ஈழத்தமிழர் தொன்மை

ஈழத் தமிழர் தொன்மை பற்றிப் பேசப்பட்ட போது ஆசிரியர்களிடம் இருந்து தொகுப்புகள் ஏதும் கிடைக்கவில்லை என்றும், அவர்களுக்கு ஞாபகமூட்டிக் கதைகள் எழுதி அனுப்புமாறு கேட்பதாகவும் மண்டலக் கல்விப் பகுதியினர் கூறினார்கள் இது தொடர்பாக இயேசு சபை அகதிகள் சேவை நிறுவனம் கூடிய அக்கறை காட்டி வருவதாகவும், சில முக்கிய அம்சங்கள் மாணவர் விடியலில் வெளிவருவது மகிழ்ச்சிக்குரியது எனவும் கூறப்பட்டது.

கல்லூரி அனுமதிகள்

2002-2003ம் கல்வியாண்டில் கல்லூரிகளில் அனுமதி பெற்ற மாணவர்கள் விபரங்கள் மண்டலங்களால் சமர்ப்பிக்கப்பட்டு உள்ளதாகவும், ஆனால் 12ம் வகுப்பு தேர்ச்சியடைந்ததும் கல்லூரிகளில் சேராதோர் விபரங்களும், காரணங்களும் இதுவரை கிடைக்கவில்லை. எனவே அவற்றைக் காலம் தாழ்த்தாது மண்டலங்கள் அனுப்பி வைக்க வேண்டும் எனக் கேட்டுக் கொள்ளப் பட்டது. இதற்கு உயர் கல்வி மாணவர்களின் உதவியை நாடலாம் எனப் பேசப்பட்டது.

கல்லூரிகளில் சேர்ந்த மாணவர்களின் விபரங்கள் குறிப்பாக கல்லூரியின் தெளிவான முழு முகவரியுடன் காலம் தாழ்த்தாது அனுப்பி வைத்தால் அவ்விபரங்கள் அரசிற்கும், கல்லூரி முதல்வர்களுக்கும் நன்றிக் கடிதங்கள் அனுப்பி வைக்க வசதியாக இருக்கும் எனவும் அதனால் கல்லூரி முதல்வர்கள் எமது மாணவர்களின் மேல் அதிகக் கவனம் செலுத்தவும் வழிவகுக்கும் எனவும் சு.நா.சு. முருகேசு கூறினார்.

பிரகாஷ் பாலன் அறக்கட்டளை

பிரகாஷ் பாலன் அறக்கட்டளை நிறுவனக்கல்வி உதவி தொடர்பாகப் பேசப்பட்டபோது கடந்த வருடம் நிறுவனம் கேட்டுக் கொண்டதற்குப் பொருத்தமான பாடங்களைக் கொண்ட மாணவர்கள் பட்டியல் பெற்றுக் கொள்ள முடியவில்லை. இவ்வருடம் நேர்காணலின்போது மாணவர் பெயர்கள் சேகரிக்கப்பட்டுள்ளதாகவும், திருச்சி மண்டல நேர்காணல் முடிவுற்றதும் பட்டியல் தயார் செய்து பிரகாஷ் பாலன் நிறுவனத்துக்கு அனுப்ப நடவடிக்கை எடுக்கலாம் எனவும் சு.நா.சு. முருகேசு கூறினார்.

பாலர் பள்ளி

பாலர் பாடசாலைகளில் நியமனம் பெற்றுள்ள ஆசிரியர்கள், ஆயர்கள் மற்றும் பணி முதிர்ச்சி பெற்ற ஆசிரியர்களுக்கு எதக் கொடுப்பனவுகள் பற்றி ஒரு பொது முடிவு எடுக்கப்பட்டுள்ளது. இதனை நன்கு அறிந்து தெளிவான அறிக்கை சமர்ப்பிக்குமாறு பொருளாளர் கேட்டுக்கொண்டார். ஆசிரியர்களுக்கான கூட்டங்களுக்கு செலவினங்களைக் கழகமும், JRS பகிர்ந்து கொள்வதால் மண்டலங்களில் செலவாகும் தொகை 10000/-ம் ஏற்றுக் கொள்ளலாம் எனப் பொருளாளர் கூறினார்.

வருடாந்த அறிக்கை

செயலாளர் பேசும் போது வருடாந்த கல்வி அறிக்கை தயாரிக்கும் போது கல்லூரிகளில் மாணவர்கள் அனுமதி பெறும் போதும், கல்வியை மாணவர்கள் இடை நிறுத்தி மீண்டும் தொடரும் போதும் பல கஷ்டமான சூழ்நிலையில் மாணவர்கள் கல்வியைத் தொடரும் போதும் பல இன்னல்களைச் சந்தித்துவருகின்றனர். அந்த இடர்ப்பாடுகளைத் தீர்த்துக்கொள்ள மாணவர்களும், கழகத் தொண்டர்களும் கையாண்ட விதத்தினை ஆண்டறிக்கையில் குறிப்பிட்டால் ஆண்டறிக்கை உயிரோட்டம் உள்ளதாக இருக்கும். தொடர்ந்து அவர்பேசும்போது வைத்தீஸ்வரன் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் அனுமதி பெற்று, கல்வி பயின்று கொண்டிருக்கையிலேயே அதிக மதிப்பெண்கள் பெறுவதற்கு 12ம் வகுப்புப் பரீட்சையில் மீளத் தோன்றி அதிக மதிப்பெண்கள் பெற்று மருத்துவக் கல்லூரியில் அனுமதி பெற்றுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. இது ஒரு மாணவனுடைய தனி முயற்சியைக் காட்டுகின்றன.

முன்பு மாணவர்களுக்குக் கல்லூரிகளில் அனுமதி பெற்றுக் கொடுப்பதற்குத் தலைமை அலுவலகத் தொண்டர்கள் தான் செல்ல வேண்டிய நிலையிருந்தது. இப்போது அக்கல்லூரியில் பயிலும் உயர்கல்வி மாணவர்கள் மற்றும் கல்லூரிக் கல்வியை நிறைவு செய்த மாணவர்களே கல்லூரியில் அனுமதிகளைப் பெற்றுக் கொடுக்கின்றார்கள். இது மாணவர்கள் மாணவர்களுக்கு உதவிடுதலையும், அவர்களுக்கு ஏற்பட்டுள்ள கல்வி வளர்ச்சியையும் விழிப்புணர்வையும் காட்டுகிறது. இவற்றையும் குறிப்பிடலாம் என்றார்.

இறுதியாக வண. சாம்கோயில்பிள்ளை கூட்டத்திற்கு வருகை தந்து கலந்து கொண்ட அனைவருக்கும் நன்றி கூறி இனிதே கூட்டத்தினை மாலை 6-30 மணிக்கு நிறைவு செய்தார்.

அடுத்த மாநில அளவிலான கல்விக் குழுக் கூட்டம் நவம்பர் மாதம் 2ம் திகதி நடத்தலாம் எனத் தீர்மானிக்கப் பட்டது.

# சாதிக்கலாம்..

(8 ம் பக்கத் தொடர்ச்சி)

ஆசை நிறைவேற வில்லை. இந்நிலையில் குடும்பத்தைப் பிரிந்து வேலைக்குச் சென்றார். லாரியில் கிளீனராக வேலை பார்த்தார். பின்னர் டிரைவராக பணிபுரிந்தார்

இதற்கிடையில் +2 இம்ப்ரூவ்மெண்ட் தேர்வை எழுதி, கூடுதல் மதிப்பெண் பெற்றார். நுழைவுத் தேர்வு எழுதினார். தோல்வியடைந்தார்; விடவில்லை. மூன்று முறை தொடர்ந்து எழுதினார். மூன்றாவது முறை வெற்றி அடைந்தார். தூத்துக்குடி மருத்துவக் கல்லூரியில் இடம் கிடைத்தது.

டிரைவராக வேலை பார்த்து சேமித்து வைத்திருந்த பணத்தை செலுத்தி படிப்பைத் தொடங்கியிருக்கிறார்.

கோவில்பட்டி கதிரேசன், நாமக்கல் கனகராஜ் போன்ற இன்னும் எத்தனையோ இளைஞர்கள் சாதனைபுரிந்து வருகிறார்கள்.

படிக்க வசதியில்லை, என்று சாக்குப் போக்கு சொல்லி முடங்கிப் போகாமல் உழைக்க துணிந்து விட்டால் நீங்களும் சாதிக்கலாம்.

## பெண் மலடு நீங்க...

○ அரசமர விதையை, பசும்பாலிட்டு அரைத்து ஒரு டம்ளர் பாலில் கலந்து குடிக்க, கருத்தரிக்கும்.

○ கொட்டைப் பாக்கை தூசு நீக்கி வெயிலில் உலர்த்திப் பொடி செய்து மாதவிலக்கின் முதல் நாளன்று பசும்பாலில் போட்டுச் சாப்பிட்டால் கரு உண்டாகும்.

○ பொன்னாவரை விதையைத் தண்ணீரில் அரைத்துச் சாப்பிட மலடு நீங்கும்.

## ஆண் மலடு நீங்க...

○ தூதுவளைப்பூ, முருங்கைப்பூ ஆகியஇரண்டையும் உலர்த்தி, உரலிலிட்டு இடித்து, அத்துடன் சம அளவு கற்கண்டு சேர்த்துக் காய்ச்சிய பசும்பாலுடன் 24 நாள்கள் சாப்பிட்டு வந்தால் தாதுபலம் அடையும்.

○ அதிமதுரத்தை அரைத்துப் பாலில் கலந்து அதில் தேனையும் விட்டுக் குடித்துவர தாதுபலம் பெருகும்.

○ காலையில் எழுந்ததும் பொன்னாங்கண்ணி இலைகளைப் பிடுங்கி அலசி, வாயிலிட்டு மென்று சாப்பிட வீரியம் விருத்தியாகும்.

# எமது சொந்த இடங்களில் மீளக்குடியமர அனுமதியுங்கள்

### கொழும்புத்துறை மக்கள் கோரிக்கை

அமைதி நிலை தோன்றியுள்ள போதிலும் கொழும்புத்துறை மக்கள் தமது சொந்த வீடுகளில் மீளக் குடியமர முடியாத நிலையில் வாழ்ந்து வருகின்றனர். இந்த மக்களை தமது சொந்த இடங்களில் மீளக் குடியமர்த்தி நிவாரண உதவிகளைப் பெற்றுத்தருமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

கொழும்புத்துறை பிரதேசத்தில் உள்ள பொது அமைப்புக்கள் ஒன்றுசேர்ந்து சம்பந்தப்பட்ட மக்களின் கையொப்பங்களுடன் இக் கோரிக்கை அடங்கிய மகஜரை அகதிகளுக்கான ஐ.நா. தூதரக யாழ். வதிவிடப் பிரதிநிதியிடம் கையளித்துள்ளனர். அந்த மகஜரில் அடங்கிய கோரிக்கைகள் வருமாறு:-

1. கொழும்புத்துறை இந்து மகா வித்தியாலயத்திற்குச் செல்லும் மாணவர்களின் நலன்கருதியும் விநாயகர் ஆலயம் செல்லும் அடியார்களின் நலன் கருதியும் இராணுவத்தினரால் மூடப்பட்டுள்ள விபுலானந்தர் வீதியை போக்குவரத்திற்காக உடன் திறந்துவிட வேண்டும்.

2. விபுலானந்தர் வீதி, சுவாமியார் வீதி ஆகிய இடங்களில் மக்களின் வீடுகளில் தங்கியிருக்கும் இராணுவத்தினரை இடம் தகர்த்தி வீடுகளில் மக்கள் மீள்குடியமர அனுமதிக் வேண்டும்.

கொழும்புத்துறை இந்து மகா வித்தியாலயம், விநாயகர் ஆலயம், சன சமூக நிலையம் போன்ற பகுதிகளைச் சூழவுள்ள வீடுகளில் தங்கியிருக்கும் இராணுவத்தினரை வேறு இடத்திற்கு மாற்றி உதவவேண்டும் என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரு குறளை உணர்வோம்

## ஆகூழும் போகூழும் வள்ளுவர் சொல்வதென்ன?

:- அருகோ :-

''ஆகூழால் தோன்றும் அசைவின்மை கைப்பொருள்
போகூழால் தோன்றும் மடி''

-திருக்குறள்: 371

பரிமேலழகர்: கைப்பொருள் ஆகு ஊழால் அசைவின்மை தோன்றும்-ஒருவற்குக் கைப்பொருள் ஆதற்குக் காரணமாகிய ஊழால் முயற்சி உண்டாம்; போகுஊழால் மடிதோன்றும்-அஃது அழிதற்குக் காரணமாகிய ஊழால் மடி உண்டாம் என்றவாறு.

'ஆகூழ்' 'போகூழ்' என்னும் வினைத்தொகைகள் எதிர்காலத்தான் விரிக்கப்பட்டுக் காரணப் பொருளவாய் நின்றன. அசைவு-மடி. பொருள்கள் ஆக்க அழிவுகட்குத் துணைக்காரணமாகிய முயற்சி மடிகளையும் தானே தோற்றுவிக்கும் என்பது கருத்து.

மணக்குடவர்: ஒருவனுக்கு ஆக்கங் கொடுக்கின்ற ஊழ் தோன்றினால் முயற்சி தோன்றும்; அழிவு கொடுக்கின்ற ஊழ் தோன்றினால் மடி தோன்றும் என்றவாறு.

இஃது ஆக்கத்திற்கும் கேட்டிற்கும் ஏதுவான முயற்சியும் முயலாமையும் ஊழான் வரும் என்றது.

பரிதியார்: ஊழாவது போன சென்மத்தில் செய்த நல்வினை தீவினை என்க. அஃது இரண்டு வகைப்படும். அவையாவன: ஆகிற ஊழ் என்றும், அழிகிற ஊழ் என்றும் கொள்க. ஆகிற ஊழ் புத்தியைத் தரும்; அழிகிற ஊழ் சோம்பினைக் கொடுக்கும். ஆகையால் ஆகிற ஊழைக் கொள்க என்றவாறு.

காளிங்கர்: உலகத்து யாவர்க்கும் மேனின்ற முறையாகுவதோர் ஆகூழினால் அவ்வவர் நெஞ்சின் கண் தோன்றும் யாதொரு வினையில் அதற்கு ஏற்ற மடியின்மை; இனி இவ்வாறின்றித் தம்மிடத்து எய்திய பொருளும் நீங்கிப் போதவதோர் போகூழினால் அவரவர் நெஞ்சில் தோன்றும் மடியானது என்றவாறு.

அசைவின்மை என்படி மடியின்மை.

நாமக்கல் கவிஞர் இராமலிங்கனார்: செல்வம் வர வேண்டிய நல்வினைப் பயன் வரும்போது சோர்வில்லாத மன உறுதி உண்டாகும். உள்ள செல்வம் போக வேண்டிய தீவினைப் பயன்கள் வரும்போது சோம்பல் உண்டாகி விடும்.

தேவநேயப் பாவாணர்: ஒருவன் கையிற் பொருள் சேர்வதற்குக் காரணமான நல்லூழால் முயற்சி உண்டாகும். அவன் கையிலுள்ள பொருள் தீர்தற்குக் காரணமான தீயூழால் சோம்பல் உண்டாகும்.

டாக்டர் மு.வ.: கைப்பொருள் ஆவதற்குக் காரணமான ஊழால் சோர்வில்லாத முயற்சி உண்டாகும்; கைப்பொருள் போவதற்குக் காரணமான ஊழால் சோம்பல் ஏற்படும்.

பேரா.பே.சு. கோவிந்தராசன்: இன்னது செய்தால் இன்னது என்பதைத் தெளிவாக உணர்ந்து ஒழுங்கான முறையாகச் செயல்பட்டால் தொய்வு இல்லாத முயற்சி தொடரும் அவ்வாறன்றி ஒழுங்கற்ற முறையில் செயல்பட்டால் உள்ள பொருள் இழப்பதுடன் சோம்பலும் தோன்றும்.

அருகோ: ஆகூழால் அசைவின்மை தோன்றும்-ஆகக் கூடியவைகளே நடைபெறும் சாதகமான காலத்தில் உள்ளம் எழுச்சி பெற்றிட முறியா முயற்சிகள் ஒன்றன்பின் ஒன்றாகத் தோன்றியபடி இருக்கும். கைப்பொருள்-தான் தேடாமல், தன் முன்னோரால் தேடிவைக்கப்பட்டிருக்கும் ஆள் அம்பு செல்வம் போன்ற பொருள்கள்; போகூழால் மடிதோன்றும்-தன் முயற்சியால் தேடியவை மட்டுமல்ல, தன் முயற்சியில்லாமலே தேடி வைக்கப்பட்டிருக்கும் முற் சொன்ன பொருள்களும் உரிய பயன் தாராமல் கைவிட்டுப் போய் விடக்கூடிய நிகழ்வுகளே நடைபெறும் பாதகமான காலத்தில் தோல்வி மனப்பான்மையே மிதம் சோர்வும் சோம்பலுமே ஏற்பட்டபடி இருக்கும்.

எந்த மாந்தனுக்கும் அவன் தோன்றிய போதும், [illegible]

காலச் சூழல் எனதாக இருக்கையில் எழுச்சியும் எண்ணற்ற புதிய புதிய முயற்சிகளும் அவனையறியாமலே அவனிடம் தோன்றி வெற்றிகளைக் குவித்துக் கொண்டே இருக்கும்.

அவனுடைய முயற்சியில்லாமலே அவனுக்கு வாய்த்திருக்கும் ஏந்துகளும் பறி போய் விடக்கூடிய பாதகமான காலச் சூழலில், உள்ளச் சோர்வினால் சோம்பலும் முயற்சியின்மையும் அவனையறியாமலே அவனிடம் குடிகொண்டு விடுகின்றன.

இந்த சாதக-பாதகமான காலச்சூழலைத்தான் ஆகூழ் போகூழ் என்று அழகுபடச் சொல்கிறார் திருவள்ளுவர்.

தான் பிறந்த காலச்சூழல் ஆகியவற்றை ஆராய்ந்து அறிந்து கொண்டு, தன்னைத் தான் நிறுவிக் கொள்வதே வாழ்வில் வெற்றி பெற விரும்பும் ஒரு மாந்தனுக்கு இன்றியமையாததாகும் என்பதையே இக்குறட்பா மூலம் திருவள்ளுவர் உணர்த்துகின்றார்.

''ஏ மாந்தனே! உன் குடும்ப நிலைக்குப் பாதகமான காலச் சூழலில் நீ பிறந்து, அந்தப் பாதகமான காலச் சூழலிலேயே உன் சொந்த முயற்சிகளைத் தொடங்க வேண்டிய நிலையில் நீ இருந்தால் சோர்வும் சோம்பலும் தோல்வி மனப்பான்மையும் உன்னிடம் தோன்றத்தான் செய்யும். அவற்றில் அமிழ்ந்து விடாமல் நிமிர்ந்து நின்றால்தான் நீ [illegible] முடியும்'' என்கிறார்.

ஊழி-ஒரு சகாப்தம்           ஊழ்-சூழ்கின்ற காலத்தின்

## சிங்கம் புலியைத் தின்று விட்டதா? சிங்களர் தமிழரை வென்று விட்டனரா?

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

அதிலும் நூற்றுக்கு நூறு நாடு திரும்பக்கூடிய ஈழ அகதி மக்கள் வாழும் இந்தியாவில் அக்கடமை அதிகமாகவே உள்ளது. அதற்கு இந்த மக்களைப் பக்குவப்படுத்த வேண்டிய புதிய பொறுப்பும் தற்போது ஏற்பட்டுள்ளது. அதேவேளை இந்திய உள்நாட்டு அரசியலில் தலை போடாமலும், மத்திய மாநில அரசுகளில் ஐயப் பார்வை ஏற்படுத்தும் அரசியலில் தலை போடாமலும், மத்திய மாநில அரசுகளின் ஐயப்பார்வை ஏற்பட்டு விடாமலும் இதை முன்னெடுக்க வேண்டியது அவசர அவசியமாகும்.

ஏனெனில் ஈழத் தமிழ் மக்களின் விருப்பத்திற்கேற்ப சமாதானத் தீர்வை நோக்கி இலங்கையை நிர்ப்பந்திக்க வேண்டிய சர்வதேசச் சூழலை இந்தியாவை முன்னெடுக்கச் செய்வதன் மூலம்தான் ஏற்படுத்த முடியும். அந்த வகையில் ஈழத்தமிழர் பாதுகாப்புக் கழகத்தின் முயற்சிகள் அமைந்துள்ளன.'

இது விடயத்தில் கழகம் கடுமையாக உழைத்திராவிட்டால் பெரும்பாலான நாடுகள் ஈழ அகதிகளைத் திருப்பி அனுப்பி வைத்திருக்கும். ஏன், இந்தியாவிலுள்ள அகதிகளைக்கூட அவசரக் கோலத்தில் அழைத்துக் கொண்டு போய், பிரச்சினை தீர்ந்து விட்டது போன்ற தோற்றத்தை சிறீலங்கா அரசு ஏற்படுத்தியிருக்கும்.

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்காக ஸ்ரீலங்கா அரசும் புலிகளும் நார்வே நாட்டின் சமரச முயற்சியின் பேரில் 16-9-02 அன்று தாய்லாந்தில் சந்தித்து முதற்கட்டப் பேச்சு வார்த்தையை நடத்தியுள்ளார்கள்.

முன்னதாக ஏற்பட்ட போர் நிறுத்தம் மற்றும் புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் காரணமாக இலங்கையில் வடக்கு கிழக்கில் தமிழீழத்தில் மக்கள் மூச்சுவிட முடிந்திருக்கின்றது இதை வரவேற்கின்றோம். ஆனால் அதைக் காட்டியே இந்தியாவில் உள்ள ஈழ அகதி மக்களை நாடு திரும்ப வைப்பதற்கான முயற்சியில் ஸ்ரீலங்கா அரசு ஈடுபட்டது சரியல்ல. காரணம் இந்தியாவிலுள்ள அகதி மக்கள் திரும்பி விட்டால், உலகின் மற்ற நாடுகளில் உள்ள ஈழ அகதிகளை அந்நாடுகளின் அரசுகளே திருப்பி அனுப்பிவிடும். அப்படி நடந்து விட்டால், உலக அளவில் தமிழர்களுக்கான ஆதரவுக்குரல் அடங்கிவிடும் என்று ஸ்ரீலங்கா அரசு கணக்குப் போட்டது; இது சரியல்ல

இதற்காகவே, பத்து ஆண்டுகளுக்கும் மேலாக இந்தியாவில் ஈழத் தமிழ் மக்கள் முகாம்களில் அகதிகளாக வாழ்ந்து வந்தும் எட்டிப் பார்க்காத ஸ்ரீலங்கா அரசாங்கம், இம்முறை தனது அமைச்சர் ஒருவரை அகதி முகாமிற்கே அனுப்பிவைத்தது.

ஆனால், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் ''இலங்கையில் நிரந்தரத் தீர்வு ஏற்படாமல், அமைதிக்கும், மக்களின் பாதுகாப்பான வாழ்க்கைக்கும் உரிய உத்தரவாதம் ஏற்படாமல் அகதி மக்கள் நாடு திரும்புவதில் அர்த்தமில்லை'' என்று அந்த அமைச்சர் முன்னிலையிலேயே திட்டவட்டமாக அறிவித்து விட்டதாலும்' அகதிமக்களும் 'அங்கு நிரந்தரத் தீர்வு ஏற்படாமல் தாங்கள் திரும்புவது சாத்தியமில்லை'' என்று பெருவாரியானவர்கள் சார்பில் கருத்துத் தெரிவித்து விட்டதாலும் ஸ்ரீலங்கா அரசு அந்த முயற்சியை அத்துடன் நிறுத்திக் கொண்டது.

அப்பாவி அகதி மக்களைத் திரிசங்கு சொர்க்கத்தில் நிறுத்தாமல் தெளிவான நிலைப்பாட்டை அறிவித்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி ஜெயலலிதா அவர்களுக்கு இந்தச் சந்தர்ப்பத்தில் நாம் நன்றி கூறிக் கொள்கின்றோம்.

அதுபோலவே ஊசலாட்டத்திற்கு இடங்கொடாமல் உறுதியான நிலைப்பாட்டை மேற்கொண்ட அகதிமக்களையும் பாராட்டுகின்றோம்.

நம்மைப் பொறுத்தவரை இலங்கை இனப்பிரச்சினையில் தமிழ்மக்களின் அபிலாசைகளுக்குப் பங்கமில்லாத தீர்வு ஏற்பட்டு, நிலையான சமாதான சனநாயக சகவாழ்வு உறுதிப்பட்ட பின்பு அகதி மக்கள் நாடு திரும்ப வேண்டும் என்றே எதிர்பார்க்கின்றோம். அதுவரை இந்திய நாட்டுச் சட்ட திட்டங்களுக்கு உட்பட்டு, அகதி மக்கள் கட்டுப்பாட்டோடு வாழ்ந்து வருவதையே விரும்புகின்றோம்.

தாய்லாந்துப் பேச்சு வார்த்தையின் முதல் சுற்றிலேயே 'சிங்கம் புலியைத் தின்று விட்டது' ஆம், சிங்களப் பேரினவாதத்துடன் இணங்கிப்போய், ஈழத்தைக் கைவிட்டு, ஏற்புடையதைப் பெற்றுக் கொள்வோம் என்று, தமிழ்மக்களின் ஏகப்பிரதிநிதிகள் பாத்திரமேற்ற புலிகளின் சார்பில் தெரிவிக்கப்பட்டு விட்டது சனநாயகப் போராட்டமுறை மூலம் சாதிக்க முடியாததை ஆயுதப் போராட்டத்தின் மூலம் சாதிப்போம் என்று கூறிக் கொண்டு ஈழத்தில் சனநாயகச் செயற்பாடுகளுக்கே முற்றுப்புள்ளி வைத்து, அத்தகு தலைவர்களையெல்லாம் தட்டி முடித்த புலிகள் தங்கள் கெட்டிக்காரத்தனத்தின் மூலம் 'சாதிக்கப் போவது என்ன என்பதைக் காட்டிவிட்டனர். ஈழத்தின் இலட்சியவாதிகள் எல்லாம் இதுகண்டு விக்கித்து நிற்கின்றனர். வழக்கம் போல் இந்தப் பின்னடைவையும் சரிக்கட்டிக் கொண்டு ஈழத் தமிழினம் இயன்ற வழிகளில் எல்லாம் இலட்சியத்தை முன்னெடுத்துச் செல்லும் அதற்கு ஈழத் தமிழர் பாதுகாப்புக் கழகம் உற்றுழி உதவி புரியும் என்பதைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

-ஈழத் தமிழர் பாதுகாப்புக் கழக 2001-2002 ஆண்டிற்கான ஆண்டறிக்கையிலி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முஸ்லிம்களை முன்னே விட்டு தாய்லாந்துச் சமாதானப் பேச்சைக் குலைக்க அரசு திட்டமா?

### அம்பாறை முஸ்லிம் பகுதியில் மறியல் கல்முனைக்கு கமாண்டோ அனுப்பி வைப்பு

இம்முறை தாய்லாந்துப் பேச்சுவார்த்தையைக் குழப்ப சிறீலங்கா அரசு முஸ்லிம்களைத் துருப்புச் சீட்டுக்களாகப் பயன்படுத்தும்போலத் தெரிகிறது. கிழக்கு மாகாண முஸ்லிம்கள் மத்தியிலும், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரசிலும் ஏற்பட்டு வரும் குழப்படிகளின் உச்சக் கட்டமாக இப்போது வடக்கு கிழக்கில் முஸ்லிம்களுக்குத் தனி அலகு என்பதை முன் வைத்து கிளர்ச்சிகளும் போராட்டங்களும் முடுக்கிவிடப் பட்டுள்ளன.

அம்பாறை மாவட்டக் கரையோரப் பிரதேசத்திலுள்ள முஸ்லிம் பகுதிகளில் ஜும் ஆதொழுகைக்குப் பின்னர், முஸ்லிம்களின் பாதுகாப்பு, அரசியல் உரிமை என்பனவற்றுக்கு உத்தரவாதம் ஏற்படுத்தப்பட வேண்டும் எனக் கோரி மறியல் போராட்டம், ஆர்ப்பாட்டப் பேரணி என்பன நடைபெற்றன.

இங்குள்ள ஜும்ஆ பள்ளி வாசலுக்கு முன்னால் நடைபெற்ற ஆர்ப்பாட்டங்களில் பெருந்திரளான முஸ்லிம்கள் கலந்து கொண்டனர்: இளைஞர்கள் பல சுலோகங்கள் அடங்கிய பதாதைகளை ஏந்திச் சென்றனர்.

"சிறீலங்கா அரசே! அடுத்த பேச்சு வார்த்தைக்கு முன் முஸ்லிம்களுக்கான தீர்வு என்ன என்பதை வெளிப்படுத்து"

"சிறீலங்கா அரசே வடக்கு கிழக்கு வாழ் முஸ்லிம்களை நட்டாற்றில் விட்டு விடாதே!

முஸ்லிம்களின் தனித்துவ அதிகார அலகை உத்தரவாதப்படுத்து."

'சிறீலங்கா அரசே! முஸ்லிம்கள் பாதுகாப்புடனும் [illegible]

கௌரவத்துடனும் வாழ்வதற்கு வழியேற்படுத்து."

பாராளுமன்றத்தை பகிஷ்கரிக்கும் முஸ்லிம் காங்கிரசின் பாராளுமன்ற உறுப்பினர்களின் நடவடிக்கைகளை நாங்கள் வரவேற்கின்றோம், அவர்களுக்கு எங்கள் முழு ஆதரவையும் வழங்குவோம்."

இப் பிரதேசங்களில் இவ் வாசகங்கள் அடங்கிய சுவரொட்டிகளும் பரவலாக ஒட்டப்பட்டிருந்தன.

கல்முனை, மருதமுனை, நற்பிட்டிமுனை, கல்முனைக்குடி, சாய்ந்தமருது. மாவடிப் பள்ளி, சம்மாந்துறை, நிந்தவூர், ஒலுவில்பாலமுனை, அட்டாளைச்சேனை, அன்னைப்பற்று, பொத்துவில் இறக்காமம், வரிப்பத்தான், சேனை, சென்ட்ரல் கேம், மஜீதியாபுரம் ஆகிய முஸ்லிம் பிரதேசங்களிலுள்ள பள்ளி வாசல்களுக்கு முன்னால் இம் மறியல் போராட்டம், பேரணி என்பன நடைபெற்றன.

அம்பாறை மாவட்ட முஸ்லிம் அமைப்புக்களின் ஒன்றியம் ஆர்ப்பாட்ட பேரணிக்கான அழைப்பை விடுத்திருந்தது.

அரசால் கமாண்டோக்கள் சிலரும் அனுப்பி வைக்கப்பட்டிருந்தனர். இவர்கள் கல்முனை சந்தாங்கேணி விளையாட்டு மைதானத்தில் வந்திறங்கினர்.

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

வேண்டும். சகல ஒட்டோ சாதிகளும் இந்தப் போராட்டத்தில் இணைய வேண்டும்.

**யாழ். நல்லூர் பொது அமைப்புக்களின் ஒன்றியம்**

சமாதானசூழ்நிலையைக் குழப்பும் நடவடிக்கைகள் மட்டக்களப்பில் ஆரம்பித்து திருகோணமலைக்குப் பரவி விட்டன. இந்த நடவடிக்கைகளை சமாதானத்தில் நாட்டம் உள்ள சகலரும் ஒன்று திரண்டு எதிர்க்க வேண்டும். சகல சேவைகளையும் ஸ்தம்பிதம் அடையச் செய்து சகலரும் ஹர்த்தாலில் தங்கள் பங்களிப்பை உணர்வு பூர்வமாக அளிக்க வேண்டும். உயிரிழந்த எமது உடன் பிறப்புகளுக்காக அஞ்சலியையும் வெளிப்படுத்த வேண்டும்.

### யாழ்ப்பாண மாவட்டத்தில்

# சிறு கைத்தொழில் அபிவிருத்தி சம்மேளனம் நடவடிக்கை

இலங்கைச் சிறு கைத்தொழில் சம்மேளனத்தைச் சேர்ந்த 16 வர்த்தகர்கள் யாழ்ப்பாணத்தில் ஆரம்பிக்கக் கூடிய சிறு கைத்தொழில்கள் குறித்து ஆராய இங்கு வருகை தந்துள்ளனர். யாழ். மாவட்டத்தில் இயங்கும் சிறு கைத்தொழில்கள் அவற்றை அபிவிருத்தி செய்வதற்கான வழிகள், தேவையான உதவிகள் ஆகியன தொடர்பாக இவர்கள் ஆராய்வார்கள். இன்று காலை யாழ். ப.நோ.கூ.சங்க கேட்போர் கூடத்தில் வர்த்தகப் பிரமுகர்களையும் சிறுகைத் தொழிலாளர்களையும் இவர்கள் சந்தித்துக் கலந்துரையாடவிருக்கின்றனர்.

மேற்படி சம்மேளனம் தங்களது செயற்பாடு குறித்து விடுத்துள்ள செய்திக் குறிப்பு வருமாறு:-

இலங்கை சிறு கைத்தொழிற் சம்மேளனம் 1963ஆம் ஆண்டில் ஒரு சிறு கைத்தொழில் சங்கமாகவே 27 ஆரம்ப உறுப்பினர்களுடன் ஆரம்பித்தது 40 வருட வளர்ச்சியில் இன்று 360 உறுப்பினர்களுடன் சம்மேளனமாகப் பரிணமித்துள்ளது. 1976 இல் சங்கத்தின் 18 உறுப்பினர்கள் யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்து குறிப்பிட்ட எண்ணிக்கையினரான கைத்தொழில் அதிபர்களைச் சந்தித்து கூட்டமொன்றையும் நடத்தியிருந்தனர். அக்காலத்தில் ஒரு சில கைத்தொழில் அதிபர்களே உறுப்பினர்களாகச் சேர்ந்திருந்தனர். இன்று நட்புக்கரங்களை நீட்டிய படி சம்மேளத்தினர் யாழ்ப்பாணம் வந்துள்ளனர். இது பிரதமரும், விடுதலைப் புலிகளின் தலைவரும் நோர்வேயின் அனுசரணையுடன் ஒப்பந்தமொன்றைச் செய்து கொண்டதால் சாத்தியமாகியிருக்கிறது,

சிறு கைத்தொழிற்சங்கம் என்ற நிலையிலிருந்து சம்மேளனம் என்ற அந்தஸ்திற்கு இதனை கிரமமுறையாக வளர்த்தவர்கள்பலர். அவர்களால் தொடக்கப்பட்ட கைத்தொழில் நிறுவனங்கள் இன்றும் புகழுடன் திகழ்கின்றன. இன்று நாட்டின் முன்னணி கைத்தொழில் நிறுவனங்களுடன் நிகராக இலங்கைக் கைத்தொழில் சம்மேளனம் திகழ்வதற்கு இந்த முன்னோடிகளின் அர்ப்பணிப்பே காரணமாகும்.

வட பிராந்தியத்தின் சிறிய நடுத்தர கைத்தொழில் நிறுவனங்களை இணைத்து ஒரு சங்கத்தை நிறுவுவதே சம்மேளனத்தின் நோக்கமாக இருக்கிறது. இச்சங்கம் தனக்கென ஒரு நிறைவேற்றுக் குழுவை அமைப்பதுடன் அதன் தலைவர் இலங்கை சிறுகைத் தொழிற்சம்மேளனத்தின் நிறைவேற்றுக் குழுவில் பதவி வகிக்கும் ஒருவராக இருப்பார்

வட பிராந்திய சங்கம் தனக்கென ஒரு யாப்பை இயற்றிக் கொள்ளும் அதே வேளை தனது தாய்ச் சங்கமான சிறுகைத் தொழிற் சம்மேளனத்திற்கு ஆண்டுக்கொரு தடவை பத்தாயிரம் ரூபாவை தனது அங்கத்துவப் பங்களிப்பாக வழங்கும். அத்துடன் சிறு கைத் தொழிற் சம்மேளனத்துடன் மட்டுமே உறவு கொண்டதாயுமிருக்கும் இவற்றினடிப்படையில் கொழும்பிலிருக்கும் தாய்ச்சங்கம் வடபிராந்திய சங்க உறுப்பினர்களுக்கு வேண்டிய ஒத்துழைப்பையும், நல்லாதரவுகளையும், வழங்கி வரும் சம்மேளனம் வெளிநாடுகளுக்கான வர்த்தகச் சுற்று[illegible]களையும், கொழும்பில் வர்த்தகக் கண்காட்சிகளையும் ஏற்பாடு செய்யும். இவற்றில் வடபிராந்திய சங்க அங்கத்தவர்கள் பங்கேற்க அழைக்கப்படுவார். இதனால், சிறுகைத் தொழிற்றுறை மேலோங்கும் வாய்ப்புகள் ஆதரிக்கும் என்றுள்ளது.

# "வடமராட்சி கிழக்குப்பகுதி புனரமைப்பு பற்றி ஆராய்வு

வடமராட்சி கிழக்குப் பகுதியில் மேற்கொள்ள வேண்டிய புனர்வாழ்வுப் பணிகள் தொடர்பாக உயர் மட்டக் கூட்டம் மருதங்கேணியில் இடம்பெற்றது. வடமராட்சி கிழக்கு உதவி அரச அதிபர் க. வேலாயுதபிள்ளை தலைமையில் நடந்த இக் கூட்டத்தில் யாழ். அரச அதிபர் க சண்முகநாதன், கடற்புலிகளின் தளபதி கேணல் சூசை மற்றும் திணைக்கள தலைவர்கள் கலந்து கொண்டனர்.

அந்தப் பிரதேசத்தின் புனர்வாழ்வுப் பணிகளை மேற்கொள்ள பல சர்வதேச அமைப்புக்கள் உதவ முன் வந்துள்ளதால் அந்த நிதியைப் பயன்படுத்தி துரிதமாக புனரமைப்புப் பணிகளை மேற்கொள்வது தொடர்பாக அங்கு ஆராயப்பட்டது. பாடசாலைகளைப் புனரமைப்பது, வீதிகளைத் திருத்துவது தொடர்பான திட்டங்களை முன்னெடுப்பது என்று முடிவு செய்யப்பட்டுள்ளது.

# வடக்கு-கிழக்கு இணைப்பு: முஸ்லிம்களைக் காட்டிப் பிரிக்கப்படுமா?

### பிரதமர் அலுவலக அறிக்கையில் சூசகம்

வடக்கு-கிழக்கில் வாழும் முஸ்லிம் மக்களின் அரசியல் உரிமைகள், பாதுகாப்பு, கௌரவம், நலன்கள் போன்றவற்றை அரசு முழுமையாக அங்கீகரிப்பதாக பிரதமர் உறுதியளித்துள்ளார்.

இனப் பிரச்சினைக்கான தீர்வு முயற்சிகளில் அதிகாரங்கள் கைமாறுகின்ற இறுதித்தீர்வு எட்டப்படுகின்ற போது சகல சமூகத்தை சேர்ந்தோரின்பாதுகாப்பு, கௌரவம் என்பன உறுதி செய்யப்படும்.

இவ்வாறு பிரதமர் அலுவலகம் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முஸ்லிம் மக்கள் தமது சொந்த இடங்களில் வாழவும், சொத்துக்களுக்கு உரிமை கோரவும் முடியும். அதற்கு இடையூறு விளைவிக்கப்பட மாட்டாது. எனவே. முஸ்லிம் மக்கள் தமது செயற்பாடுகளை எவ்வித தடையுமின்றி மேற்கொள்ள செயற்றிறன் வாய்ந்த சட்ட அரசமைப்பு ரீதியான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். அரசு ஏற்படுத்தும் எந்தவொரு உடன்பாடு காரணமாகவும் முஸ்லிம்களின் தனிப்பட்ட பாதுகாப்பு, சமூக அரசியல், கலாசார உரிமைகள் சீர்குலைக்கப்படமாட்டாது. முஸ்லிம் மக்களுக்கு வடக்கு-கிழக்கில் பிரத்தியேகமான பிராந்திய அலகு ஒன்றை நிறுவவேண்டும் என்று முஸ்லிம் காங்கிரஸ் வேண்டுகோள் விடுத்துள்ளது. இணைக்கப்பட்ட வடக்கு-கிழக்கு மாகாணங்களை மீண்டும் தனித்தனி மாகாணங்களாக மாற்றுவது பற்றியும் பல கட்சிகள் குரல் கொடுத்து வருகின்றன. முஸ்லிம் காங்கிரஸின் கோரிக்கை குறித்து அரசு பரிசீலனை செய்து வருகிறது. முஸ்லிம் மக்களின் அபிலாசைகளை நிறைவேற்றுகின்ற வகையில் அரசமைப்பு ரீதியான மாற்றுத் திட்டங்களை அரசு முன் வைக்க வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அகதிகள் வாழ்வின் பாதிப்புகளும் மறுவாழ்வு ஆலோசனைகளும்

மனிதகுல வளர்ச்சிகளை மையமாகக்கொண்டு இன்று உலக நாடுகள் தமது ஆட்சி முறைகளில் பல்வேறு நலத் திட்டங்களை தனித் தனி அமைச்சுகளாக விரிவுபடுத்தி இன்றைய உலகின் தேவைகளை உடனுக்குடன் நிவர்த்தி செய்து வருகின்றன.

அதே வேளை சில வகையரன தற்காலிகத் தீர்விற்கான விடயங்களாக வேறு சில திட்டங்களை அவற்றின் குறுகிய காலத் தேவைகளாக வகுத்துப் பிரச்சினைகள் நிவர்த்திக்கப்படுகின்றன;

இப்படியான தற்காலிகப் பிரச்சினைகளாக ஆரம்பத்தில் இருந்த அகதிகள் பிரச்சினை இன்று ஒவ்வொரு நாட்டின் அரசும் அகதிகள் மறுவாழ்வுக்கென ஒரு அமைச்சு உருவாக்க வேண்டிய கட்டாய நிலைக்கு வந்து விட்டன.

இதில் வேடிக்கை என்னவென்றால் புயல், பூகம்பம், இயற்கைச் சீற்றங்கள், ஜாதி, மதம். இனம், சிறுபான்மை மொழி, சுயஉரிமை இப்படிப்பல்வேறு காரணங்களுக்காக அகதி மக்களைக் கண்ட முழு வளர்ச்சி அடையாத ஓரளவு தன்னிறைவு கண்ட நாடுகளில் மட்டுமின்றி "என்னை மிஞ்சி ஒருவரும் இருக்க முடியாது" என்று மார்தட்டும் மேற்கத்திய வல்லரசுகளும் இப்படியொரு அமைச்சினை உருவாக்க வேண்டிய நிலைக்கு வந்து விட்டன என்பது தான்.

சமீபத்திய தகவலொன்றின்படி இன்றைய உலகின் 45 லட்சத்திற்கும் மேற்பட்ட மக்கள் அகதிகளாக உள்ளதாகக் கணக்கிடப்பட்டுள்ளது.

**ஈழத் தமிழ் அகதிகள்**

இவ் அகதிகளில் இனப்பாகுபாடு காரணமாகச்சொந்த நாட்டில் அநாதைகளாக ஆக்கப்பட்டு அயல் நாடான இந்தியாவில் 1983 முதல் இன்று வரை பல்லாயிரம் தமிழர்களும், உலகின் ஏனைய நாடுகளில் பல நூறு அகதிகளும், தற்பொழுது அகதி முகாம்களிலும் சிலர் முகாம் பதிவு இல்லாத ஏகாந்த நிலையிலும் வாழ்கின்றனர் என்பதைவிட நாம் மண்ணுலகில் ஏன் பிறந்தோம்?. என்ற வேதனைத் தீயில் வெந்து கொண்டிருக்கின்றனர் எனலாம்.

காரணம் இப்படியொரு அல்லல்படும் வாழ்விற்கு முன்னர் தமது சொந்த நாடான இலங்கையில் ஒவ்வொரு தமிழ்க் குடும்பத் தலைவனும், தலைவியும் தன் குடும்பப் பராமரிப்பைத் திட்டமிட்டு, தங்களின் வளமான எதிர்காலக் கனவுகளை நனவாக்கும் வண்ணம் குழந்தைகளின் கல்வி, குடும்பப் பொருளாதாரம், சுகாதாரம், சமூகக் கட்டுப்பாடுகள், மற்றவரை மதித்தல், உதவுதல், அயலார் உணர்வுகளுக்கு மதிப்பளித்தல், மத வேறுபாடு இன்மை இப்படி எத்தனை தூய வாழ்வு மனித வளத்திற்கு தேவையோ அவை அனைத்தையும் தன்னகத்தே கொண்டு வாழ்ந்த இனம் தான். யார்? தன் நிலை என்ன? தமது சந்ததியின் ஒவ்வொரு ஆக்கமும் எப்படி? உள்ளது என்பதைச் சட்டப் பாதுகாப்பிற்கு உட்பட்ட சாட்சியங்களாக (சான்றிதழ்) வைத்து வாழ்ந்த இனம் ஈழத்தமிழினம்.

இப்படி வாழ்ந்த இனம் தான் யார் என்பதை உலகிற்கு காட்ட என்ன ஆதாரங்கள் தேவையோ அவை அத்தனையும் தனது உதாசீனம் காரணமாக, பிறந்த குழந்தையின் சான்றிதழ் மற்றும் இறப்பு, திருமணப்பதிவு, அகதிப் பதிவு, கல்விச் சான்றிதழில் தவறான மாற்றங்கள் என்று நாளைய வாழ்வு எப்படி ஆகுமோ என எல்லாம் இழந்துஅகதிக்கு மேலே ஒரு அநாமதேயத்தை நோக்கிப் போய்க் கொண்டிருக்கின்றது.

நான் மேலே கூறியபடி உலகில் இன்று வாழும் 45 லட்சம் அகதி மக்களில் இலங்கைக்கு வெளியில் (வெளிநாடு) வாழும் தமிழ் மக்களில் சுமார் ஒன்றரை லட்சம் பேர் வரை மட்டுமே அடங்குகின்றனர்.

இவர்களின் தனிச் சிறப்பு 1995 வரையில் தாம் எப்படிப்பட்ட நிலையில் இருந்தாலும் கல்வி கற்பதில் பின்வாங்கா உறுதியுடன் இருந்து வந்தனர்.

ஒரு உதாரணம்: 1993ல் விருதுநகர் மாவட்டம், வெம்பக்கோட்டை முகாமிற்கு அருகில் உள்ள முத்துசாமிபுரம் இந்து தொடக்கப்பள்ளியில் 1 முதல் 5 வரையான வகுப்புகளின் ஆண்டுத் தேர்வில் மொத்தமுள்ள 15 இடங்களையும் (5×3=15) அகதி மாணவர் பெற்றிருந்தனர்.

இன்று அந்நிலை சிறிது தளர்ந்து விட்டாலும் ஓரளவு மாணவ-மாணவியராவது கற்றுயர ஆர்வமுள்ளவர்களாகவே உள்ளனர் என்பது பெரும் உண்மையாகும்.

**இவர்களின் எதிர்கால பிரச்சினைகள்**

ஒரு காலத்தில் தமது தேவைகளைத் தாமே நிறைவு செய்தவர்களாய்இருந்தாலும் அகதி வாழ்விற்குள் நுழைந்த பிறகு இவ்வாழ்வில் கிடைக்கும் சலுகைகள் காரணமாகத் தாம் இவ்வாழ்விலிருந்து விடுபட வேண்டியவர் என்பதை மறந்தவர்களாக இன்று இலங்கைத் தமிழினம் போய்க் கொண்டிருப்பது வேதனைக்குரிய விடயமாகும்.

நான் மேலே குறிப்பிட்டபடி சான்றிதழ்களின் தேவை, அவற்றின் பயன்பாடுகளைப் பற்றிய நுண்ணறிவு தமது நாடு திரும்பி தாங்கள் தற்பொழுது வாழும் அகதி நிலை மாறி சுயவாழ்வு ஆரம்பிக்கும் பொழுது அவர்களுக்கு புரிந்தாலும் அது காலம் கடந்த ஞானமாகவே இருக்கும்.

**சான்றிதழ் குறைபாடுகளும் தீர்வுகளும்**

**பிறப்பு.இறப்பு**

இந்தியாவில் பிறந்த குழந்தைகள்/இறந்தவர்களுக்கு VAO (கிராம நிர்வாக அலுவலர்) அல்லது நகராட்சிகளில் சிலர் பிறப்புச் சான்றிதழ் பெற்றுள்ளனர். இவை முழுமையானதாகவோ அல்லது ஏதாவது குறைபாடுகள் உள்ளவைகளாகவோ உள்ளன. வேறு சிலர் இப்படியான சான்றிதழ் எதுவும் பெறாதவர்களாக உள்ளனர். முறைப்படி இச் சான்றிதழ்கள் சென்னையில் உள்ள இலங்கைத் தூதுவர் மூலம் இலங்கை ஆட்பதிவு திணைக் களத்திற்கு அனுப்பப்பட்டு அங்கு பதிவு இருந்தால் மட்டுமே பயன் உண்டு. ஆனால் இப்பொழுது காலம் கடந்து விட்டபடியால் நாடு திரும்பு முன் அப்படியான நிகழ்வுகளை இந்தியாவில் சந்தித்தவர்கள் தகுந்த ஆதாரங்களுடன் தங்கள் பகுதி வட்டாட்சியர் ஊடாக மாவட்ட ஆட்சியர் வழியில் சென்னை மறுவாழ்வு ஆணையர் அவர்களின் பார்வைக்கு அனுப்பிச் சான்றிதழ் ஏற்பாடுகளை செய்து கொள்ளலாம்.

**திருமணம்**

90 சதவீத திருமணங்கள் சுயவிருப்பத் திருமணமாக முடிந்து, முறைப்படி பதிவுகள் பெறாமல் உள்ளன. இப்படி எவ்வித ஆதாரங்களும் இல்லாமல் திருமணம் முடித்தவர்களில் வாழ்வு மட்டுமல்ல, அவர்களுக்குப் பிறந்த குழந்தைகளின் எதிர்காலமும் இருள் சூழ்ந்துள்ளது.

ஆகவே இந்தியாவில் இப்படியான திருமணம் முடித்த அகதிகள் உடனடியாக தகுந்த ஆதாரங்களுடனும் தங்களுக்குப்பிறந்த குழந்தைகளின் பிறப்புச் சான்றிதழுடனும் தமதுபகுதி வட்டாட்சியர் ஊடாக மாவட்ட ஆட்சியர் வழி மறுவாழ்வுத் துறை எழிலகம், சென்னை முகவரியிட்டு மாற்றுஆதாரச் சான்றிதழ் பெறவும்.

**கல்வி**

தமிழ்நாட்டில் உள்ள பல பள்ளிகளில் அகதி மாணவர்களின் பெயர்கள், பிறப்பு, பெற்றோர் பெயர் உள்ளிட்ட பல தகவல்கள் (குறிப்பாக: பெயர்களில் ஓர் எழுத்துப் பிழை) தவறான முறையில் பதிவு செய்யப்பட்டிருந்தால் இதனால் கல்லூரி வரை படித்த மாணவர்கள் எதிர்காலத்தில் தொழில் வாய்ப்புக்களைக்கூட இழக்க வேண்டியுள்ளது. இப்படியான பாதிப்புகளைச் சந்திப்பவர்கள், தமது பிறப்புச் சான்றிதழ், இலங்கையிலிருந்து கொண்டு வந்த ஆவணங்கள், இந்திய அகதி அட்டை, தாம் படித்த பள்ளி, கல்லூரிகளில் இருந்து பெற்ற சான்றுகளுடன் இயக்குநர், பள்ளிக்கல்வி, சென்னை என்ற முகவரிக்கு தமது மாவட்டக் கல்வித்துறை ஊடாக விண்ணப்பித்து மாற்றுச் சான்றிதழ் பெறலாம்.

"வருங்காலம் வளமடைய
வருமுன் காப்போம்"

தகவல் தொகுப்பு:
எஸ்.கே. கவிதர், பி.எஸ்.சி.,
இலங்கை அகதி முகாம், கண்டியாபுரம்,
வெம்பக்கோட்டை, விருதுநகர் மாவட்டம்.

---

"பொருள், கருவி, காலம் வினை இடனோடைந்தும்
இருள்தீர எண்ணிச் செயல்"

-திருக்குறள்

---

**ஒரு இலட்சத்துக்கு மேற்பட்ட இந்திய வம்சாவளி மக்களுக்கு விரைவில் பிரஜாவுரிமை கிட்டும்**

இதுவரையில் இலங்கைப் பிரஜாவுரிமை கிடைக்காத மலையக தோட்டப் பகுதிகளில் வாழும் ஒரு இலட்சத்து எண்பதாயிரத்துக்கும் மேற்பட்ட இந்திய வம்சாவளி பிரஜைகளுக்கு விரைவில் பிரஜா உரிமை கிடைக்கவிருக்கின்றது.

அதற்கான நடவடிக்கைகளை பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசு எடுத்து வருவதாக அறிய முடிகின்றது.

இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் உட்பட மலையக தோட்டத் தொழிலாளர்களை பிரதிநிதித்துவப்படுத்தும் பல அமைப்புகள் பதவிக்கு வந்த அரசாங்கங்களை இது தொடர்பாக அடிக்கடி வலியுறுத்தி வந்ததோடு ஐ.தே.க. பதவிக்கு வரும் முன்னர் அக்கட்சியிடமும் இவ்வேண்டுகோள் முன் வைக்கப் பட்டது.

---

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

ஆம்; முதல் சுற்றுப் பேச்சுவார்த்தைக்கு முன் பிரபாகரனுடன் ஆலோசனை நடத்த லண்டனிலிருந்து மாலத்தீவுக்குச் சென்று அங்கிருந்து கடல் விமானத்தில் ஏறி, இரணமடு ஏரியில் வந்திறங்கிய பாலசிங்கம், இத்தடவை இரண்டாவது சுற்றுப் பேச்சுவார்த்தைக்காக பிரபாகரனுடன் கலந்தாலோசிக்கும் பொருட்டு, 15-10-2002 அன்று நேரடியாகக் கொழும்பு கட்டுநாயக்கா விமான நிலையத்திலேயே தன் மனைவியுடன் வந்திறங்கி, இலங்கைக்கான நார்வே தூதர் ஜோன் வெஸ்ட் போர்க் வரவேற்க, வன்னிக்கு மரியாதையுடன் அனுப்பி வைக்கப்பட்டுள்ளார்.

அப்படியிருக்க, சனநாயக சக்திகளையும் பேச்சுவார்த்தைகளில் பங்கு கொள்ளச் செய்வது நிச்சயமாக இயலாததாக இருக்க முடியாது.

ஆகவே, சனநாயக-சாதீக சக்திகளையும் பேச்சுவார்த்தைகளில் சேர்த்துக் கொள்ளக்கோரி, சர்வதேச அளவில் குரல் எழுப்ப வேண்டியது இன்றியமையாததாகும்.

தாய்லாந்துப் பேச்சுவார்த்தை வெற்றி பெற வேண்டும் என்று மனப்பூர்வமாக விரும்புகிறோம். அதே நேரத்தில் அப்பேச்சுவார்த்தையில் சனநாயக சக்திகளும் கலந்து கொள்ளாமல் தமிழ் மக்களின் அபிலாசைகளுக்கு கந்த தீர்வை எட்ட இயலாது என்பதாலேயே அதை வலியுறுத்துகின்றேன்.

இவ்வாறு ஈழத்தமிழர் பாதுகாப்புக்கழகம் தனது அறிக்கையில் கூறியுள்ளது.

(-4ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஈழத்தமிழனின் சரித்திர சாம்ராஜ்யம்

(சங்கீதச் சிறகுகளே)

கரைதேடும் தோணிகளாய்
கரைந்தோடும் மேகங்களாய்
கானலைப் போல காலம் கடத்தும்
எம் ஈழத் தமிழர்களே!
நாம் சொந்த நாட்டிலேயே அகதிகளாம்!

சுதந்திரம் என்ற சொல்லை
எழுத்தில் மட்டுமே படிக்க முடிகிறது-கனவிலாவது
ஈழ சுதந்திரம் தேடுகிறேன்!

துடிக்கின்ற இதயத்தில்
அடிக்கின்ற சப்தம் என்னை இம்சிக்கிறது
பனித்துளிக்கு விடை தரும் சூரியனாய்!
விமர்சனங்களுக்கு அப்பாற்பட்டு வாழ்ந்தும் கூட—
காலம் நமக்குக் கை காட்டுகிறதே!

கண்களை கசக்கிக் கொண்டு
காகிதத் தேர் ஏறுகிறோம்
சுதந்திரம் என்ற சொல்லைக் கனவில்
மட்டுமே தேடுகின்றோம்!

மங்கிய வெளிச்சத்தில் மயங்கித்
தெரியும் அந்த சுதந்திரம்
நாம் காணும் நேரம் எதுவோ?

இளங்கவி ச. சரோகராஜ்
அழியாநிலை, அறந்தாங்கி.

## அமைதியில் பிறக்கட்டும்!

விடிவெள்ளி முளைத்து-கொஞ்சம்
வெளிச்சமும் தெரிகிறது-கதிர்
பள்ளி விட்டு எழுந்து பவனியும் வந்திடுமா?
துன்ப இருள் நீங்கிடுமா?
துயர மெல்லாம் போயிடுமா?
இன்ப ஒளி வாழ்வில் எம்மோடு வந்திடுமா?
வடக்கும் கிழக்கும் வளம் பெறுமா?
பயம் வாழ்க்கை ..பழகித்தான் போச்சு!
பழசை நினைக்கையில் பறக்கிறது மனம் அங்கே!

நல்லூர் சன்னதி, தெள்ளிப்பளை துர்க்கையம்மன்
கீரிமலை மாவிட்டபுரம், வற்றாபளை, புதூர்
எத்தனை கோயில்கள்! எல்லாம் எண்ணத் தெரிகிறது
திருவிழா சனக்கூட்டம், என்று வரும் அக்காலம்?
ஏங்கித் தவிக்கிறது எங்கள் மனம்...

யாழ் தேவி ரயில் பயணம் யானை இரவில் பஸ் பயணம்
யாழ் நகரின் பேரழகு, ஆனந்த நிலை அழகு
கல்விக் கூடங்கள் நிறைவழகு ..கலை அழகு—
காண வருமா? மீண்டும் கால அழகு...
பேசும் தமிழ்ச்சொல் அழகு தேசமிகு ஈழப் பேரழகு...
அமைதியில் பிறக்கட்டும் அமைதியே நிலைக்கட்டும்
அதுதானே ஊரழகு

மு. இராமஜெயம்
இ.அ.மு. சமூகரெங்கபுரம்,
நெல்லை மாவட்டம்

## அகதி!

அகதியாக அன்னிய நாட்டில்
அடியெடுத்து வைத்தேன்,
ஈழத்தமிழன் என்ற பெயர் மாறி
அகதி என்ற பெயர் சூட்டிக்கொண்டேன்,
அகதி என்ற அவதி வாழ்க்கைக்கு
முற்றுப்புள்ளி இல்லையா?

கரையைச் சேரத் துடிக்கும் அலையைப் போல்,
தாயகத்தைச் சேரத் துடிக்கும் ஈழத்து அகதி நான்,
என் குழந்தை கூறுகிறது
தாயே! உன் கருவறையில் இருந்து
என்னை மீட்டு விடாதே

உன்னைப்போல் அகதியாக வாழ
விரும்பவில்லை நான்,
புதுயுகப் பூமியிலே புதியவனாய்ப்
பிறக்க வேண்டுமென இதயம் ஆர்ப்பரிக்கிறது
அகதியாய் மறுகணமே மண்டியிட்டு
முடங்கிக் கொள்கிறது.

இக் கவிதையின் சிறப்பு என்னவென்றால் ஈழ ஏதிலியர் மறுவாழ்வுக்கழகம் அருட்தந்தை எலியாஸ் அவர்களினூடாக வழங்கும் தகவல் தொடர்பு தலைமைத்துவப் பயிற்சியில் 10ம் கட்ட பயிற்சியாளர்களிடையே குழுவாக நடத்திய கவிதைப் போட்டியில் ஒரு குழுவினர் தாங்கள் ஒவ்வொருவரும் எழுதிய இருவரிகளைத் தொகுத்து இந்த அழகிய கவிதையை வடித்துள்ளனர் என்பதாகும்.

# கவிதைச் சரம்

## வேர்கள்...

பெண்ணே!
ஆணினத்தின் வெற்றியின் ஆதார விருட்சம் ஆனவளே
இது புரியாமல், இன்னமும் நீ அடிமை விலங்குகளுக்குள்,
அகப்பட்டுத் தவிக்கிறாய்! விலங்குடைக்கும் சக்தி, உன்
வெண்டை விரல்களுக்குள், வெளியே வா..

என்னால் என்ன செய்ய முடியும் என்று ஒதுங்காதே!
உன்னாலும் முடியும் உனக்குள் இருப்பவை,
உலகடங்கா ஆற்றல்கள் உயரத் துணிந்துவிடு,
உலகம் உன் கைகளுக்குள் ஏற்றம் காண முயன்றுபார்
இமயமும் உன் காலடியில்...பெண் முன்னேற்றம் என்பது
பூவை உனக்குள்ளே புதைந்து கிடக்கிறது
இனி...
பூக்கள் என்ற புகழ் தேவையில்லை
சமூகத்தின் வேர்கள் நாங்கள் என்று
சபையிலே முழங்கு! புறப்படு புயலாய்
வெற்றியின் விழாக்களிலே உனது விலாசம்
விளம்பரமாகட்டும்

அருள்மலர்
இ.அ. முகாம், சமூகரங்கபுரம்.

## புதிய விடியல்!

இப்பாடல் ஈழ ஏதிலியர் மறுவாழ்வுக் கழகத்தினூடாக முகாம்களில் வதியும் இலங்கை அகதி மக்களின் நலம், மற்றும் ஊட்டத்திற்காக நிதி உதவி வழங்கும் E.C.H.O. நிறுவனத்தின் பிரதிநிதி திரு. ஹென்ரிக் அவர்கள் ஈரோடு மண்டல அலுவலகம் சென்றிருந்தபோது மண்டலத் தொண்டர்களால் இயற்றப்பட்டு இனிதே பாடப்பட்டது.

எழுது புதியதொரு சமுதாயம் எழுது எழுது தமிழா!!
E.C H.O. தரும் சேவையுடன் புதிய பரணி பாடு!
வழிகளைத் தடுக்கும் தடைகளை உடைத்துப் புதிய
விதிகள் அமைப்போம்!!
முகடுகள் தொடுக்கும் மலைகளை மேவி இனிய விதிகள்
செய்வோம்!

புது விடியல் காணும் காலம்
சமுதாய எழுச்சிக் காலம்
பாடுவோம் ..பாடுவோம் ..கழகப் புகழை இன்று
போற்றுவோம் ..போற்றுவோம் சேவைப் புகழை இன்று
(எழுது புதியதொரு சமுதாயம்) ...

செடியாய் இருந்த நாங்கள் மரமாய் எழுந்தோமே!
மரமாய் எழுந்த நாங்கள் விழுதாய் முளைத்தோமே!
முகிலாய் இருந்த நாங்கள் மழையாய் விழுந்தோமே!
மழையாய் விழுந்த நாங்கள் நதியாய் சிரித்தோமே!
வானில் போகின்ற பறவைகளாய்
நாங்கள் இருக்கின்றோம்...
கூடு தேடிவந்த பறவையாம்
அன்னைக் குயிலை வரவேற்கின்றோம்...
வருக வருக வரவேற்கின்றோம்
எழுக கழகப் புகழ் பாடுவோம்
(எழுது புதியதொரு சமுதாயம்) ...

தனியாய் இருந்த நாங்கள் ஒன்றாய் நிமிர்ந்தோமே
ஒன்றாய்சேர்ந்த நாங்கள் குழுவாய் எழுந்தோமே
குழுவாய் எழுந்த நாங்கள் மலையாய் நிமிர்வோமே
மலையாய் நிமிர்ந்த நாங்கள் மாநிலம் ஆள்வோமே ..
ஈழம் செய்கின்ற சிற்பிகளாய்
நாங்கள் சிரிக்கின்றோம்
வாழ வைக்க வந்த பறவையாம்
வெண் புறாவை வரவேற்கிறோம்
வருக வருக வரவேற்கின்றோம்
எழுக கழகப் புகழ் பாடுவோம்
(எழுது புதியதொரு சமுதாயம்) ...

## சங்கத்தமிழ் அமுதம்

கவிமாமணி
ச. ஆறுமுகநாதன்

(சென்ற இதழ்த் தொடர்ச்சி)

புனல்நிறைந்து பொன்
கொழிக்கும்
பொன்னியாற்றின்
அழகினையும்
கனமான கரை மருங்கில்
காட்சிதரும் வயல்வளமும்
செழும்பாக்கம் வாழ்வோரின்
சீரியதாம் நலத்தினையும்
வழுவில்லா அட்டிற்சாலை
வழங்கு அறச் சாலைகளின்
இயல்புகளை விளக்குவித்து
இனிதுழைத்து உண்டாகும்
கயலவர்கள் களியாட்டக்
காட்சிகளும் விளக்கலுடன்
அங்கங்கே துறைமுகத்தில
அழகாகக் குவித்துள்ள
பன்னாட்டுப் பொருள்களதின்
பாங்கினையும் விளக்கலுடன்
பொன்னான காவிரிப்பூம்
பட்டினத்து ஆவணத்தின்
செழுமையையும் ஆங்காங்கு
செம்மையாய்க் காட்சிதரும்
எழில்நிறை பசுங்கொடிகள்
இயல்பினையும்
விளக்கலுடன்
அந்நகரில் வாழும் மக்கள்
அன்பு பண்பு
தொழிலினையும்
சந்தர்ப்பம் காரணமாய்
சாற்றும் கரிகால் மன்னன்
இளமையில் சிறையதனில்
இருந்ததையும் விளக்கலுடன்
தளராமல் சிறை மீண்டு
தன்னாட்சி பெற்றதையும்
பகைவரின் நாடுகளைப்
பாழ்படுத்தி வென்றதையும்
வகைவகையாய் வெற்றி
பெற்று
வாழ்ந்திட்ட அருமையையும்
உறையூரை நிலையாக்கி
உயர்வாக்கிப் பலமாக்கி
நிறைவாகக் குளந்தொட்டு
நீண்டவளம் பெருக்கியதும்
கற்பனைத் திறத்துடனே
கவின்நலமும் வருணனையும்
அற்புதமாய் அமைந்திருக்க
அழகாகப் பாடியுள்ளார்
பட்டினப் பாலைப்
பாடல்களைக் கேட்டமன்னன்
மட்டில்லா மகிழ்வெய்தி
மாப்புலவன் வறுமைதீர
அட்டியின்றிப் பதினாறு
நூறாயிரம் பொற்காசைக்
கொட்டியுமே பரிசாகக்
கொடுத்தான் என்பதனை
கலிங்கத்துப் பரணியிலே
கண்டிடலாம்...

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தந்தை செல்வா



த. சபாரத்தினம்

## ஐ.தே.க.வுடனான தமிழரசுக் கட்சியின் அனுபவங்கள்

வெள்ளை அறிக்கை

வாலிபர்களின் நெருக்குதல் டட்லிக்கு உந்துகோலாக அமைந்தது. மாவட்ட சபை மசோதாவை தேசிய அரசாங்கத்தில் அங்கம் வகித்த கட்சிகளின் தலைவர்களைக் கொண்ட கூட்டத்தில் அவர் சமர்ப்பித்தார். பெப்ரவரி, மார்ச் மாதங்களில் மசோதாவை அவர்கள் ஆராய்ந்தனர். ஏப்ரல் 22ல் மசோதா மந்திரி சபைக்குச் சமர்ப்பிக்கப்பட்டது. அமைச்சர்கள் அம்மசோதாவை ஒவ்வொரு பிரிவாக மூன்று வாரங்கள் ஆராய்ந்தனர். அதன் பின்பு யு என்.பி.யின் செயற்குழுவும் பாராளுமன்றக் குழுவும் மே 21ல் கூடின.

'நீங்கள் உங்கள் கருத்துக்களையும் கண்டனங்களையும்கூறலாம். அவற்றை ஆராய்ந்த பின்பு தான் அரசாங்கம் மசோதாவைப் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கும்' என்று டட்லி அக் கூட்டத்தில் சொன்னார்.

மே22ல் தமிழரசுக்கட்சித் தலைவர்கள் பிரதமரைச் சந்தித்தனர். பாராளுமன்றக் கூட்டத் தொடர் கலைக்கப்படுவதற்கு முன்பு மசோதாவைப் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்குமாறு வற்புறுத்தினர்

அதைச் செய்ய முடியாத நிலையில்தான் இருப்பதாகக் கூறிய பிரதமர் இராஜினாமா செய்ய முன் வந்தார்.

'நீங்கள் இராஜினாமா செய்வதால் எங்களுக்கு எவ்வித நன்மையும் ஏற்படாது' என்றார் தந்தை.

மாவட்ட சபை சம்பந்தமான வெள்ளை அறிக்கை ஒன்றைப் பாராளுமன்றத்தில் விரைவில் சமர்ப்பிப்பதாக டட்லி கூறினார்.

மாவட்ட சபை வெள்ளையறிக்கைக்கு எதிரான பிரசாரத்தை எதிர்க்கட்சியினர் முடுக்கி விட்டனர்.

டட்லியைப் பயமுறுத்தி வெள்ளை அறிக்கையைக் கைவிடச் செய்வதே எதிர்க்கட்சியின் அரசியல் தந்திரமாக இருந்தது. வெள்ளை அறிக்கையைச் சமர்ப்பிக்காமல் செய்து விட்டால் தமிழரசுக் கட்சி அரசாங்கத்தை விட்டு வெளியேறி விடும் என்பது எல்லோருக்கும் தெரிந்த விடயம்.

ஜூன் 7ல் பிரதம மந்திரி வெள்ளை அறிக்கையைப் பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தார். கேள்வி நேரம் முடிந்ததும் அதைச் செய்தார்.

பிரதமர் வெள்ளை அறிக்கையைச் சமர்ப்பித்ததும் எதிர்க்கட்சித் தலைவி ஸ்ரீமாவோவின் தலைமையில் எதிர்க்கட்சியினர் சபையிலிருந்து வெளிநடப்புச் செய்தனர். ஆர். ஜி. சேனநாயக்கா அப்போது சுதந்திரக் கட்சி உறுப்பினராக இருந்தார். அவர் வெளியே போகவில்லை.

வெளிநடப்புச் செய்த எதிர்க் கட்சியினர் ஹைட் பார்க்கில் பொதுக் கூட்டம் ஒன்றைநடத்தினர். வெள்ளை அறிக்கையின் பல பிரதிகளைத் தீயிட்டனர். மகாசங்கத்தினர் நகர மண்டபத்தில் வேறொரு எதிர்ப்புக் கூட்டத்தை நடத்தினர்.

தமிழரசுக் கட்சியின் செயற்குழு வெள்ளை அறிக்கையை ஆராய்ந்தது. அதில் இருந்த உறுப்புகள் எவருக்கும் திருப்தியளிக்கவில்லை. இதற்குத் தானா அரசாங்கத்தில் ஒட்டிக் கொண்டிருக்கிறீர்கள் என்று இராஜதுரை கண்டித்தார்.

'மாவட்ட சபையின் பெயரில் ஒரு முனிசிபல் சபையைக் கொடுக்கிறார்கள்' என்று நவரத்தினம் கண்டித்தார். வாலிபர்களைச் சமாளிப்பது தந்தைக்கேபெரும் கஷ்டமாக இருந்தது.

அந்தக் கட்டத்தில் தினகரன் வாரமஞ்சரிக்காக தந்தையைப் பேட்டி கண்டேன்.

கேள்வி: வாலிப முன்னணியினர் கூறும் கண்டனங்கள் பற்றி என்ன கூறுகிறீர்கள்?

தந்தை: நானும் வாலிபனாக இருந்திருந்தால் அவர்கள் சொல்வதைத்தான் சொல்லியிருப்பேன்.

ஜூன்30ல் தந்தை டட்லியைச் சந்தித்தார். சந்திப்பு முடிந்ததும் பத்திரிகையாளர்கள் தந்தையை மொய்த்தனர்.

பத்திரிகையாளர்கள் தந்தையை மொய்ப்பதற்கு முக்கிய காரணம் அவர் நடந்ததை ஒளிக்காமல் சொல்லுவார்.

அன்று அவர் சொன்னது இது-

ஒரு வெளிப்படையான சந்திப்பு அது. நாங்கள் எதிர்நோக்கும் கஷ்டங்களை டட்லிக்குச் சொன்னேன். எமக்கு எதிராக வாலிபர்கள் புரட்சி செய்யும் நிலை தோன்றியிருப்பதைக் கூறினேன்.

நான் வாலிபனாக இருந்திருப்பின் அவர்களைப் போன்றே நானும் நடத்திருப்பேன் என்று சொன்னேன்.

அரசாங்கத்தில் தமிழ் வாலிபர்கள் அதிருப்தியடைந்திருப்பது நியாயமானது என்றும் சொன்னேன்.

நாங்கள் பண்டார நாயக்காவினால் கைவிடப்பட்டோம். திருமதி பண்டார நாயக்காவால் கைவிடப்பட்டோம். இப்பொழுது உங்களால் கைவிடப்படுகிறோம் என்று சொன்னேன்.

டட்லியின் பதில் என்ன என்று பத்திரிகையாளர்கள் கேட்டனர்.

### அங்கம்-46

'நான் இதைச் சொன்னதும் டட்லி மிகவும் கவலையடைந்தார். தமிழ் வாலிபர்களின் உணர்ச்சியைத் தன்னால் புரிந்துகொள்ள முடிகிறது என்றார். மாவட்ட சபை மசோதாவால் தானும் பலத்த எதிர்ப்பை சம்பாதித்துள்ளதாகக் கூறினார். டட்லியின் பிரச்சினைகளை என்னால் உணர முடிகிறது என்று பதிலளித்தார் தந்தை.

இந்தத் தகவல்களை எல்லாம் ஒளிவு மறைவு இன்றிச் சொல்லி விட்டு 'இவ்வளவு விபரமாகச் செய்தியை எழுதாதீர்கள், எழுதினால் டட்லிக்கு நெருக்கடி அதிகரிக்கும். பத்திரிகையாளர்கள் தந்தையின் சொல்லுக்கு மதிப்பு அளிப்பது வழக்கம். டட்லி சொன்னதாக அவர் சொன்னதைப் பிரசுரிப்பதில்லை எனவும், டட்லிக்கு அவர் சொன்னதைப் பிரசுரிப்பதென்றும் எல்லோரும் இணக்கத்துக்கு வந்தோம்.

அந்தச் சந்திப்பின்போது இரண்டு வாக்குறுதிகளை டட்லியிடமிருந்து பெற்றார். முதலாவது சிங்களம் படிக்க முயற்சி எடுத்த தமிழ் அரசாங்க ஊழியர்களுக்குச் சேவை நீடிப்புக் கொடுப்பது பற்றியது, அதனால், பல தமிழ் அரசாங்க ஊழியர்கள் பதவி இழக்காது தப்பினர். இரண்டாவது தமிழ்ப் பல்கலைக் கழகம் ஒன்றை நிறுவுவதற்கான இணக்கம்.

பாராளுமன்றக் கூட்டத் தொடர் ஜூன் பிற்பகுதியில் கலைக்கப்பட்டது. ஜூலை 18இல் கவர்னர் ஜெனரல் வில்லியம் கொபல்லாவ அதைத் திறந்து வைத்து சிம்மாசனப் பிரசங்கத்தை நிகழ்த்தினார்.

அவ்வுரையில் இருந்த மாவட்ட சபைகள் பற்றிய குறிப்பு இது தான்:

மத்திய அரசாங்கத்தின் வழி காட்டலின் படியும், கட்டுப் பாட்டிற்குள் செயற்படும் மாவட்ட சபைகளை அமைப்பது பற்றிய வெள்ளை அறிக்கை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.

அவ்வறிக்கை மீதான விவாதத்தின் போது தெரிவிக்கப்பட்ட கருத்துக்கள் மாவட்ட சபை மசோதா சமர்ப்பிக்கப்படுவதற்கு முன்பு கவனத்தில் கொள்ளப்படும்.

ஜூலை 19இல் தமிழரசுக் கட்சியின் பாராளுமன்றக் குழுவும், செயற்குழுவும் வெவ்வேறாகக் கூடின.

அரசாங்கத்தில் இருந்து வெளியேறும் படி வாலிபர்கள் மட்டுமல்ல, சிரேஷ்ட உறுப்பினரும் பலத்த குரல் எழுப்பினர்.

அரசாங்கத்தில் இருந்து விலகுவதை தந்தை கடுமையபக எதிர்த்தார். தனது நிலைப்பாட்டுக்குத் தந்தை முன் வைத்த வாதம் என்ன? ...

1970 தேர்தல்

பிரிவினை வாதிகள் என அழைக்கப்படும் நீங்கள் பிரிவினைக் கோரிக்கையை நிராகரித்ததேன் என்பது தந்தையிடம் கேட்கப்பட்ட வினா.

தந்தை கொடுத்த பதில் இது-

'நாங்கள் அதை நிராகரிக்கவில்லை. எங்களுக்கு இன்னும் கொஞ்ச நேர அவகாசம் தாருங்கள். எங்களைச் சமஷ்டி வாதிகள் என்று அழைக்க சிங்களத் தலைவர்களை இணங்கச் செய்வோம்; சமஷ்டி ஆட்சிமுறை நாட்டை ஒற்றுமைப் படுத்துவதற்கான ஆயுதமேயொழிய பிரிவினைக்கு இட்டுச் செல்லும் ஒன்றல்ல என்பதையும் அவர்கள் உணர வைப்போம்' என்றுதான் வாலிபர்களுக்குச் சொன்னோம்.

மேலும் ஒரு கேள்வி கேட்கப்பட்டது.

'சிங்களத் தலைவர்களை இணங்க வைக்கும் முயற்சியில் நீங்கள் தோல்வி கண்டால்...? தந்தையின் பதில் தீர்க்க தரிசனமானது.

'எங்களைப் போன்ற வயோதிபர் தோல்வி கண்டால் வாலிபர்கள் வெற்றி காண்பர். அப்பொழுது சிங்களமக்களை வேண்டுமென்று தவறான வழியில் இட்டுச் சென்ற சிங்களத் தலைவர்கள் பதில் சொல்ல வேண்டிவரும். சிங்களத் தலைவர்கள் தமது செயல்களின் விளைவுகளை அனுபவிக்காவிடினும் அவர்களைத் தெரிவு செய்த பாவத்துக்காக சிங்கள மக்கள் துன்பப்பட நேரிடும்'.

உடுவில் மகாநாட்டைத் தொடர்ந்து கொழும்பு பத்திரிகைகள் தமிழரசுக் கட்சிக்குச் சேறு வீசும் பணியை ஆரம்பித்தன. 'தமிழரசுக் கட்சியை திமுகவின் ஏஜன்ட்' எனக் காட்ட ஒரு பத்திரிகை முயன்றது.

ம.பொ.சி.யை பிரதம விருந்தினராக அழைத்ததையும் மேடையில் அறிஞர் அண்ணாவின் படத்தைத் தொங்க விட்டதையும் தனது குற்றச்சாட்டுக்குக் காரணிகளாக அப் பத்திரிகை கொடுத்தது. 'டைம்ஸ் ஒப் சிலோன்' நிருபர் அமிர்தலிங்கத்திடம் இவ்விடயம் பற்றிப் பேட்டி கண்டார்.

ம.பொ.சி. யார் சிறந்த தமிழ் அறிஞர். கவர்ச்சி மிக்க பேச்சாளர். அவரை அறிஞராகவும் பேச்சாளராகவும் தான் அழைத்தோம். தமிழரசுக் கட்சித் தலைவர் என்ற முறையிலல்ல என்றார் அமிர்தலிங்கம்.

அண்ணாவின் படத்தை மேடையில் தொங்க விட்டது பற்றிக் கேட்ட போது, 'மகாத்மா காந்தியின் படத்தை நீங்கள்காணவில்லையா' என்று கேட்டார்.

'புத்த பிரானினதும் யேசு நாதரினதும் படங்களையும் தொங்க விட்டிருந்தோமே அதையும் பார்க்கவில்லையா?'

'தமிழரசுக் கட்சியின் நோக்கங்களையும் இலட்சியங்களையும் சிங்கள மக்களிடையே திரித்துக் கூறுவதற்கு முயற்சி எடுக்கப்படுகிறது. தமிழ் மக்களின் வருங்காலத்தில் அக்கறை கொண்டுள்ளதைப் போன்றே இலங்கையின் வருங் காலத்திலும் தமிழரசுக்கட்சி அக்கறை கொண்டுள்ளது; ஒன்றை மட்டும் சிங்கள மக்கள் தெளிவாகத் தெரிந்து கொள்ள வேண்டும்.

இரண்டாம் தரப் பிரஜைகளாக வாழ்வதிலும் பார்க்க நாட்டுக்கு வெளியேயுள்ள எவருடன் சேர்ந்தாவது தமது சமத்துவத்தைப் பாதுகாப்பதற்காகப் போராடத் தயங்க மாட்டார்கள்.

அமிர்தலிங்கத்தின் இந்தக் கூற்று சிங்களத் தலைவர்களுக்கு ஆத்திரமூட்டியது.

(16-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தந்தை செல்வா ...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தேசிய அரசாங்கத்தில் இருந்து தமிழரசுக் கட்சி வெளியேறிய இரண்டு வாரங்களில் அச்சுவேலி, கரவெட்டி, அல்வாய் ஆகிய மூன்று கிராமங்களில் இயங்கி வந்த மூன்று தனியார் பாடசாலைகளைக் கையேற்று சிங்கள பௌத்த பாடசாலைகள் ஆக்குவதற்கு ஈரிய கொல்ல நடவடிக்கை எடுத்தார்.

அந்த மூன்று பாடசாலைகளையும் அரிசன மக்களுக்காக அங்குள்ள மக்கள் ஆரம்பித்தனர். அம்மக்களில் சிலர் பௌத்த மதத்தைத் தழுவியதோடு பௌத்த திராவிட சங்கம் என்றஅமைப்பையும் உருவாக்கினர். அச்சங்கத்தின் தலைவராக ஏ.ஆர். டேவிட் கடமையாற்றினார். டேவிட்டின் வேண்டுகோளுக்கிணங்கவே அம் மூன்று பாடசாலைகளையும் கையேற்க கல்வியமைச்சு முடிவு செய்தது.

## சத்தியாக்கிரகப் பயமுறுத்தல்

தமிழ்மக்கள் கொதித்தெழுந்தனர்.

ஈரியகொல்லவின் திட்டத்தை முறியடிப்பதற்குத் தமிழரசுக் கட்சிக்கு தமிழ்க் காங்கிரஸ் ஆதரவளித்தது.

தந்தை செல்வா தமிழ் மக்களின் எதிர்ப்பை விளக்கி அறிக்கையொன்றை விடுத்தார்.

அந்த மூன்று பாடசாலைகளையும் அரசு பொறுப்பேற்பதைத் தாங்கள் எதிர்க்கவில்லை என்பதைத் தெளிவுபடுத்தினார். அப்பாடசாலைகளைச் சிங்கள பௌத்த பாடசாலைகளாக மாற்றுவதையே எதிர்ப்பதாகச் சொன்னார்.

'தமிழ் மக்களின் வருங்காலம் இங்கு கேள்விக்குறியாக்கப்படுகின்றது. தமிழ் பேசும் மக்கள் இந்த நாட்டில் தமிழ் பேசும் மக்களாக வாழ முடியுமா? அவர்கள் சிங்களம் பேசும் மக்களாக மாற்றப்படபோகிறார்களா? என்று அந்த அறிக்கையில் கேட்டார்.

தமிழரசுக் கட்சியின் பொதுச் சபை மே 9இல் கூடி ஈரிய கொல்லவின் முயற்சியை முறியடிக்க முடிவு செய்தது. சிங்களம் மட்டும் சட்டம் நிறைவேற்றப்பட்ட ஜுன் 5ல் தமிழ் இயக்கத்தை ஆரம்பிக்க முடிவு செய்தது; தமிழ் மொழி (சிறப்பு ஏற்பாடுகள்) சட்டம் அமுல் செய்யப்படும் வரை தமிழ் இயக்கத்தைத் தொடருவது எனவும் தீர்மானிக்கப்பட்டது

ஈரிய கொல்ல தமிழரசுக் கட்சியின் ஜுன் 5 தமிழ் இயக்கத்தையும் சத்தியாக்கிரகத்தையும் முறியடிக்கத் திட்டமிட்டனர். மூன்று பாடசாலைகளையும் ஜுன் 1ம் திகதி கையேற்கப் போவதாகவும் அதற்காகத் தான் யாழ்ப்பாணம் போகப்போவதாகவும் அறிவித்தார்.

தமிழரசுக் கட்சியின் வாலிப முன்னணி இதை ஒரு சுவாலாகக் கருதியது. ஈரிய கொல்லவின் விஜயத்தைப் பகிஷ்கரிப்பதற்கு முடிவு செய்தது. ஈரிய கொல்ல செல்லும் வழியெல்லாம் சத்தியாக்கிரகம் செய்வதற்காக தொண்டர்களைத் திரட்ட ஆரம்பித்தது.

அரசாங்கமும் சும்மா இருக்கவில்லை. பொலிஸார் உஷார் படுத்தப்பட்டனர். மூன்று பாடசாலைகளுக்கும் பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்பட்டது.

உருவாகி வரும் நெருக்கடியைத் தவிர்க்கத் தந்தை விரும்பினார். பிரதம மந்திரியை மே 20ல் சந்தித்தார். தந்தையுடன் நாகநாதன், அமிர்தலிங்கம், துரை ரத்தினம், கதிர்வேலுப்பிள்ளை, திருச்செல்வம் ஆகியோர் சென்றனர்.

பாடசாலைகளை அரசு பொறுப்பேற்பதை தமிழரசுக் கட்சி எதிர்க்கவில்லை என்றும், போதனா மொழியைச் சிங்களமாக மாற்றுவதையே எதிர்ப்பதாகவும் தூ து கோஷ்டியினர் டட்லிக்கு எடுத்துரைத்தனர்.

'போதனா மொழி மாற்றப்பட மாட்டாது என்ற அறிக்கையை அரசாங்கம் வெளியிட்டால் நெருக்கடி தணிந்து விடும்' என்பதைத் தந்தை எடுத்துக் கூறினார்.

அப்படிச் செய்வதற்கு டட்லி இணங்கினார்.

போதனா மொழி மாற்றப்பட மாட்டாது என்ற அறிக்கையை அரசாங்கம் மே 23ல் வெளியிட்டது.

அவ் அறிக்கையை வரவேற்று கட்சிச் செயலாளர் அமிர்தலிங்கம் இந்த அறிக்கையை வெளியிட்டார்.

'தமிழ்க் குழந்தைகளுக்காக ஆரம்பிக்கப்பட்ட மூன்று பாடசாலைகளையும் சிங்கள போதனா மொழிப் பாடசாலைகளாக்குவதற்குக்கல்வி அமைச்சு முன்பு எடுத்த முடிவை மாற்றும் அரசாங்கத்தின் தீர்மானத்தை எமது கட்சி வரவேற்கிறது.'

ஈரியகொல்லவும் விடாக்கண்டர், தோல்வியை ஒப்புக்கொள்ள மறுப்பவர், அப்பாடசாலைகளில் கற்ற மாணவர்களின் பெற்றோரின் கையொப்பங்களைக்கொண்ட மனுவொன்றைத் தயாரிக்கச் செய்தார்.

சிங்களப் பாடசாலைகளாக மாற்றுமாறு அம் மனு கோரியது.

பிரதமரிடம் அம் மனுவைக் கொடுத்த ஈரியகொல்ல அரசாங்கத்தின் அறிக்கையை வாபஸ் பெற வேண்டும் என வற்புறுத்தினார்.

வாலிப முன்னணி எதிர்ப்பு ஊர்வலம் ஒன்றை ஒழுங்கு செய்தது. அதைப் பொலிஸார் தடை செய்தனர். தடையை மீறப் போவதாக வாலிப முன்னணி அறிவித்தது. பொலிசுக்கு உதவுவதற்கு கடற்படை அழைக்கப்பட்டது.

தமிழ் வாலிபரும் பொலிஸாரும் நேருக்குநேர் நின்ற முதலாவது சந்தர்ப்பம் இது.

டட்லி அரசாங்கம் தன் பதவிக் கால முடிவில் தேர்தலை அறிவித்தது. 1970 மே 27ல் வாக்களிப்பு என அறிவித்தது.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி, லங்கா சமாஜக்கட்சி, கம்யூனிஸ்ட் கட்சி ஆகியவற்றின் கூட்டான ஐக்கிய முன்னணி பல வாக்குறுதிகளை மக்கள் முன் வைத்தது.

ஐக்கிய முன்னணியின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் இடம் பெற்ற ஐக்கிய வாக்குறுதிகள் இவை.

ஆளுக்கு இரண்டு கொத்து அரிசி, முன்பு இரண்டு கொத்து அரிசி தான் கொடுக்கப்பட்டது. ஆனால், அரிசி பற்றாக்குறை காரணமாக 1966ல் டட்லி அரசாங்கம் அதை ஒரு கொத்தாகக் குறைத்தது.

1956ல் பண்டாரநாயக்காவால் ஆரம்பிக்கப்பட்ட தேசிய மய நடவடிக்கைகளைத் தொடருதல், பௌத்தத்துக்கு முதலிடம் கொடுத்தல், 1964ம் ஆண்டின் இலங்கை-இந்திய ஒப்பந்தத்தைப் பூரணமாக அமுல் செய்தல். புதிய அரசியல் அமைப்புச் சட்டத்தை உருவாக்குதல். ஐக்கிய முன்னணி தனது பிரசாரத்தில் அரசியல் சட்டச் சீர்திருத்தத்துக்கு முக்கியத்துவம் அளிக்கவில்லை.

ஆனால், தமிழரசுக் கட்சியினர் அரசியல் சட்டச் சீர்திருத்தத்தையே தமது பிரதான பிரசார விடயமாகக் கொண்டனர்.

1970 ஏப்ரல் 4ல் வெளியிடப்பட்ட தேர்தல் விஞ்ஞாபனத்தில் சுதந்திரம் பெற்ற காலம் முதல் தமிழ் பேசும் மக்கள் சமஷ்டி ஆட்சி முறையைக் கோரி வந்துள்ளனர் என்பது சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

தேர்தல் விஞ்ஞாபனம் இவ்வாறு கூறியது:

'இலங்கையின் இன்றைய அரசியல் சட்டம் தமிழ் மக்கள் இரண்டாம் தரப் பிரஜைகள் ஆக்கப்படுவதற்கு வழி வகுத்தது. அதன் மூலம் அவர்களின் தனித்துவத்தையும் அடையாளத்தையும் அழிக்க முயலுகிறது.

'தங்களின் அலுவல்களைத் தாங்களே செய்வதற்கும் அழிவுகளில் இருந்து தமது இனத்தைப் பாதுகாப்பதற்கும் சமஷ்டி அமைப்பு அத்தியாவசியம் என்றும் இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்கள் கௌரவத்துடனும் சிங்கள மக்களுடன் சமத்துவமாக வாழும் பிறப்புரிமையுடனும் வாழ முடியும். சமஷ்டி இலட்சியத்தை அடைவதற்கு நடத்திய பேச்சு வார்த்தைகள், செய்த ஒப்பந்தங்கள் ஆகியவற்றையும் சிங்களக் கட்சிகளுக்கு அரசாங்கம் அமைக்க அளித்த ஒத்துழைப்பைப் பற்றியும் தேர்தல் விஞ்ஞாபனம் எடுத்துரைத்தது.

பண்டாரநாயக்கா-செல்வநாயகம் ஒப்பந்தத்தின் மூலம் சமஷ்டி ஆட்சிக்கான அத்திவாரத்தை இடுவதற்குத் தமிழரசுக் கட்சி முயன்றதாகவும் அதே இலட்சியத்தை அடைவதற்கே மற்றைய முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டதாகவும் விஞ்ஞாபனம் கூறியது. 'சமஷ்டி ஆட்சிக்குக் குறைவான எதுவும் தமிழ் பேசும் மக்களின் அரசியல் பிரச்சினைகளுக்குத் தகுந்த தீர்வாக முடியாது. எமக்கு எத்தகைய கஷ்டங்கள் ஏற்பட்ட போதும் தமிழ் பேசும் மக்களின் விடுதலைக்கும் எமது இலட்சியத்துக்குமான பாதையில் இட்டுச் செல்வோம் என்று நாம் உறுதியளிக்கின்றோம்' என்று விஞ்ஞாபனம் கூறியது.

(தொடரும்)

முஸ்லிம்களுக்கு

## தமிழர்க்கு சமமான அந்தஸ்து: பிரதமர் ரணில் உறுதிமொழி!

''கிழக்கு மாகாண முஸ்லிம்களின் கோரிக்கையான தமக்கென்ற தனி அலகு விவகாரம் தொடர்பாக இப்போது எதையும் பேசமுடியாது. ஆனால், வடக்கு-கிழக்கு மாகாணத்தமிழர்களுக்கான இடைக்கால நிர்வாக சபை ஆரம்பிக்கப்படும் போதே அங்கு வாழும் முஸ்லிம்களுக்கும், தமிழர்களுக்குச் சமமான அனைத்துச் சலுகைகளும் ஊர்ஜிதப்படுத்தப்படும்.'' இப்படிப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க உறுதி அளித்துள்ளார்.

அதே வேளை, வடக்கு-கிழக்கு மாகாண அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு அடுத்த நிதி ஆண்டில் கூடுதலான நிதி ஒதுக்கப்படும் எனவும் அவர் உத்தரவாதம் அளித்துள்ளார். இதனைத் தொடர்ந்து தற்போது நாடாளுமன்றப் பகிஷ்கரிப்பில் ஈடுபட்டுள்ள ஸ்ரீ.ல.மு. காங்கிரஸ் எம்.பிக்கள் நாடாளுமன்றப் பகிஷ்கரிப்பைக் கைவிடுவார்கள் என நம்பிக்கை தெரிவிக்கப்பட்டுள்ளது. கிழக்கு மாகாண ஜம் இயத்துல் உலமாக்கள், அமைச்சர் ரவூப் ஹக்கீமுடன் பிரதமரைச் சந்தித்து பேச்சு நடத்திய பின்னரே இவ்வாறு நம்பிக்கை தெரிவிக்கப்பட்டது.

இப்பேச்சுக்கள் நாடாளுமன்றத்திலுள்ள பிரதமரின் அலுவலகத்தில் நடைபெற்றன. அமைச்சர் ரவூப் ஹக்கீமுடன் கிழக்கு மாகாண ஜம்இயத்துல் உலமாக்கள் சபையின் தலைவர் எஸ்.எச். ஆதம்பாவா தலைமையிலான உலமாக்கள் இந்தப் பேச்சில் கலந்து கொண்டனர்.

சுமார் 45 நிமிடங்கள் நடைபெற்ற பேச்சுக்கள் உணர்வு பூர்வமானதாக அமைந்தன என்றும், பிரதமர் மீது நம்பிக்கை ஏற்பட்டிருப்பதாகவும் உலமாக்கள் சபையின் தலைவர் எஸ்.எச். ஆதம்பாவா கூறினார். பிரதமரைச் சந்தித்த பின் இப்பிரதிநிதிகள் அமைச்சர் ரவூப் ஹக்கீமின் அலுவலகத்தில் செய்தியாளர்களிடம் விளக்கமளித்தனர். ஆனால், ரவூப் ஹக்கீம் அங்கு பிரசன்னமாகியிருக்கவில்லை.

அதேவேளை தமிழர்களுக்கான இடைக்கால நிர்வாக முறை ஆரம்பிக்கப்படும் போது முஸ்லிம்களுக்கும் அதே அளவு சலுகைகள் வழங்கப்படும். இது தொடர்பாக சமகாலத்தில் அறிவிக்கப்படும் என்றும் பிரதமர் உறுதியளித்தார்-என்று கூறப்பட்டது. முஸ்லிம்களுக்கான தனி அலகு பற்றிக் கேட்டபோது, சமாதானப்பேச்சின் போது ஏனைய அமைப்புகளுடனும், முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்களுடனும் கலந்து பேசிய பின்னரே அது பற்றி முடிவு செய்யப்படும் எனப் பிரதமர் உறுதியளித்துள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டது. பிரதமரின் வார்த்தைகளில் தங்களுக்கு நம்பிக்கை ஏற்பட்டுள்ளது என்றும் அவர்கள் கூறினார்கள்.

Edited, Printed, Published and Owned by ARUNAGHALAM GOPALAN, APT. F-17, 5th Floor, P.A. Towers, 33, Halls Road, Egmore, Chennai-8
Printed at Kuralneri Achagam, 4/77, Subethar Garden, Choolaimedu, Chennai-94.

சன நாயகம்-[illegible]சார்பின்மை-நமது பாதை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org